பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 23 சனிக்கிழமை (06-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:101

# நெருக்கடிக்குச் சுமுகமான தீர்வு; நிலைமையை தலைவர் விளக்குவார்

## மட்டு.-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்6

**மட்டக்களப்பில் தோன்றியுள்ள இயக்க நெருக்கடி குறித்து தலைவர் பிரபாவுடன் விவரமாகக் கலந்தாலோசனை நடத்தியிருக்கின்றோம். நிச்சயமாகச் சொல்கிறேன் நெருக்கடிக்குச் சுமுகமான தீர்வு காணப்படும். தலைவர் மிக விரைவில் உண்மை நிலையைத் தமிழ் மக்களுக்கும், உலகிற்கும் அறிவிப்பார். இப்படி உறுதிபடக் கூறினார் மட்டக்களப்பு - அம்பாறை விசேட தளபதி ரி.ரமேஷ்.**

கேணல் கருணாவின் பிரதித் தளபதியாக இருந்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளை வழி நடத்துபவர் தளபதி ரமேஷ் என்பது குறிப்பிடத்தக்கது.

தாமும், பிரதேசத் தளபதிகளும் பல்வேறு பிரிவுகளின் தலைவர்களும் வன்னியில் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்து அவருடன் விரிவான பேச்சுக்கள் நடத்தி நிலைமைகளை அவருக்குத் தெளிவுபடுத்தினோம். என்று தளபதி ரமேஷ் சொன்னார். பிரச்சினையை நிதானமாகவும் ஆக்கபூர்வமாகவும் அணுக முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும், சுமுகமான தீர்வு பற்றிய அறிவிப்பு எந்த நேரத்திலும் வரலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில், கிளிநொச்சியில்

(18ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண புலிகள் அணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்த பிரச்சினை இப்போது எழவில்லை

### ஐ.தே.க. தவிசாளர் மலிக் கூறுகிறார்

கொழும்பு,மார்ச்6

புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண அணி பிரிந்து சென்றிருப்பதாகக் கூறப்படுவது உள்வீட்டுப் பிரச்சினை. இது தொடர்பாக நாம் எதுவித கருத்தும் கூறமுடியாது. புலிகளின் கிழக்கு மாகாண அணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்வது குறித்த பிரச்சினை இப்போது எழவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார். கொழும்பு கேம்பிரிட்ஜ் டெரஸிலுள்ள ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களை கட்சித் தலைமைப்பீடம் இன்று கொழும்புக்கு அழைத்துள்ளது. அவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னரே அம்மாவட்டத்தில் எமது வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகுவது குறித்து ஆராய முடியும். ஏனைய எமது வேட்பாளர்கள் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளனர்.

- இவ்வாறு அவர் கூறினார்.(ம-க)

## புலிகள் இயக்க அமைப்புகள் எதன் தலையீடுமின்றி நேரடியாக பிரபா தலைமையில் இயங்க அனுமதி கோரி கேணல் கருணா கடிதம்!

### இனி தென்தமிழீழ மக்களுக்காகக் கடமை செய்யவே விருப்பம் எனத் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச்6

புலிகள் இயக்க அமைப்புகள் எதன் தலையீடுமின்றி நேரடியாக உங்கள் தலைமையில் சுதந்திரமாக இயங்க தயவுசெய்து அனுமதியுங்கள் என்று கோரி வடக்கே வன்னியில் உள்ள தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு கிழக்கில் மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலையிலிருந்து கேணல் கருணா கடிதம் எழுதியிருக்கிறார். இனிமேல் தென்தமிழீழ மக்களுக்காகக் கடமை செய்யவே தாம் விரும்புகிறார் என்றும் கருணா தனது கடிதத்தில் பிரபாவுக்குத் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

தேசியத் தலைவர்,
தமிழீழம்.
02.03.2004

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களுக்கு!

தற்போது ஏற்பட்டுள்ள சிக்கலான சூழ்நிலை தொடர்பாக எங்கள் நிலைப்பாட்டை தெளிவாக்குவதற்காக இக்கடிதத்தை எழுதுகின்றேன். பொதுவாக எமது போரியல் வரலாற்றில் எங்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம் பெரும் பங்காற்றியுள்ளது என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அதுமட்டுமல்ல, பல படுகொலைகளையும், அழிவுகளையும் சந்தித்துள்ளது.

இதுவரை நடந்த போராட்டத்தில் 4,550 மட்டக்களப்பு, அம்பாறைப் போராளிகள் களத்தில் வீரச்சாவடைந்துள்ளார்கள். இவர்களில் கிட்டத்தட்ட 2,248 வீரர்கள் உங்கள் கட்டளையை ஏற்றுவந்து யாழ்., வன்னி மண்ணில் வீரச்சாவடைந்துள்ளனர்.

நாங்கள் வன்னிக் களமுனையில் போரிட்டுக்கொண்டிருந்த வேளைகளிலெல்லாம் பல பல சிக்கல்களையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டு வந்திருக்கின்றோம். இவையாவும் உங்களுக்குத் தெரிந்த விடயமேயாகும்.

இருந்தாலும், உங்கள் மீதுள்ள பக்தியின் காரணமாக எல்லாவிடயங்களையும் சமாளித்தே வந்திருக்கின்றோம். ஆனால், தற்போது இந்தப் பிரச்சினை பெரிதாகியுள்ளது. இதற்கான காரணத்தையும் தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

குறைந்தது 30இற்குமேற்பட்ட தமிழீழத்துறைப் பொறுப்பாளர்கள் இதுவரையில் உங்களால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் எவருமே மட்டக்களப்பு, அம்பாறையைச் சேர்ந்தவர்கள் கிடையாது. போர் உக்கிரமாக நடைபெறும் காலங்களில் இதை இங்குள்ள மக்களும், போராளிகளும் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் தற்போது ஏற்பட்டுள்ள இந்த அமைதியான சூழ்நிலையில் இதை அனைவரும் அவதானித்து பல கேள்விகளை எழுப்புகின்றார்கள். இதற்கு நாங்கள் பதில் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

அதுமட்டுமல்ல இதுபோன்ற வெளிமாவட்டத் தமிழீழத்துறைப் பொறுப்பாளர்கள் இங்கு வேலை செய்வதால் இங்கு பல சிக்கல்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அவர்களால்

(18ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறையில் நேற்று கைதிகள் குழுக்கள் கடும் மோதல்

கொழும்பு,மார்ச்6

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இரு கைதிக் குழுக்களுக்கிடையே நேற்று ஏற்பட்ட மோதலில் பத்துக்கும் மேற்பட்ட கைதிகள் காயமுற்றுள்ளனர்.

சுமார் முந்நூறுக்கும் அதிகமான கைதிகள் மோதலில் ஈடுபட்டனர். மோதலை அடக்கப் பொலீஸாரும் இராணுவத்தினரும் அழைக்கப்பட்டனர். பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. மோதலில் ஈடுபட்ட கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றும் நடவடிக்கையில் சிறைச்சாலை நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

சுமார் மூன்று மணிநேரம் மாறி மாறி மோதல் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது- என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-க)

## வாக்குவேட்டைக்குச் சென்ற வேட்பாளர்கள் விரட்டியடிப்பு!

கொழும்பு,மார்ச்6

அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் அரசியல்வாதிகள் அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்து வந்ததால் அப்பகுதி மக்கள் பொதுத் தேர்தலை பகிஷ்கரிப்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர். அங்கு வாக்கு வேட்டைக்குச் சென்ற சில வேட்பாளர்கள் மக்களால் திருப்பி அனுப்பப்பட்டனர். சிலர் விரட்டியடிக்கப்பட்டனர்.

சமமாந்துறை பிரதேச செயலகத்தின் கீழ் இருந்துவந்த இறக்காமம், தனிப் பிரதேச செயலகப் பிரிவாக உருவாக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் அதற்கான எல்லை நிர்ணயம் செய்யப்படவில்லை. அக்கரைப்பற்றுடனான எல்லையை அடையாளப்படுத்துவதில் நிலவி வருகின்ற சர்ச்சையே எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தல் வெளிவருவதைத் தாமதப்படுத்தியிருக்கிறது.

இந்த விவகாரத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் - அமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்பட இப்பகுதி எம்.பிக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதனைத் தீர்த்துத் தருமாறு இறக்காமம் பள்ளிவாசல்கள் சம்மேளனம் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்தன. ஆனால், செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று, அது அரசியல்வாதிகளால் அசட்டை செய்யப்பட்டு வந்தது.

அதன் காரணமாக இறக்காமம் பள்ளிவாசல்கள் சம்மேளனம் கடந்த மாதம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது. எல்லைப் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கும்வரை தேர்தல்களைப் பகிஷ்கரிப்பது என்பதே அத்தீர்மானமாகும்.

அதன்படி, இறக்காமம் பிரதேச எல்லைக்குள் கட்சிகள் மற்றும் வேட்பா

(18ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் தினமும் தொடர்கின்றன

கொழும்பு,மார்ச்6

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 18 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தேர்தல் பொலீஸ் செயலகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 9 முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 4 முறைப்பாடுகளையும் தெரிவித்துள்ளன என்று சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மொனறாகலையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் கிளை அலுவலகம் கற்கள் கொண்டு தாக்கப்பட்டுள்ளது எனவும், இந்தத் தாக்குதலில் அருகில் இருந்த இரு வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பகுதி வாக்காளர்கள் நீதிமன்றம் செல்ல ஆயத்தம்!

கொழும்பு,மார்ச்6

விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பகுதிகளில் நிரந்தரமாக வசித்து வரும் வாக்காளர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தங்கள் பகுதிகளிலேயே வாக்களிக்கும் தமது ஜனநாயக உரிமையைக் கோரி உயர் நீதிமன்றம் செல்ல இருக்கிறார்கள். வாக்காளர் குழு ஒன்று கொழும்பு வந்து சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசனை நடத்திச் சட்ட நடவடிக்கைக்கு ஆவன செய்வதில் ஈடுபட்டிருக்கிறது.

பெரும்பாலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நடத்துவது சாத்தியப்படாது என்ற நிலைப்பாட்டுக்கே தேர்தல் ஆணையாளர் வந்துவிட்டார். அதற்கு அவர் கூறும் காரணங்களில் சில வருமாறு:-

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைத்து அங்கே வாக்களிப்பை நடத்துவதற்கு வேண்டிய பாதுகாப்பு இலலை. நடைமுறைச் சிக்கல்களும் இருக்கின்றன. சில அரசியல் கட்சிகளும் அங்கே வாக்களிப்பு நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அங்கே நீதியாகவும், சுதந்திரமாகவும், முறைகேடுகள் இன்றியும் வாக்களிப்பு நடைபெற முடியாது என்று அஞ்சுகின்றன என்கிறார் ஆணையாளர்.

புலிகளின் பகுதிகளுக்கு அருகே அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைக்கலாம். புலிகள் பகுதி வாக்காளர்கள் அங்கே சென்று வாக்களிக்கலாம் என்று மாற்று யோசனை கூறப்படுகின்றது. வாக்காளர்கள் அங்கே சென்று வாக்களிக்கத் தாம் உதவத் தயார் என்று படைத்தரப்பும் உறுதி அளிக்கின்றது.

அந்த உறுதி காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை வாக்காளர்களுக்கு

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் வெள்ளிவிழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவக் கண்காட்சி நேற்று வெகு சிறப்பாக ஆரம்பமானது. கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பட்ட மேற்படிப்பு நிறுவனப் பணிப்பாளர் திருமதி லலிதா மென்டிஸ் கண்காட்சியை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், மருத்துவபீடாதிபதி டாக்டர் சிவபாலன், முன்னாள் பீடாதிபதிகளான பேராசிரியர் பரமேஸ்வரன், பேராசிரியர் ராஜேந்திரப் பிரசாத், பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் உட்படப் பெரும் எண்ணிக்கையான பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஏனையோரும் கலந்துகொண்டனர். கண்காட்சியின் ஆரம்ப நாளான நேற்றுப் பெரும் எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் அதனைப் பார்வையிட்டனர். *(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# 9 கட்சிகள், 6 சுயேச்சைக் குழுக்கள் புத்தளம் மாவட்டத்தில் போட்டி

## ஒரு பெண் உட்பட ஆறு தமிழ் வேட்பாளர்கள் களத்தில்

வடமேல் மாகாண சபைக்கான தேர்தலில் புத்தளம் மாவட்டத்திற்கான வேட்பு மனுக்கள் நேற்று புத்தளம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எச்.எம்.ஹேரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மொத்தமாக ஒன்பது அரசியல் கட்சிகளும், ஆறு சுயேச்சைக் குழுக்களும் இம்மாவட்டத்தில் போட்டியிடுகின்றன.

அரசியல் கட்சிகளாகிய ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு புதியஇடதுசாரி முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி, முஸ்லிம்கட்சி, ருகுணு மக்கள் கட்சி, சிங்களேயே மஹேசம் மத பூமிபுத்திர, தேசிய அபிவிருத்தி முன்னணி, ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு ஆகியனவே வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

16 உறுப்பினர்கள் புத்தளம் மாவட்டத்தில் இருந்து வடமேல் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்படுவார்கள். மொத்தமாக 285 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒரு தமிழ்ப் பெண் உட்பட ஆறு வேட்பாளர்களும், 99 முஸ்லிம் வேட்பாளர்களும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் 4,50,057 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். வேட்பு மனுத்தாக்கல் நேற்று நண்பகலுடன் முடிவுற்றது.

# கொழும்புப் பிரதேசத்தில் தொடர்ந்து குடிதண்ணீர் விநியோகம் பாதிப்பு!

கொழும்பு,மார்ச்6

கொழும்புப் பெரும்பாகத்திற்கு குடிதண்ணீர் விநியோகிப்பது மிக சிரமமான காரியம் என்று தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

களனி நதியின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்திருப்பதால் அம்பத்தளை சுத்திகரிப்பு நிலையத்துக்குள் உவர் நீர் புகுந்திருப்பதாலேயே இந்த நிலை தோன்றியுள்ளது. இதனால் நீர் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. வரட்சி நிலவும் காலங்களில் கடல்நீர் ஆற்று நீருடன் கலப்பதைத் தடுப்பதற்காக நதிக்குக் குறுக்கே நிரந்தர அணைக்கட்டு கட்டும் நீண்டகாலத்திட்டம் இன்னமும் முழுமை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அமுல்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்தை சுற்றாடல் அதிகார சபை இன்னமும் அங்கீகரிக்கவில்லை என்று சபையின் துணைத் தலைவர் இ.ஏ.மெத்தானநத தெரிவித்துள்ளார்.

அதேவேளை, விநியோகக் குழாய்களின் குறைந்த அழுத்தம் காரணமாகவும் பொதுமக்கள் தண்ணீரைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறான இடங்களுக்கு பவுஸர்கள் மூலம் தண்ணீர் விநியோகிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைகள், சிறைச்சாலை போன்றவற்றிற்கும் தண்ணீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## திருமுறை மன்ற நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்6

அகில இலங்கைத் திருமுறைமன்றத்தினால் பௌர்ணமி தினத்தில் நடத்தப்பட்டுவரும் அகத்தியா தேவாரத் திரட்டு முற்றோதல் மற்றும் பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் மன்றத் தலைவர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

# டயர் எரிப்பு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஹக்கீமின் 'மரதன்' கூட்டம் அ' சேனையில்!

அட்டாளைச்சேனை,மார்ச்6

அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தையும், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வருகையையும் எதிர்த்து பிரதான வீதியில் டயர்கள் எரிக்கப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரும், கிழக்கு நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் முன்னாள தலைவருமான மசூர் சின்ன லெவ்வை தலைமையில் அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்கம் அருகே கூட்டம் நடைபெற்றது. இரவு 8மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டம் அதிகாலை 2மணிவரை தொடர்ந்தது.

டயர் எரிப்பு எதிர்ப்பையடுத்து இப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில், அம்பாறை, சம்மாந்துறை ஆகிய இடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான பொலீஸாரும், விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புக்கு வரவழைக்கப்பட்டனர்.

கண்ணீர்ப்புகை பொலீஸ் குழுவினரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அட்டாளைச்சேனை பிரதான வீதிகள், உள்வீதிகளில் படையினர் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அசம்பாவிதங்களையடுத்து உள்ளூர்ப் பொதுமக்கள் தொலைவிலிருந்து கூட்டத்தை அவதானித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, பொத்துவில், நிந்தவூர் போன்ற பிரதேசங்களிலிருந்து வருகை தந்த ஆதரவாளர்கள் கூட்ட மேடைக்கு முன்னால் நின்றனர்.

டயர் எரிக்கப்பட்டதையடுத்து அட்டாளைச்சேனை தபால்கந்தோரடியில் இரு கோஷ்டியினருக்குமிடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. அவ்விடத்திற்கு விரைந்த அக்கரைப்பற்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.எம்.ஐ.எம்.புகாரி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். எரிக்கப்படும் ரயர்கள் அக்கரைப்பற்று பொலீஸ் நிலைய நீர்த்தாங்கி லொறிமூலம் அணைக்கப்பட்டு பொதுமக்கள் உதவியுடன் பொலீஸாரால் அகற்றப்பட்டன. விசேட அதிரடிப் படையினரின் இரண்டு கவச வாகனங்களும், 4 ட்ரக், லொறிகள், அம்புலன்ஸ் வண்டி, பல பொலீஸ் ஜீப்புகள் என்பன கூட்டத்தின்போது கடமையில் ஈடுபடுத்தப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

டயர்கள் எரிக்கப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டாலும் கூட்டம் இறுதி வரை நடைபெற்றது. இக்கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உட்பட அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மார்ச்6

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணி முதல் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.ரோஹான் இராஜசிங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை ஒலிம்பிக் தீபம் ஏற்றலுடன் ஆரம்பமாகிறது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விளையாட்டு விழா எதிர்வரும் 28ஆம் திகதிவரை யாழ். சென் அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஆரம்ப விழாவில் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் மோட்டார் சைக்கிள் பவனியாக ஒலிம்பிக் தீபத்தை ஏந்திவருவர்.

நாவாந்துறை சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பமாகும் ஒலிம்பிக் தீபம் ஏந்தியபவனி சத்திரச்சந்தி, கே.கே.எஸ். வீதி, முனியப்பர் வீதி என்பவற்றினூடாக திறந்தவெளி அரங்கை வந்தடையும்.

அங்கிருந்து மணிக்கூட்டு வீதி, வேம்படி வீதி, இரண்டாம் குறுக்குத் தெரு வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி ஊடாக முலவைச் சந்தியை வந்தடையும்.

அதிலிருந்து மடம் சந்தி வீதி வழியாக பாங்ஷால் வீதி, சின்னக்கடை வீதி, குருநகர் அண்ணா சிலையடி சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீதி வழியாக குருசோ வீதியை அடைந்து ஈச்சமோட்டை வீதி வழியாக பாஷையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தை வந்தடையும்.

அங்கு வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.மரியதாஸ் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைப்பார்.

அதனைத் தொடர்ந்து விளையாட்டுக்கள் நடைபெறும். (5)

★ ★ ★

இளவாலை மார்ச்6

இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம.அன்ரனி சாந்தா தலைமையில் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆசுப்பிரமணிய சர்மா கலந்துகொள்ளவுள்ளார். (10-48)

★ ★ ★

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். (ரி)

★ ★ ★

பருத்தித்துறை மாதனை மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கண்ணகை அம்மன் விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்துகொள்வார். (118-ரி)

★ ★ ★

பருத்தித்துறை மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ்.மகேஸ்வரராசா தலைமயில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார். (10-117)

## கௌரவிப்பு விழாக்கள்

தென்மராட்சி,மார்ச்6

மந்துவில் கிழக்குப் பிரிவில் பத்து வருடங்களாக பதில் கிராம அலுவலராகக் கடமையாற்றி கல்வயல் பிரிவுக்கு இடமாற்றம் பெற்ற வை.இராசரத்தினத்திற்கு மந்துவில் கிழக்கு பிரிவு மக்கள் நடத்தும் பிரிவுபசார விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன், யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், யாழ்.மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி, சேவா லங்கா நிறுவன யாழ்.மாவட்டப் பணிப்பாளர் இ.ஆனந்தராசா ஆகியோர் கலந்துகொள்வர். (எ-117)

★ ★ ★

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழா இன்று சனிக்கிழமை நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (எ)





அகில இலங்கைச் சைவ மாநாடு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையுரை நிகழ்த்துவதையும் பண்டிதை பொன். பாக்கியம் சிறப்புரை நிகழ்த்துவதையும் மாநாட்டில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# சைவ மாநாடு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ். சைவ பரிபாலன சபையினர் ஏற்பாடுசெய்த மூன்று நாள் அகில இலங்கைச் சைவமாநாடு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுஆரம்பமானது.

மாநாட்டின் முன்னோடி நிகழ்வாக நேற்றுக்காலை வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்றன. சமயப் பெரியோர்கள், அறிஞர்கள் எனப்பலரும் இதில் கலந்துகொண்டனர். பின்னர், யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் மாநாடு ஆரம்பமானது. அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் வாழ்த்துரையை அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் தலைவர் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்களும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கருத்துக்களும், சைவசித்தாந்த பண்டிதர்களுக்கான பட்டமளிப்பும் நடைபெற்றது.மாலை நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றன. (எ)

*(மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்)*

## நாரந்தனையில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

கொழும்பு முகத்துவாரம் தெற்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் தீவக லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவமுகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நாரந்தனை றோ.க. தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும் மற்றும் பொது வைத்திய பரிசோதனையும் இரத்த அழுதத்ப் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை என்பன இடம்பெறவுள்ளன. (ஒ-ரி)

# யாழ். மருத்துவபீட மருத்துவக் கண்காட்சி

## தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது இக்கண்காட்சி மிகவும் சிறப்பான ஒழுங்கமைப்பு

**கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்ட மேற்படிப்பு நிறுவன பணிப்பாளர் திருமதி லலிதா மெண்டிஸ்**



மருத்துவ பீட மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கண்காட்சி மிகவும் சிறப்பான முறையில் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை ஒழுங்கமைப்பதில் மருத்துவ மாணவர்கள் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டுள்ளனர் என்பது தெரிகின்றது.

அவர்கள் இக் கண்காட்சியில் பார்வைக்கு வைத்துள்ள பெருமளவான மாதிரி உருக்களை சிறந்த முறையில் அச்சொட்டாக வடிவமைத்துள்ளனர். இது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இக் கண்காட்சி பாடசாலை மாணவர்களுக்கு - குறிப்பாக உயர்தர வகுப்பில் உயிரியல் விஞ்ஞானப் பாடம் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடியது. அது மட்டுமன்றி சாதாரண மக்களுக்கும் பிரயோசனமானது. எவ்வாறெனில் பொதுமக்களுக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பாகவும், நோய்கள் ஏற்படாது தவிர்த்துக் கொள்ளல் தொடர்பாகவும் மற்றும் நோய்கள் ஏற்பட்டால் அவற்றுக்கான சிகிச்சை முறைகள் தொடர்பாகவும் வேண்டிய அறிவை இக் கண்காட்சி வழங்குகின்றது.

தென்னிலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது இக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் விசேடமான முறையில் ஒழுங்கமைத்துள்ளமையை நான் பாராட்டுகின்றேன்.

தற்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் தமது செயற்பாடுகளுக்கு கணனியையும், கணனி மென்பொருளையும் பயன்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும் அவ்வித ஏற்பாடுகள் மூலமே இக் கண்காட்சியை ஒழுங்கமைத்துள்ளனர்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் யாழ்ப்பாணம் வந்துள்ள நான் இத்தடவை விமான பயணமூலம் வந்துள்ளேன். கடந்த சில ஆண்டு காலமாக நாட்டின் அசாதாரண சூழ் நிலை காரணமாக என்னால் யாழ்ப்பாணத்திற்கு வர முடியவில்லை. எனக்கு இங்கு வைத்தியத்துறை நண்பர்கள் நிறையவே உள்ளனர். இப்போது யாழ்ப்பாணம் பல முன்னேற்றங்களை கண்டுள்ளது.

## எமது மாணவர்களின் நிபுணத்துவத்தை உலகம் அறிய ஒரு வாய்ப்பு

**யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்.**



இந்தக் கண்காட்சி இரண்டு மூன்று வகையில் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. மருத்துவ பீடத்தை ஆரம்பித்து 25 வருட நிறைவில் இது நடைபெறுகின்றது. எமது பல்கலைக்கழகம் சமூகத்திற்கு என்ன செய்கிறது என்பதையும் இது தெளிவுபடுத்துகிறது. எமது சமூகத்திற்கும் மருத்துவ பீடத்திற்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. இங்கு படித்து வைத்தியர்களாக வெளியேறுவோர் பல்வேறு இடங்களிலும் பணியாற்றுகிறார்கள்.

சமூகத்தில் உள்ளவர்கள் வைத்திய ரீதியான முழு அறிவையும் பெறுவதற்கு மருத்துவ மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சி பெரிதும உதவும். இதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை. எமது வைத்திய நிபுணர்களினதும் மருத்துவ மாணவர்களினதும் நிபுணத்துவத்தை உலகம் அறியக்கூடிய வாய்ப்பாகவும் இக்கண்காட்சி அமைகின்றது.

தென்னிலங்கையிலிருந்து கண்காட்சியைத் திறந்து வைக்க வருகை தந்த பேராசிரியர் திருமதி லலிதா மெண்டிஸ் இக்கண்காட்சியைப் பார்த்த பொழுது இந்தப் பல்கலைக்கழகம் தென்னிலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும் போது அவற்றுக்கு நிகராகச் செயற்படுகின்றது என்று கூறினார்.

எமது மாணவர்களின் ஆளனி சிறியளவாக இருந்தாலும் அவர்களுடைய ஆளுமையும், விடாமுயற்சியும், ஆர்வமும்தான் இக்கண்காட்சியைக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்ய உதவியது. எமது தொழிற்பாடுகள் அனைத்தும் வேறு பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது அவற்றுக்குச் சமமாக உள்ளது. இதற்குக் காரணம் எமது விடாமுயற்சி.

குடாநாட்டு மக்கள் இந்தக் கண்காட்சியைத் தவறாது பார்க்கவேண்டும். அதன் மூலம் அவர்கள் தமது அறிவைப் பெருக்கிக் கொள்ளமுடியும். தமக்கு வரும் நோய்களைத் தடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

அத்துடன் எமது மக்களின் மருத்துவ ரீதியான தேவைகளை மருத்துவ மாணவர்கள் இனங்காண்பதற்கு இக்கண்காட்சி துணைபுரியும்.

## உயிரியல் விஞ்ஞானம் பயிலும் மாணவருக்கு இக் கண்காட்சி மிகவும் அவசியமானது

**புனித பத்திரிசியார் கல்லூரி கணித பாட ஆசிரியர் எஸ்.ஜெயக்குமார்**



நீண்ட காலமாக எமது மண்ணில் இப்படியானதொரு அரிய கண்காட்சி நடைபெறவில்லை. எமது மாணவர்களும் இப்படியானதொன்றை இப்போது தான் காண்கிறார்கள். அந்த வகையில் இக்கண்காட்சியை ஏற்பாடு செய்த யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் பாராட்டுக்குரியது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள அநேகமான பல பகுதிகளை மாணவர்கள் இப்போதுதான் புதிதாகக் காண்கிறார்கள், கேட்கிறார்கள். ஜி.சீ.ஈ. உயர் தரப்பிரிவில் உயிரியல் விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் இதனை தவறவிடாமல் பார்வையிடவேண்டும். அவர்கள் பாடசாலையில் தெரிந்து கொள்ளாத விடயங்கள் பல இங்கு உள்ளன. இதனை விட பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகள் குறைவு அவற்றை மாணவர்கள் இங்கே முழுமையாகக் காணக்கூடிய நிலை உள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்களும் பொழுதுபோக்காக அல்லாமல் மிக அவதானமாகக் கண்காட்சியைப் பார்வையிடுவதுடன் அது பற்றிய விளக்கங்களையும் கேட்டறிகின்றனர். எமது மாணவர்களுடைய கல்வி ஆர்வத்தை தூண்டக்கூடிய விதத்திலும் இது உள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவருக்கு மருத்துவ பீட மாணவர்கள் வழங்கும் விளக்கங்களும் மிகவும் தெளிவாக உள்ளன. அவர்களுடைய கண்காட்சி ஏற்பாடுகளும் திருப்தியாக உள்ளன.

## மக்களும் மாணவர்களும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

**கண்காட்சி ஏற்பாட்டுக்குழுத் தலைவர் காண்டீபன்**



எமது மருத்துவ பீடத்தின் வெள்ளி விழாவை ஒட்டி மக்களுக்கு பிரயோசனமான ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்று எமது மாணவர்களின் விருப்பத்திற்கு இணங்க இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை எமது மருத்துவ பீடம் தனித்துவமான நிகழ்வாக நடத்துகின்றது.

மருத்துவ மாணவர்களும் போதனாசிரியர்களும் இணைந்து ஏற்பாடு செய்தனர். இக்கண்காட்சி பாடசாலை மாணவர்களுக்காகவும் மக்களுக்காகவும் மருத்துவ பீட மாணவர்கள் அமைத்துக் கொடுத்த களம்தான் இது. இதனை மக்களும் மாணவர்களும் சரியாகப பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இக்கண்காட்சியை நடத்துவதற்கான அடித்தளத்தை ஆறு மாதத்திற்கு முன்னர் இட்டிருந்த போதும் இறுதிக்கட்டச் செயற்பாடுகள் கடந்த ஒரு மாத காலமாகத்தான் இடம்பெற்றன. ஆயினும் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் கண்காட்சிகளுக்கு நிகராக நாம் இதனை ஏற்பாடு செய்தது ஒரு மாபெரும் வெற்றி என்று தான் கருதவேண்டும். இப்படியான கண்காட்சிகள் நடைபெறுவது எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மிகமிகக் குறைவு.

நடந்தாலும் இவ்வளவு பிரமாண்டமானதாக அது நடைபெறுவதில்லை. எனவே இங்குள்ள ஒவ்வொரு பிரிவுகளையும் எமது மக்கள் பார்வையிட வேண்டும். இதனைக் தவறவிடக் கூடாது. இக்கண்காட்சியை ஏற்பாடு செய்வதற்கு எமது மருத்துவ மாணவர்கள் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது.அவர்களின் அயராத முயற்சியின் விளைவை இன்று மக்களும் மாணவர்களும் பார்வையிடுகின்றார்கள். இக்கண்காட்சியின் கால அவகாசம் நீடிக்கப்பட வேண்டும் என்கின்ற நிலை ஏற்படும் பட்சத்தில் எமது மாணவர்களும் அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

*நேர்காணல்: தேவா*

# மூலிகைகள் பற்றியும் அவற்றின் அருமை குறித்தும் உங்களுக்குத் தெரிந்தது இவ்வளவு தானா?

## மருத்துவபீடக் கண்காட்சியைப் பார்த்து மூக்கில் விரலை வைக்காதீர்கள்!

மனிதனுக்கு ஏற்படும் பல்வேறுபட்ட உடல், உளரீதியான பிரச்சினைகளுக்கு அவனது அன்றாட பழக்க வழக்கங்களும், மாசுபட்ட சூழலும், சீரற்ற உணவுப் பழக்கமுமே காரணமாக அமைகின்றது. ஆயினும், இவை பற்றிய தெளிவான - விரிவான அறிவு எமது மக்களிடம் இல்லை. இருந்தாலும் அது மிகமிகக்குறைவு என்று தான் கூறவேண்டும்.

இதுபற்றி எமது மக்கள் பூரணமாக - சந்தேகமின்றி - அறிந்துகொள்வதற்கென யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் நடத்தும் மருத்துவக் கண்காட்சியில் சித்தமருத்துவத்துறை மாணவர்களும் ஓர் அலகினை அமைத்துள்ளார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்த அலகு எமது நாளாந்த வாழ்வுடன் பின்னிப்பிணைந்ததாக அமைகின்றது. ஏன் என்று கேட்கின்றீர்களா?

அன்றாட உணவில் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டிய மரக் கறிகள், தாவரங்கள் மற்றும் எமது நோய்களுக்கு சூழலில் உள்ள மூலிகைகளைக் கொண்டு எவ்வாறு சிகிச்சை அளிப்பது என்பது இந்த அலகில் தான் அடங்கியுள்ளது.

மூலிகைகள் பற்றியும், அவற்றின தயாரிப்புக்கள் பற்றியும் அறிய விரும்புவோருக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம் என்கிறார்கள் சித்தமருத்துவத்துறை மாணவர்கள்.

நோய் வருமுன் காத்தல், நோயினால் நலிந்த உடலை உணவின் மூலம் எவ்வாறு தேற்றுவது, உடலின் நிர்ப்பீடன சக்தியை உணவினாலும், மூலிகை மருந்துகளாலும் எவ்வாறு அதிகரிப்பது என்பன இந்த அலகின் முக்கிய அம்சங்களாக அமைகின்றன.

மூலிகைகளை எவ்வாறு இனங்கண்டு கொள்வது, அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பன தொடர்பாகவும் மக்களுக்குப் பூரண விளக்கமளிக்க சித்தமருத்துவ மாணவர்கள் தயாராக உள்ளனர்.

இந்த அலகில் நான்கு பிரிவுகள் அடங்கியுள்ளன.

- ★ மூலிகைகள்
- ★ மருத்துவத் தயாரிப்புகள்
- ★ உணவும் போசாக்கும்

சுயாதீன மூலகங்கள் (Free Radical)

மூலிகைகள் என்ற தலைப்பின் கீழ் மூலிகைகளும் அவற்றின் தாவரவியல் பெயர், அவற்றின் பயன்பாடு, அதிகமாகக் காணப்படும் இடம், இவை உடலில் எவ்வாறு செயற்படுகின்றன என்பன தொடர்பாக விளக்கமளிக்கப்படும். அத்துடன் இவை தொடர்பான வீடியோ படக்காட்சியும் இடம் பெறும்.

மருத்துவத் தயாரிப்புக்கள் என்ற தலைப்பின் கீழ் தற்போதைய உலகில் மூலிகை மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி, அவற்றில் உள்ள வேதியல் பொருள்களை எடுத்து எவ்வாறு மருந்துகள் தயாரிப்பது, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் உள்ள மூலிகை ஆராய்ச்சி நிலையங்களின் ஆய்வாளர்கள் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு வந்து இங்குள்ள மூலிகைகள் பற்றி ஆராயவது ஏன் என்பன தொடர்பாகவும் பூரண விளக்கம் வழங்கப்படவுள்ளது.

மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட பற்பொடி, குளியல்பொடி, காலைப்பானம், மென்பானம் மற்றும் வாத, தோல், சுவாச நோய்களுக்கென தயாரிக்கப்பட்ட மருந்துக்கள் என்பவற்றையும் இங்கு பார்க்க முடியும்.

உணவும் போசாக்கும் என்ற தலைப்பின் கீழ் உணவே மருத்துவம் என்பதற்கு இணங்க முற்கால மக்களின் தேக ஆரோக்கியத்துக்கு துணையாக அமைந்த உணவுப் பொருள்கள் பற்றியும் அவற்றின் போசனைப் பெறுமானம் பற்றியும் மக்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்தப்படும்.

**தொகுப்பு: தேவா**

சுயாதீன மூலகங்கள் (Free Radical) என்னும் தலைப்பில் கலத்தில் உள்ள நிறமூர்த்தங்கள், கலமென்சவ்வு, புரதம், தொழும்பு என்பவற்றை சுயாதீன மூலகங்கள் எவ்வாறு அழிக்கின்றன, நிறமூர்த்தம் அழிவதால் ஏற்படும் நோய்கள், இந்த மூலகத்தின் பாதிப்பை எவ்வாறு தடுக்கலாம் என்பதற்கெல்லாம் விளக்கமளிக்க சித்த மருத்துவ மாணவர்கள் தயார்நிலையில் உள்ளனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரப்பிரிவில் கற்கும் மாணவர்கள் மூலிகை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்கு பல அரிய கருத்துக்களை இந்த அலகைப் பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மூலிகை சம்பந்தமான பூரண அறிவைப்பெற யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு விரையுங்கள்!

**யாழ். பல்கலை. மருத்துவபீடத்தின் வெள்ளிவிழாவையொட்டி மாபெரும் மருத்துவக் கண்காட்சி**
5முதல் 9ஆம் திகதி வரை
ஊடக அனுசரணை:- உதயன்

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 - 09 - 1924



இறப்பு 12 - 03 - 1998

### அமரர் அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன்

திதி: பூரணை (06.03.2004)

ஆண்டுகள் ஆறு சென்றதைய்யா
ஆறுமோ எம்மனம் தேறவில்லையய்யா
ஆறுமுகன் தாள் சென்ற நாள் தொட்டு
மாறாத துயருடன் தவிக்கிறோம் அப்பா!
மற்றுமோர் பிறவியெடுத்து எம்முடன் இம்
மண்ணிலத்தில் வந்துசேரப்பா
மன்னவா நின் நினைவுடன் தினம்
மன்றாடுகிறோம் இறைவன் தாளையே!

மஞ்சத்தடி முருகன் கோயிலடி,
இணுவில்.

உங்கள் நினைவில்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29310)(34-21-12-13)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில்
சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றும்
**திருமதி தர்சினி கிருஸ்ணகுமார்**
அவர்களின் செல்வப் புதல்வன்

### கிருஸ்ணகுமார் வினோதரன்

03. 03. 2004 இல் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருடன் நாமும் சேர்ந்து துயர்பகிர்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி **செல்வன் வினோதரனின்** ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலி.மேற்கு, சங்கானை.

(C/33917)(34-21-12-13)

## 15 பயனாளிகளுக்கு சுயதொழில் கடன்

வலி.தென்மேற்கு,மார்ச்6

பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கிச் சங்கம் சமுர்த்தித் திட்டத்தில் இணைந்துள்ள 15 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக் கடனை வழங்கியுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் முதல் தடவையாக இக்கடனுதவி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 3 ஆயிரத்து 680 பயனாளிகள் சுயதொழில் முயற்சிக் கடன் கோரிச் சங்க அலுவலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனா என்றும், இவர்களுக்கு காலக்கிரமத்தில் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-10-135)

## விபத்தில் காயம்!

தென்மராட்சி,மார்ச்6

வேகமாக வந்த மோட்டார் சைக்கிளின் முன்சில்லு ரயர் வெடித்த போது மோட்டார் சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மட்டுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த சி.சபேசன் (வயது 33) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஜ-10-117)

## நிலுவையுடன் ஓய்வூதிய உயர்வு

வலி.தென்மேற்கு,மார்ச்6

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட ஓய்வூதிய உயர்வை இம்மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குவதற்குப் பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான நிலுவையுடன் இம்மாத ஓய்வூதியம் வழங்கப்படவிருப்பதாகப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தெரிவித்துள்ளார். (ஜ-10-135)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அந்தோனிப்பிள்ளை திரேசம்மா

(தொட்டம்மா)



பெரிய விளானைப் பிறப்பிடமாகவும் இளவாலை, முள்ளானை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை திரேசம்மா 04.03.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மற்றும் அந்தோனிப்பிள்ளையின் (தொட்டப்பு) அன்புச் சகோதரியும் செல்வரட்ணம், அன்னமேரி, பற்றிமா, சந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரன், கதிரமலைராஜா, செல்வமணி, தயாளகுமார், வசந்தி, சாந்தகுமார், வதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜி, சுஜி, கண்ணன், அஜி, அஜெந்தன், கிங்ஸ்ரன், சாளினி, அனோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (06.03.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூ.அந்தோனிப்பிள்ளை (தொட்டப்பு)
சகோதரர்.

முள்ளானை ஒழுங்கை,
இளவாலை.

(29294)(34-12-13-21)

### திருமதி இராசலிங்கம் பூபதி

பனிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலிங்கம் பூபதி அவர்கள் 03-03-2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் இராசையா - பொன்னம்மா அவர்களின் அன்புமகளும் மங்களேஸ்வரி, குணதீஸ்வரன், ஜெகதீஸ்வரி, நவதீஸ்வரி, நகுலேஸ்வரன், குலதீஸ்வரன், இராசேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாதம், குலேந்திரன், இராசசிங்கம், ஆனந்தரூபி, மாலினி, கோமதி, கீதாராணி ஆகியோரின் அன்பு மாமியும் திருச்செந்தூரன், சிவறஞ்சினி, டட்சன், டனுசன், அபநயா, அபிர்தன், பதுசியா, லகிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-03-2004) சனிக்கிழமை 12மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சம்பில்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
இ.குணதீஸ்வரன் (மகன்)
பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

அபிராமி புடைவையகம்,
சங்கானை.

(29319) (26-21-13-12)


# கிளிநொச்சி மாவட்டத்தின் தந்தை ஆனந்தசங்கரி...........



**இவர் கண்ட கனவு இன்று நனவாகி ஏழை மாணவர்கள் பலர் பல்கலைக்கழகம் சென்று மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, சட்டத்தரணிகளாக, பட்டதாரிகளாக, உருவாகக் காரணமான சங்கரியின் விடாமுயற்சிக்கு இது ஒரு சான்று**

## பிள்ளைகளின் உயர் கல்விக்காய் ஏங்கி அது நிறைவேறாது மரணித்த ஏழைப் பெற்றோர்க்கு இது சமர்ப்பணம்

அறுபதாம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் கன்னித்தொகுதி கிளிநொச்சி. இத்தொகுதியின் வேட்பாளராக ஆனந்த சங்கரி. அறிமுகக் கூட்டம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறுகிறது. "உங்களுக்கு ஓர் இளைஞனைத் தருகிறேன். அடக்கி ஒடுக்கப்படும், சுரண்டப்படும், கஷ்டப்படும் உங்களையும் உங்கள் துன்பத்தையும் நீக்குவார். இந்தத்தேர்த்லில் ஆனந்தசங்கரி தோற்கலாம். பத்து ஆண்டுகளில் உயர்ந்த சேவையால் உங்கள் எம்.பி. இவர்தான்"

எழுபதுகளில் அந்தத் தீர்க்கதரிசியின்

எண்ணம் ஈடேறியது. சொன்னவர் கலாநிதி என். எம். பெரேரா.

ஆரம்பகாலம் இவரின் அரசியல் தென்றலாக இருக்கவில்லை, தீயாகச் சுட்டது! நியாயத்திற்காகப் போராடும் குணம் கொண்ட இவர் ஆயுதம் தூக்காத போராளி, புகழ்ச்சிக்காக இதைக் கூறவில்லை. அறுபதுகளில் இருந்து சங்கரியை தெரிந்தவன், புரிந்தவன் நான். யாழ்ப்பாணத்தின் மிகவும் பின்தங்கிய பகுதி கிளிநொச்சி. குடாநாட்டின் அனைத்துத் தொகுதிக்களையும் இத்தொகுதிக்குள் வைத்தால் இத்தொகுதியின் நிலப்பரப்பு மிஞ்சி நிற்கும்!

இதை யாரும்
புரியவுமில்லை, தெரியவும் இல்லை,
மேல் நோக்காகப் பார்த்தால்
குடாநாட்டின் நெற்களஞ்சியம்
கிளிநொச்சிதான்!

இங்கே நல்ல பாடசாலைகள் இல்லை. போக்குவரத்துப் பாதைகள் சீரில்லை. வைத்திய வசதிகள் போதாது. வறுமை, அறியாமை அடக்குமுறை அதன் அச்சம் இது உச்சமாக இருந்த காலம்.

இங்கே மனித விடுதலைக்கான போராளியாக ஆனந்தசங்கரி மேடைகளில் நீதியைக் கேட்டார். நியாயத்தை எடுத்துரைத்தார். உங்கள் வாழ்வுக்கான விலங்கை நீங்கள்தான் உடைக்க வேண்டும் என்று உரத்துக் கூறினார்.

தேர்தலுடன் இந்தக்காற்று ஓய்ந்து விடும். வீச்சுக்கள் நின்று விடும் என்று எண்ணினார்கள்.

மனிதனின் குரல் வளையை நெரித்து,உழைப்பவர்கள் இரத்தத்தை உறிஞ்சிய அட்டைகளின் கனவு பொய்த்து விட்டது. உண்மையில் இங்கே தேர்தலுக்குப் பின்தான் புரட்சி விதைக்கப்பட்டது. இந்த அற்புதமான இளைஞனால்! நான் நினைக்கிறேன். எப்படி அந்த எரிமலையைக் கடந்தார் என்று! அதற்குப் காரணம், நியாயம், நேர்மை மிகுந்த அரசியல், அஞ்சாமை கொண்ட மனம். அடக்குமுறைக்கு எதிரான போர்க்குணம். மாற்றத்திற்கான உழைப்பு. இந்தப் போக்கால் ஆனந்த சங்கரியை மக்கள் ஆழமாக நேசித்தார்கள்.

சமூக மாற்றத்திற்கான உழைக்கும் கூர்மையான தேச பக்தனை மக்கள் நிராகரிக்கமாட்டார்கள்.

இதற்குச் சான்றும் சம்பவமும் கிளிநொச்சித் தொகுதி.

சொந்த பந்தங்கள் யாருமே இல்லாத இளைஞனான ஆனந்தசங்கரி முதல் முறையிலேயே முத்திரை பதித்து விட்டார். இவரின் பேச்சுக்கள் போலியானதல்ல. செயல்கள் சந்தர்ப்பவாதம் கொண்டதல்ல. ஒரு மிடுக்கான காரியவாதியாக, கர்மயோகியாகத் தொழிற்பட்டார்.

இத்தொகுதியின் மூலம்மூலை முடுக்குகளை அறிவதற்கும், மக்களின் துன்ப துயரங்களைப் புரிந்து கொள்வதற்கும், தேவைகளை அறிந்து கொள்வதற்கும்,தன்னை ஆளாக்கிக் கொண்டார். இதுதான் இவரின் அரசியல் வெற்றி.

ஆனந்தசங்கரியின் ஆட்சிக் காலம் கரைச்சி கிராமசபையின் பொற்காலம் என்று ஒரு மலரில் வந்த கட்டுரை இன்றும் என் நினைவில் நிற்கிறது. கலாசார எழுச்சிமிக்க ஒரு கலை விழா முதல் முறையாக இரண்டு தினங்கள் அந்த மண்ணில் நடந்தேறியது. கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இளைஞர்கள் ஊக்கம் பெற்றனர். மக்கள் கலைக்கும் ஒரு சமூகப்பார்வை கொடுக்கப்பட்டது. உண்மையில் விடியலின் ஒளிக்கீற்று தெரியவே செய்தது.

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு அத்திவாரம் போடப்பட்டது. கரடிப் போக்குச் சந்தியில் மிகமிக தரமான ஒரு நூல் நிலையம் உருவாக்கப் பட்டது.

இருண்டு போய்க்கிடந்த இடத்தில் வெளிச்சம். அறிவிற்கும் -ஆய்விற்கும் ஒரேநேரத்தில் மூன்று ஆயுள் வேத மருந்தகங்கள். நான் நினைக்கிறேன் அன்று இந்த நாட்டில் ஒரு கிராம சபையின் முதல் சாதனை என்று! அதன் தலைவர் ஆனந்தசங்கரியே. மக்கள் சேவைதான் மாற்றத்தின் வழி. இது அவரில் ஊறிப் போன தொழிற்பாடு.

ஒடுக்கு முறைக்கான ஒரு போரின் பிரசவம். கிளிநொச்சி தனி மாவட்டம். கிளிநொச்சி தனி மாவட்டமாவதை மூர்க்கமாக எதிர்த்தார்கள். குடாநாட்டின் நலன் பாதிக்கப்படும் என்று வாதிடப்பட்டது! வாதிட்டவர்கள் கிளிநொச்சி, குடியேற்றவாசிகளின் வாழ்வையும், வசதிகளையும் நோக்காது அவர்களின் இடர்பாடுகளைப் புரியாது தனிமாவட்டக் கொள்கைக்கு பலமான எதிர்க்குரல்கள் பல மட்டத்திலும் எழுப்பினார்கள்.

இத்தொகுதியின் தேவைகளையும், உணர்வுகளையும் புரிந்தும் குடாநாட்டின் நலனுக்காகவே இத்தனை எதிர்ப்புகளும்.

ஆனால், ஆனந்தசங்கரி தன் உறுதியில் இருந்து தளர்ந்து விடவில்லை. இவ்வுறுதியினால்தான் இந்த மாவட்டம் பிறந்தது.

உண்மையாகவே கிளிநொச்சி தனி மாவட்டமாகிய பின் பெற்ற நன்மைகள் அளவிட முடியாதவை.

குறிப்பாகக் கல்வி வளர்ச்சியில் இத்தொகுதி பல மாற்றங்களைக் கண்டது. பல பாடசாலைகள் மேல் மாடிக் கட்டடங்களாயின. கற்றல், கற்பித்தல்களின் அக்கறை பிரதேச ஆசிரியாகளின் நியமனம் இன்று இம் மாவட்டத்தில் உள்ள உயர் அதிகாரிகள் அனைவரும் இம் மாவட்டத்தின் பிறப்பால் பிறந்தவர்களே!

குறிப்பாகப் பூநகரி மக்கள் மீது மிகவும் பற்று வைத்திருந்தார். அங்கு பலபட்டதாரிகள் உருவாகக் காரணமாயிருந்தார். ஆனந்தசங்கரி இக்காலத்தில் தனது காரியாலயத்தையே ஒரு கற்றல் கூடமாக மாற்றி மாணவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் புரிந்ததன்மூலமே பல பட்டதாரிகள் இம்மாவட்டத்தில் உருவாகினார்கள்.

இது மட்டுமல்ல, இன்னும் பல சமூக மாற்றங்கள் தனி மாவட்டத்தினால் கிளிநொச்சிக்குக் கிடைத்தது. மேற்தட்டு வகுப்பும், மத்திய வர்க்கமும், ஏகபோகமாக அனுபவித்த இரணைமடு தண்ணீரை குடியேற்ற வாசிகள், பூர்வீகக்குடிகள் சமமாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இதுதான் இத்தொகுதியின் ஒரு பதியப்பட்ட சமூகப் புரட்சி எனலாம்.

இந்த நிலைமை ஏற்படுவதற்கு துணையாகவும், தூணாகவும் நின்றார். இவரை அந்த உத்வேகம் கொண்ட இளைஞனாகவே இன்றும் காண்கிறேன்.

1972 ஆம் ஆண்டு தன்னுடைய அலுவலகத்தையே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காகக் கொடுத்து அவர்களை அதிகாலையில் எழுப்பி விட்டு அவர்கள் மீது காட்டிய அக்கறை காரணமாக 1973 ஆம் ஆண்டு முதன் முறையாக கிளிநொச்சி மகாவித்தியாலத்தில் விஞ்ஞானப்பிரிவில் விசேட சித்தியுடன் பல மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்தார்கள்.

ஏன் இன்னும் கூட எத்தனையோ ஏழை மாணவர்களின் பாலர் வகுப்புக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை தன்னுடைய சொந்தச் செலவிலேயே படிப்பிக்கும் ஓர் உன்னதமான அரசியல் வாதி. தன் அருகில் இருப்பவர்களின் குடும்பக் கஷ்டங்களை குறிப்பால் உணர்ந்து அவ்வப்போது உதவும் ஒரு மனிதநேயமிக்க சிறந்த மனிதர். தன் மாதச்சம்பளத்தை தன்னைச் சார்ந்து இருப்பவர்களின் கஷ்டத்தை போக்குவதற்காகவே பயன்படுத்தும் புகழை விரும்பாத ஒரு ஞானி.

**ஏழையின் சிரிப்பில் திருப்பதிகாணும் எங்கள் தலைவனின் வெற்றியை உறுதியாக்குவோம்.**

**வீ. ஆனந்தசங்கரி** தலைவர். (தமிழர் விடுதலைக் கூட்டணி)

**சுயேச்சைக் குழு 01** X

உதயன்

## வாக்களிப்பதற்கு உரிய வழி செய்க!

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச வாக்காளர்களும் ஏனைய மக்களைப் போன்று தமது அடிப்படை உரிமை யான வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகிப்பதற்கு உரிய வழிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான கோரிக்கை வடக்கில் மதத் தலைவர்களிடமிருந்தும் எழுந்திருக்கின்றது.

யாழ்.ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

அதேசமயம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மாவும் இதேவிடயத்தை வலியுறுத்தி பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்களுக்கு நீண்ட காலமாகத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் அவர்கள் அல்லர்; சூழ்நிலைதான்.

இப்பிரதேசங்கள் அரச கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும் அரச நிர்வாக இயந்திரம் அங்கு இறந்துவிடவில்லை. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. அரச நிறுவனங்களும், செயலகங்களும் தங்கு தடையின்றிச் செயற்படுகின்றன. ஏனைய இடங்களில் இலங்கைப் பொலீஸாரின் காவலுடன் நடத்தப்படும் ஜி.சீ.ஈ. (சாதாரணதர) மற்றும் (உயர்தர) பரீட்சைகள் இங்கு பொலீஸாரின் பந்தோபஸ்து மற்றும் காவல் வசதிகள் இன்றியே இலங்கைக் கல்வித் திணைக்களத்தினால் செவ்வனே நடத்தப்படுகின்றன. அவற்றுக்குத் தடங்கல் ஏதும் நிகழ்வதேயில்லை.

இந்தத் தடவை தேர்தலைத் தடையின்றி நடத்துவதற்கு தாங்கள் ஒத்துழைப்புத் தருவார்கள் என விடுதலைப் புலிகளே அறிவித்துள்ளார்கள்.

எனவே, இப்பிரதேசத்தில் அரச பரீட்சைகளை நடத்துவது போல - அரச நிர்வாக இயந்திரங்களை இயங்க வைப்பது போல - வாக்களிப்பையும் வெளித் தலையீடின்றி நடத்த முடியும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

அதனைத்தான் யாழ். ஆயரும் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இது விடயத்தில் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு அவர்களின் உரிமையைப் பிரயோகிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதியை ஆயர் கேட்டிருக்கின்றார். நியாயமான - நிறைவேற்றப்பட வேண்டிய - ஜனாதிபதிக்கு அவரின் கடமையைச் சுட்டிக்காட்டுகின்ற - கோரிக்கை இது.

தமிழ்மக்கள் தங்கள் நியாயமான அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புகளையும், விருப்புகளையும் சர்வதேச சமூகத்துக்கு ஒருமித்த குரலில் வெளிப்படுத்தும் ஒரு தேர்தலாக இதனைப் பயன்படுத்த விளைகின்றார்கள். எனவே, இத்தேர்தலில் அனைத்துத் தமிழ்மக்களும் தங்களின் வாக்குரிமையைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டியது அவசியமாகும்.

அதற்கு வசியாக, வடக்குக் கிழக்குப் பிரதேச மக்கள் - குறிப்பாகக் கொடிய யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்கள் - தமது வாக்குரிமையை ஏனையோரைப் போல் தாம் வசிக்கின்ற இடங்களிலேயே பிரயோகிப்பதற்கு வசதி செய்யப்பட வேண்டும். - இவ்வாறு நல்லை ஆதீன முதல்வரும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் பொதுச் செயலாளரும் கேட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியது போன்று மக்களின் ஜனநாயக உரிமை - அதுவும் மிகமிக அடிப்படையான வாக்களிக்கும் உரிமை - அடக்குமுறை நடவடிக்கைகள் மூலமோ அல்லது சப்பைக்கட்டுக் காரணம் காட்டும் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டோ மறுக்கப்பட்டால், அவற்றுக்கு மக்கள் ஜனநாயக விரோத முறையில் நிவாரணம் பெறவே முயற்சிப்பார்கள். அது விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்.

தங்களின் குறுகிய அரசியல் லாபங்களை மனதில் வைத்து, தமிழ்மக்களின் இந்த அடிப்படை உரிமையைத் தட்டிப் பறிக்க சிங்களத் தலைமை முயற்சிக்கக் கூடாது. அப்படிச் செய்வது தமிழர்களைப் பிழையான வழியில் செயற்படுவதற்கும் தூண்டிவிடும்.

பொறுப்புள்ளோர் பொறுப்போடு சிந்தித்துச் செயற்பட வேண்டிய விவகாரம் இது!

# வர்த்தகச் சந்தையானதைத் தவிர குடாநாட்டுக்கு வேறு பயன் இல்லை!

## மாதாந்த அறிக்கையில் இணையம் தெரிவிப்பு

தென்னிலங்கை நிறுவனங்களின் சந்தையாக மாறியதைத் தவிரக் குடாநாட்டுக்கு வேறு பெரும்பயன் எதுவும் கிட்டவில்லை.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த ஜனவரி மாதத்திற்கான யாழ். குடாநாட்டின் நிலைவரம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசியல் ரீதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டிணைந்ததன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சிச் சபைக்கான வரைவு ஒட்டுமொத்தமாக நிராகரிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வு எட்டாக் கனியாகத் தூரவிலகிப் போய்க்கொண்டிருக்கிறது.

யுத்தத்தினால் அழிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டைப் புனரமைப்புச் செய்வது தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்ட அமைப்புகளுடன் பல சந்திப்புக்கள் இடம்பெற்றுப் பல்வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டபோதும் இதுவரை எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

தென்னிலங்கையிலுள்ள வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கேற்ற முக்கிய மையமாக யாழ். குடாநாடு விளங்குகின்றது. தென்னிலங்கையிலிருந்து பெருமளவான பொருள்கள் இங்கு சந்தைப்படுத்தப்படுகின்றன. இதைத் தவிர வேறு எவ்வித பயனுமில்லை.

### கண்ணிவெடி

யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி அகற்றும் பிரிவு இவ்வருடம் கண்ணிவெடி அகற்றுவதற்கென 100 இடங்களைத் தெரிவுசெய்துள்ளது. கடந்த வருடம் 6 ஆயிரத்து 943 கண்ணிவெடிகளையும் 5 ஆயிரத்து 130 வெடிக்கக்கூடிய பொருள்களையும், 440 வெடிபொருள்களையும் அவர்கள் அகற்றியுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஊனமுற்றோர்புனர்வாழ்வு சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் கடந்த வருடம் குடாநாட்டில் கண்ணிவெடிகள் தொடர்பாக 54 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 14 மாணவர்கள் உட்பட 44 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

### சுகாதாரம்

யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவுக்கான விசேட கவனிப்புப் பகுதி ஒன்றை அமைப்பதற்குச் சுகாதார அமைச்சு 90 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

யாழ். மாவட்டச் சுகாதார உதவிப் பணிப்பாளரின் கூற்றுப்படி கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 377 பேர் சாதாரண மலேரியா நோயினாலும், 33 பேர் மூளை மலேரியா நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

### விவசாயம்

கடந்த வருடம் யாழ். குடாநாட்டில் மழைவீழ்ச்சி மிகக் குறைவாகக் காணப்பட்டதனால் பெரும்போக நெற்செய்கை பெரும் பாதிப்புக்குள்ளானது. இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர்.

### பாதுகாப்பு நிலை

யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால எமது அலுவலகத்திற்கு நேரில் வந்து இணையப்பிரதிநிதிகளுடன் யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு மற்றும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார். அதன போது மக்களின் சுதந்திரமான செயற்பாட்டிற்குத் தடை யாகவுள்ள படையினர் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் என்று அவர் உறுதியளித்தார்.

தென்மராட்சி, மட்டுவில் பகுதியில் படையினரால் பயன்படுத்தப்பட்டுவந்த இருபது வீடுகளும் தென்னம் தோட்டங் களும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## வலிகாமம் வடக்கில் பணியாற்றும் அரச ஊழியரின் விவரம் சேகரிப்பு

தெல்லிப்பழை,மார்ச்6

வலி.வடக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், அரச அலுவலகங்கள் போன்றவற்றில் பணியாற்றுபவர்களின் சுய விவரம் உள்ளிட்ட விவரங்களை, யாழ். படைத்துறைத் தலைமையகம் பிரதேச இராணுவ அதிகாரிகளூடாகச் சேகரித்து வருகிறது.

வலி.வடக்கிலுள்ள பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோரின் விவரங்கள், அரச திணைக்கள பணியாளர்களின் விவரங்கள் என்பனவற்றை இராணுவத்தினர் நேரடியாகச் சென்று சேகரித்து வருகின்றனர். யுத்தநிறுத்தம் ஏற்பட்ட பின்னர் படையினர் இத்தகைய விவர சேகரிப்பில் இறங்கியுள்ளமை இதுவே முதற்தடவையாகும். புரிந்துணர்வு உடன்பாட்டின் முன்பு இத்தகைய விவரங்கள் அடிக்கடி படையினரால் சேகரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-150)

## நீர்ப்பாவனையாளர் சங்கம் அமைக்க உள்ளூராட்சி ஆணையாளர் பணிப்பு

தென்மராட்சி,மார்ச்6

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர்த் திட்டங்களால் பயன்பெறும் மக்களிடையே நீர்பாவனையாளர் சங்கங்களை அமைக்குமாறு சகல உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயலாளர்களையும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தெ.து.விஜயலட்சுமி கேட்டுள்ளார்.

தற்போது குடிதண்ணீர் விநியோகத்தின்கீழ் பொதுக் குழாய்க் கிணறுகள், பொதுக் கிணறுகள், நீர்த்தொட்டிகள் ஆகியவற்றைப் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களிடையே இச்சங்கங்களை உருவாக்குமாறும் -அந்தந்தப் பகுதிகளில் குடிதண்ணீரைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் பாவித்தல், நன்கு பராமரித்தல் போன்ற கடமைகளைச் சங்க நிர்வாகத்திடம் கையளிக்குமாறும் - அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தச் சங்கங்களில் பெண்களைப் பெருமளவில் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளுமாறும், இந்தச் சங்கங்களை அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண துரித மீளமைப்புத் திட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களில் அவசியம் நீர்ப்பாவனையாளர் சங்கங்களை அமைக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-117)

### நாளை

மாசி 24
ஞாயிற்றுக்கிழமை
(07.03.2004)
திதி : பிரதமை
பின்னிரவு 4.58
நட்சத்திரம் : பூரம்
பகல் 12.33
சுபநேரம் : 9.24 - 10.54
ராகுகாலம்: 4.54 - 6.24
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நன்மை என்பது செயலில் காணும் அன்பு.

வலி.தென்மேற்குப் பிரதேச பிரிவில்

## முதியோர்கள் பத்துப் பேருக்கு அ.அட்டைகள் கிடைத்தன

வலி.தென்மேற்கு,மார்ச்6

65வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டை வழங்கும் சமூக சேவைத் திணைக்களத்தின் திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைகோரி சமீபத்தில் விண்ணப்பித்த 11பேருக்கான அடையாள அட்டைகள் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளரினால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதனை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பிரிவிலுள்ள 65வயது பூர்த்தியடைந்த முதியவர்கள் இந்த அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும், பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் சமூக சேவை உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு இதற்கான விணணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கவேண்டும் என்றும் -

முத்திரை அளவுள்ள இரண்டு புகைப்படங்கள் கிராம அலுவலரினால் உறுதி செய்யப்பட்டு இந்த விண்ணப்பப்படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அடையாள அட்டையை வைத்திருக்கும் முதியவர்களுக்குச் சுகாதார சேவை, போக்குவரத்துச் சேவை, வங்கிச் சேவை, ஓய்வூதியம் பெறுதல், பொலீஸ், நீதி ஆணைக்குழு மற்றும் அரசு வழங்கும் சேவைகளில் முன்னுரிமையளிக்கப்படும் என்று சமூக சேவை திணைக்களம் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

## மேலும் 12 மீனவப் படகோட்டிகளுக்கு எதிராக நேற்று வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்6

மீன்பிடி படகுகளின் தலைமைப் படகோட்டிகளாக இருந்து கொண்டு 2003ஆம் ஆண்டின் வெவ்வேறு காலப் பகுதிகளில் காங்கேசன்துறை, கோவளம் காரைநகர், நெடுந்தீவு ஆகிய கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மேலும் 12தமிழக மீனவப் படகோட்டிகள் மீது சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் புதிதாக நேற்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே 15தமிழக மீனவர்கள் மீதான வழக்குகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 12தமிழக மீனவர்களின் பெயர் விவரம் வருமாறு:

அஞ்ஜப்பன் பன்னீர்செல்வம், மாணிக்கவேல் சிவலிங்கம், பெரியப்பு ரவிச்சந்திரன், அங்கப்பன் செல்வம், பழனி பாஸ்கரன், கோவிந்தராஜ் சந்திரன், கருப்பையா கணேசன், காசிராசா தங்கவேலு, குமாரசுவாமி முருகானந்தன், வல்லிபுரம் விஜயன், கோவிந்தசாமி பததமநாதன், முத்து முனிசாமி ஆகிய 12தமிழக மீனவர்கள் மீதான வழக்குகளே நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ஐ-ரி)

## ஜோதிடப் பெண் தந்த பிரசாதத்தை உண்ட குடும்பப்பெண் மயக்கம்!

யாழ்ப்பாணம்,மார்ச்6

ஜோதிடம் பார்ப்பவர் போன்று வந்தபெண் கொடுத்த பிரசாதத்தை வாங்கி உண்ட குடும்பப் பெண் மயங்கிவீழ்ந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். நாவலர் வீதியில் மனோகராச் சந்திக்கு சமீபமாக உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

சம்பவ தினத்தன்று, மேற்படி வீட்டில் சம்பந்தப்பட்ட பெண் தனியாக இருந்துள்ளார். அப்போது ஜோதிடம் பார்ப்பவர் என்று தன்னைக் கூறிக்கொண்டு பெண்மணி ஒருவர் சென்றுள்ளார். அவரை நம்பிய வீட்டுக்காரப்பெண், அவரிடம் தனது கையைக் காண்பித்து ஜோதிடம் கேட்டுள்ளார். பின்னர் இருவரும் சிறிது நேரம் அளவளாவினர். அப்போது ஜோதிடப் பெண்மணி தனது பையிலிருந்து ஆலயப் பிரசாதத்தை எடுத்து வீட்டுக்காரப் பெண்மணியிடம் கொடுத்தார். அவரும் அதனை வாங்கி உண்டார்.

இந்த நேரத்தில் வீட்டுக்காரப் பெண்ணின் மகன் பாடசாலையிலிருந்து வீடுதிரும்பினார். அவரைக் கண்டதும் ஜோதிடம் பார்க்கும் பெண்மணி நழுவிவிட்டார்.

மகன் தாயிடம் பேச்சுக்கொடுத்தபோது அவர் மயங்கிக் கிடந்தமை தெரிந்தது. இதனைத் தொடர்ந்து வீட்டுக்காரப் பெண்மணி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-6)



சிவமயம்

இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள்

யாழ். புண்ணியபூமிக்கு மூன்றாவது முறையாக வருகை

**திரு. P.T.R.**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.

திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில்முன்னேற்றத் தடங்கலா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத்தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

இடம்: பாலாஜி இன் விடுதி

292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்),

யாழ்ப்பாணம். (29276)(34-13-26)



**பாடசாலை அதிபர்களே! / மாணவமணிகளே!**

பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், ஆய்வுகூட உபகரணங்களான நுணுக்குக் காட்டி, பரிசோதனை உபகரணங்கள், மனித உடல்களின் மாதிரி உருவங்கள், OHP புறஜெக்ரர்கள், ஸ்கிறீன் மற்றும் அலுவலக மேசைகள், அலுமாரி, புத்தக அலுமாரிகள், பயில் அலுமாரிகள், Daito குறியீட்டு றோனியோ இயந்திரங்கள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

*குறிப்பு:* எம்மிடம் ஞான உபதேசப் புத்தகங்கள், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு சேர்ந்த பைபிள்கள் விற்பனைக்கு உண்டு.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டா**

*212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

(C/33592)(34-13-26) **T.P.:021-222 5542.**


## கிராமஅலுவலருக்கு பதில் கடமை கொடுப்பனவு இல்லை

தென்மராட்சி,மார்ச்6

பதில் கடமைகளை மேற்கொள்ளும் கிராம அலுவலர்களுக்கு கடந்த ஒருவருடமாக கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் புனர்வாழ்வு வேலைகளைத் துரிதப்படுத்தும் முகமாக ஒப்பந்த அடிப்படையில் கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட்ட பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் பதில் கடமைகளை மேற்கொண்ட கிராம அலுவலர்களுக்குக் கடந்த ஆண்டு மார்ச்மாதம் தொடக்கம் பதில் கடமைக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை - எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்கள் கடந்த மாதம் பணியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் பதில் கடமைக்குத் தற்போது கடமையிலுள்ள கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் இந்தக் கிராம அலுவலர்களுக்குப் பதில் கடமைக் கொடுப்பனவு பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)


**இந்தியக்கேரள சந்நியாசி யாழ். வருகை**



மலபார் இந்து மஹாமண்டப ஸ்தாபகரும், அகில உலக ஐயப்பமிஷன் ஸ்தாபகரும், 9 ஆவது உலக சைவ மாநாடு, 3 ஆவது உலக முருகமாநாடு, முதலாவது உலக அமைதி மாநாடு ஆகியவற்றின் மலேசிய பேராளருமாகிய

**சுவாமி**

**பிரபாரானந்தா சரஸ்வதி சுவாமிகள்**

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். இவர் இன்று 06.03.2004 சனிக்கிழமை மாலை 5.00மணிக்கு கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் விசேட பஜனை, சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். அத்துடன் அடியார்களுக்கு நல்லாசிகளும் வழங்குவார்.

அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சாமியே சரணம் ஐயப்பா!

பிரசுர அன்பளிப்பு:

திரு.கனகசபை சுந்தரலிங்கம்,

*-காரை மணிகண்டன்* (29317-34-13-26)



**இயேசு அழைக்கின்றார்**

ஒவ்வொரு ஞாயிறு தோறும் காலை 9.00 மணிக்கு எமது சபைகளிலும் கிளைகளிலும் ஆராதனை நடைபெறும்.

*சபைகள் விவரம்:*

- அசெம்லி ஒவ் கோட், 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
- அசெம்லி ஒவ் கோட், சுதுமலை சந்தி, மானிப்பாய்.
- கானான் ஜெப ஆலயம், இருபாலை.
- கல்வாரி பூரண சுவிசேஷ சபை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
- எக்காலத் தொனி சபை, கச்சேரி, யாழ்ப்பாணம்.
- எபனேசர் சபை, வட்டுக்கோட்டை.
- அடைக்கல கூடாரம், துணவி.
- ஜெப நிலையம், உடுப்பிட்டி.
- மீட்பின் குரல், பண்டத்தரிப்பு
- சர்வ வல்லவர் சபை, உரும்பிராய்.
- நாற்சதுர சபை, நல்லூர்.

உங்களை ~ நண்பனைப் போல, தகப்பனைப் போல, தாயைப் போல நேசிக்கும் தேவனிடம் வாருங்கள்.

(29318)(34-13-26)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்

## 2004 ஏப்ரல் 02

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


அன்பான பெருமக்களே!

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்தி, எம் இனத்தின் அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் பிரகடனப்படுத்தி, தமிழ்த்தேசியத்தை மேலும் பலப்படுத்தி, தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு அங்கமான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான **திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்** அவர்களும் உபதலைவர்களில் ஒருவரும் முன்னாள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருமான **திரு.சீ.வீ.கே.சிவஞானம்** அவர்களும் போட்டியிடுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் "வீடு" சின்னத்திற்கு எதிரேயும், இவ்விருவரதும் விருப்பு வாக்கு இலக்கம் 5க்கும், 9க்கும், புள்ளடிகளிட்டு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், இவ்விருவரும் அமோக வெற்றிபெற தங்கள் ஆதரவை வழங்கவேண்டுமென வேண்டுகிறோம்.



திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

இல: 5



திரு.சீ.வீ.கே.சிவஞானம்.

இல: 9

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

# சைவபரிபாலன சபை காலத்தின் பதிவு மையம்

**யாழ். சைவபரிபாலன சபையினால் வருடந்தோறும் நடத்தப்படும் அகில இலங்கை சைவ மாநாடு நேற்று நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமானது. இந்த வேளையில் சைவ பரிபாலன சபையின் கடந்தகால - தற்காலச் செயற்பாடுகள் பற்றிய குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.**

காலத்தின் தேவையே சமுதாயத்தில் தலைவர்களையும் - இயக்கங்களையும் - கூட்டு முயற்சிகளையும் உருவாக்குகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சமய, சமூக, கலாசாரச் சூழ்நிலைகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர்.பொன் இராமநாதன் போன்ற பெருந்தலைவர்களை உருவாக்க வழி வகுத்தது. ஆறுமுகநாவலர் மறைவின் பின்னர் இருந்த சூழ்நிலைகளே சைவபரிபாலனசபை, சைவவித்தியா விருத்திச் சங்கம் போன்ற பெரும் நிறுவனங்கள் உதயமாகக் காரணமாயிருந்தன.

ஆகவே, 115 வருடங்களுக்கு முன ஆரம்பிக்கப்பட்ட சைவபரிலாலன சபையின் பணிகளைச் சுருக்கமாக இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

சைவ மாநாடு நடைபெறும் இவ வேளையில், அப்பணிகள் பற்றிச் சிந்திக்க வேண்டியது சைவத் தமிழ் மக்களின் முக்கிய கடமையுமாகும்.

ஆறுமுகநாவலரின் நோக்கங்களுக்கு அமைவாகவும், அவரது பணிகளைத் தொடர்ந்து செய்வதற்காகவும் இந்தச் சபை ஆரம்பிக்கப்பட்டது.

சர்வாதாரி ஆண்டு சித்திரைத் திங்கள் 19 ஆம் நாள் (29.04.1888) ஞாயிற்றுக்கிழமை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் சைவப பேறிஞர்கள் கூடிய கூட்டத்தில் சைவ சமய பரிபாலன சபை என்ற பெயரில் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது.

முதற் தலைவர் சைவத்திரு. ந.ச.பொன்னம்பலபிள்ளை, முதற் செயலாளர் சைவத்திரு. த.கைலாசபிள்ளை, முதற்பொருளாளர் சைவத் திரு.கு.சபாபதிச்செட்டியார் ஆகியோர் ஆவர்.

**சபையின் நோக்கங்கள்**

சைவசமயத்தின் வளர்ச்சிக்கும் பிரசாரத்திற்கும் ஊக்கமளித்தல், சைவக் கோயில்களை ஆரம்பித்தல், புனரமைத்தல், சபையின் அதிகாரத்தின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் வரும் கோயில்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்தல், சைவ மடங்களையும், அவற்றுக்குரிய சொத்துக்களையும் பொறுப்பேற்று நடத்துதல், சைவப் பாடசாலைகளைத் ஸ்தாபித்தல் - பராமரித்தல், சைவக்கல்விக்குத் தேவையான நூல்களைப் பிரசுரித்தல், பத்திரிகை நடத்துதல், வைத்தியசாலைகள், மயானங்களை ஸ்தாபித்தல் முதலியனவாகும்.

**சைவப்புலவர்**
**வ.கந்தசாமி**
*(தலைவர் – சைவபரிபாலன சபை)*

17.09.1890 நடைபெற்ற இரண்டாவது மகாசபைக் கூட்டத்தில் இச் சபையின் பெயர் "சைவபரிபாலன சபை" என மாற்றம் செய்யப்பட்டது. 23.10.1890ஆம் நாள் இந்து உயர் நிலைப்பாடசாலை என்ற கல்விக் கூடமும் ஆரம்பித்து நடத்தப்பட்டது. முதல் ஆண்டுப் பொதுக் கூட்டம் 24.05.1889இல் நடைபெற்றபோது அக்கூட்டத் தீர்மானத்தின்படி 11.09.1889 புதன்கிழமை இருகிழமைக்கு ஒரு வெளியீடாகத் தமிழில் "இந்து சாதனம்" ஆங்கிலத்தில் "HINDU ORGAN" என்னும் செய்தி இதழ்கள் வெளியாகின. அப்பத்திரிகை இன்றும் வெளிவருகின்றது.

**நூல் வெளியீட்டுப்பணி**

சைவபரிபாலனசபை, சைவப்பிரகாச அச்சகம் மூலமாகப் பாலபாடங்கள், சைவசமயநூல்கள், துண்டுப் பிரசுரங்கள், ஆறுமுகநாவலர், சைவப பெரியார் சு.சிவபாதசுந்தரம் எழுதிய சைவ சமய நூல்கள் என்பன வெளியிட்டு இன்றும் சைவ உலகுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

சைவசமயக் கல்வியின் வளர்ச்சிக்காக சைவநெறித்தேர்வு, பண்ணிசைப் போட்டி, கட்டுரைப்போட்டி, சைவசித்தாந்த பிரவேச பால பண்டித, பண்டிதர் தேர்வுகள், பண்ணிசை வகுப்புகள் ஆகியனவற்றைச் சபை இன்றும் நடத்தி வருகின்றது.

நீராவியடியில் அமைக்கப்பட்ட (1947) நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவசமய குரவர் குருபூசை, ஆறுமுக நாவலர் குருபூசை, சேக்கிழார் குருபூசை, திருவள்ளுவர் தினம் ஆகியன நடைபெறுவதோடு நூலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இன்று மண்டப வளவில் சைவ பரிபாலனசபையின் அலுவலகம் பரீட்சைப்பகுதி என்பன இயங்கி வருகின்றன. சைவ சமய அடிப்படையில் மாணவர்களுக்குச் சிறுவயதில் கல்வி போதிக்கப்படவேண்டும் என்பதற்காக முன்பள்ளி ஒன்றும் நடத்தப்படுகின்றது. அத்துடன், சைவ சமயக் கல்வி சார்பான கருத்தரங்குகளை நடத்துதல், அரசினால் வெளியிடப்பட்ட சைவசமயம் சார்ந்த நூல்களில் உள்ள குறைநிறைகள் பற்றி ஆசிரியர்களுக்கு விளக்கமளித்தல், ஆறுமுக நாவலரின் வெளியீடான நூல்களைக் காலத்திற்குக் காலம் வெளியிடுதல், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் எழுதிய சைவக்கிரியை விளக்கம், சைவசமய சாரம் ஆகிய நூல்கள் வெளியிடப்படுதல், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நடத்துதல், இவை எல்லாவற்றிற்கும் மேலாக வருடந்தோறும் அகில இலங்கைச் சைவ மாநாடு நடத்துதல், சைவசித்தாந்த பண்டிதர் பட்டப்பரீட்சைகளை நடத்துதல் என்பனவும் சபையின் பிரதான பணிகளாக உள்ளன.

சைவ மாநாடுகளில் முன்னைய காலங்களில் தமிழக அறிஞர்கள், ஆதீனங்கள், ஓதுவார்கள் அழைக்கப்பட்டனர். எனினும், காலச் சூழ்நிலை காரணமாக அண்மைக்காலங்களில் இந்த அறிஞர்கள் இங்கு அழைக்கப்படவில்லை. எனினும், எதிர்காலத்தில் இத்தகையவர்களை வரவழைத்து விசேட சமய வகுப்புக்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யாழ். சைவ பரிபாலன சபைக்குச் சொந்தமான சிதம்பரத்தில் உள்ள புண்ணிய நாச்சியம்மையார் மடம் புனரமைக்கப்பட்டுள்ளது. இன்னும் பல்வேறு சமய, சமூகப் பணிகளை ஆற்றவேண்டிய பொறுப்பு சைவ பரிபாலன சபைக்குரியது. இதனை நிறைவேற்ற அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம். ✦

# நிதர்சனத்தின் 'அம்மா நலமா?' கிளிநொச்சியில் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்6

'நிதர்சனம்' நிறுவனத்தின் தயாரிப்பில் உருவான 'அம்மா நலமா?' முழுநீளத் திரைப்படத்தின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

'நிதர்சனம்' நிறுவனத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய சிறப்பு வெளியீடாக இத்திரைப்படம் வெளிவருகிறது. திரைப்பட உருவாக்கற் பிரிவின் தயாரிப்பு நிர்வாகப் பொறுப்பாளர் சங்கரின் மேற்பார்வையில் உருவான இத்திரைப்படத்தினைப் பிரபல தயாரிப்பாளர் ந.கேசவராஜன் திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் குடும்ப அங்கத்தவர்களை இழந்து தனிமரமாகிவிட்ட ஒரு ஏழைத் தாயின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு இப்படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படத்திற்கான பாடல்கள் - வீரா, இசை - இசைப்பிரியன், பாடல் ஒலிப்பதிவு - மலையவன், ஒலிப் பதிவு - வேந்தன், படத்தொகுப்பு - அருந்தவம், பின்னணி இசை - இசைத் தென்றல், ஒளிப்பதிவு - டயஸ்.

(ஐ-4-88)




மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ் கழக உறுப்பினர்களின் ஒன்றுகூடலில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட லயன்ஸ் கழக வலயத் தலைவரும், தெல்லிப்பழை பிரதேச செயலருமான க.குணராசாவுக்கு லயன்ஸ் பிரமுகர் கே.நாகராசா மாலை அணிவிக்கிறார். அருகில் கழகத்தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன், செயலாளர் டாக்டர் திருமதி ரு.உதயகுமார், பொருளாளர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

*(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# பெயர்ப் பலகை திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகவுள்ள நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் யோகாசன தியான வகுப்புகளுக்கான பெயர்ப் பலகை திரைநீக்க நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம் கலந்துகொள்வார்.

ஆசியுரையை நல்லை ஆதீன குருமகா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், அறிமுக உரையை யோக தியானப்பயிற்சிப் போதனாசிரியர் ந.சிவனேஸ்வரராஜாவும், சிறப்புரையை யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.சிவசங்கரும் நிகழ்த்துவர். (ஒ-7)

# நேர்முகப் பரீட்சை

மண்டைதீவு,மார்ச்6

மிதிவெடி அபாயக்கல்வி வேலைத் திட்ட வெளிக்கள இணைப்பாளர் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 10ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுண்டிக்குளி பிளச் சேர்ஸ் ஒழுங்கையில் உள்ள சர் வோதய மாவட்ட நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கவேண்டும் என மாவட்ட இணைப்பாளர் கே.கனகரததினம் கேட்டுள்ளார். (ஒ-88)

# மக்கள் முகம்



கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சண்முகம் சிவலிங்கராசா அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய அங்கத்தவரும், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய தேவஸ்தான நிர்வாகசபை அங்கத்தவரும் ஆவார். (எ-9)

* * *



காரைநகர், புது வீதியைச் சேர்ந்த தியாகராசா தேவராசன், மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தொழிலதிபரான இவர், காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் நிர்வாக சபை உறுப்பினரும், காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவரும் ஆவார். (எ-73)

* * *



குருநகரைச் சேர்ந்த கிளமெண்ட் கிறிஸ்தோப்பர், யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் பகுதித் தலைவராகக் கடமையாற்றிவரும் இவர், குருநகர் புதுமை மாதா சனசமூக நிலையத்தின் தலைவராகவும், குருநகர் புதுமை மாதா ஆலயப் பங்குச் சபையின் செயலாளராகவும் உள்ளார். இவர் ஒரு நாடகக் கலைஞரும் நாடக ஆசிரியரும் கூட. (எ-51)

* * *



துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த சதானந்தன் கிருபைராசா, யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா முன்னிலையில் 26.12.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொணடார்.

இவர், துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினரும், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான தொண்டர் சபை அங்கத்தவரும், கரவெட்டி திருஇருதயக் கல்லூரி பழைய மாணவரும் ஆவார். (எ)

* * *



கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த பொன்னையா தங்கராசா 27.02.2004 அன்று யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராசா முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராகவும், பூநகரி பிரதேச வெகுஜன ஒன்றியத்தின் தலைவராகவும் இருப்பதுடன் சமய, சமூக தொண்டுகளிலும் ஈடுபட்டு வருகின்றார். (எ-30)

* * *



தங்கவேல் முதலிகேசவன் அவர்கள் அண்மையில் கனேடிய சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் பெற்று வெளியேறியதையிட்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கனடாக் கிளை பழைய மாணவர்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இவர், தனது ஆரம்பம் முதற்கொண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று, அங்கு அவர் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கினார். பின்னர் கொழும்பில் சட்டக்கல்லூரியில் சட்டப் படிப்பை முடித்த பின்னர் சட்டத்தரணியாகக் கொழும்பில் பணியாற்றினார்.

தற்பொழுது கனேடிய தமிழ்மக்களுக்கான தனது சேவையை ஆற்றவுள்ளார்.

# மாநகர சபைத்திட்ட முன்மொழிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ். மாநகரசபையின் வேலைத் திட்டங்கள் தொடர்பான திட்ட முன்மொழிவுகள் யாழ். அரச அதிபரால் திட்டக்குழுவுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டுக்கான துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்தத் திட்ட முன்மொழிவுகள் யாழ். அரச அதிபரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீதிகளுக்கு மின் விளக்குப் பொருத்துதல், யாழ். ஆஸ்பத்திரி வீதி, நாவலர் வீதி மற்றும் நகரப் பகுதி வீதிகளின் பக்க வடிகால்கள் குருநகர் பகுதிகளிலுள்ள மதகுகள் திருத்தம் செய்தல் என்பனவற்றுக்கே திட்டமுன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டதும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-7)

# தவக்காலச் சிந்தனை

## மனமாற்றத்தின் காலம்

தவக்காலம் மனமாற்றத்தின்காலம். மனம்மாறி நற்செய்தியை நம்பும் காலம். நற்செய்தியை நம்பி வாழ்வைப் புதுப்பிக்கும் காலம். இந்நாள்களிலாவது நாம் அனைவரும் ஒவ்வொருநாளும் திருவிவிலியத்தில் சிறிய பகுதியாவது வாசித்து, அதைத் தியானித்து அதன்மூலம் இறைவன நமக்குத் தரும் செய்தியின்படி வாழ முயற்சிப்போம்.

**பதினோராம் நாள்**

இந்நாள்களில் வீட்டிற்கு வரும் ஏழை, எளியவர் அனைவருக்கும் உணவோ அல்லது தானதர்மமோ புரிவோம். தனியாகவோ, கூட்டாகவோ செபமாலைப் பக்தி முயற்சியில் ஈடுபடுவோம். அயலவருக்கு உறுதுணையாக இருந்து அவர்களுக்கு எம்மாலான உதவியினைப் புரிவோம். பகைவரை மன்னிப்போம். ஏனெனில், நிலையாக இருப்பது இவ்வுலக வாழ்வில பணமோ, புகழோ, பதவியோ, பட்டமோ அல்ல. நாம இவ்வுலகில் தேடிக்கொள்ளும் புண்ணியங்களே ஆகும். இந்நாள்களில் நமது மறுவாழ்விற்குத் தேவையான புண்ணியங்களைச் சேகரிப்போம்.

ஆகவே, இந்த நாற்பது நாள்களில் எமது வாழ்க்கையைப் புதுப்பித்து கிறிஸ்துவின் பாடுகளை ஆழமாகச் சிந்தித்துத் தியானித்து நமது வாழ்க்கையை மாற்றி அமைப்போம்.

"காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கிவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்".

*ம.மேரி சோபியா.*

பெண்கள் காதல் அடிமைகள் அல்லர்.
பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் தகர்த்தெறியப்படவேண்டும்.
இதற்கான உரிமை பெண்களுக்கு உண்டு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,
உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டம்,
தொ.பே.: 011-2662587, 021-222 5470.

(சி-33504) (12-13-24)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100/% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- Royal Industries, Colombo.
0112334603




ஏக விநியோகத்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
சத்திரத்துச் சந்திக்கு அருகில்

## மகளிர் தினவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்6

அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் மகளிர் தின விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருமதி சி.செல்வராணி தலைமையில் தென்னிந்திய திருச்சபை தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கலந்துகொள்வார்.(ஜ-4)

## சாவகச்சேரியில் சித்த மருத்துவ முகாம்

தென்மராட்சி,மார்ச்6

சாவகச்சேரி சத்தியசாயி சேவா நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய இளைஞர் பிரிவினால் சித்த மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று எதிர் வரும் 10 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

இந்த மருத்துவ சிகிச்சை முகாமில் கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர்களும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களும் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-117)

## நாய்களுக்கு தடுப்பூசி

புலோலியில் உள்ள பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் இன்று காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய்த் தடுப்பூசி மருந்து இலவசமாக ஏற்றப்படவுள்ளது. (ஜ-173-ரி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோவில் வயல், இயக்கச்சியை
சொந்த இடமாகவும் தோவண்டை, இயக்கச்சி
கண்ணகை அம்மன் ஆலய நிரந்தர பூசகரும். அந்த
ஆலயத்தின் தர்மகர்த்தாவும் முகாவில் இயக்கச்சி, திரியாய்
அம்மன் நிரந்தர பூசகரும் இன்னும் பல ஆலயங்களின்
சிவ தொண்டருமாகிய

**செல்லையா மண்டலாய் விநாயகமூர்த்தி**

(பூசகர் பாலு)

அவர்கள் 11.02.2004ஆம் திகதி அன்று யாழ். மாவட்ட நீதிபதி S.நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக உறுதியுரை செய்து, மக்கள் சேவையே மகேசன் சேவை என நினைத்து பொது மக்களுக்கும் சேவை செய்யமுன்வந்துள்ளார்.

எனவே, அவரின் சேவை வானளாவிய ரீதியில் மேலோங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளை வணங்கி அவர் நீடூழி வாழ வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
இயக்கச்சி கண்ணகை அம்மன்
பக்தர்கள்.

(29290)(39-11-13)



## 1st HAPPY BIRTHDAY

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

கோண்டாவில் தில்லையம்பதியைச் சேர்ந்த
**குகேந்திரன் - சுகிதா** தம்பதிகளின்
செல்வப்புதல்வி

**சுவேதா**

தனது பிறந்த நாளை கோண்டாவிலில் உள்ள தனது இல்லத்தில் இன்று (06-03-2004) சனிக்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார். அவரை தில்லையம்பதி அருள்மிகு சிவகாமி அம்பாள் அருள்பெற்று பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்துகின்றார்கள்.

அன்புடன்:
கனடா குகன் -பெரியப்பா
கனடா ராஜி - பெரியம்மா
கனடா கிரேனியா - அக்கா
லண்டன் குகதாசன் - சித்தப்பா.

தில்லையம்பதி
கோண்டாவில்.
(29171) (41)

## அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல் - 2004

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998-05-19ஆம் திகதிய 1028/06 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிட்டதுமான வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திகதி: 07-03-2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப.9.30 மணி.

| தொ. இல. | கிளைஇல. | கிளை | கிளைப் பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 | ஸ்கந்தபுரம் | ஸ்கந்தபுரம் இல. 01. அ. த. க. பாடசாலை |
| 02 | 02 | கோணாவில் | அக்கராயன் அ. த. க. பாடசாலை |
| 03 | 03 | யூனியன்குளம் | யூனியன்குளம் அ. த. க. பாடசாலை |
| 04 | 04 | அக்கராயன்குளம் | அக்கராயன் மகாவித்தியாலயம் |
| 05 | 05 | வன்னேரிக்குளம் | வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் |
| 06 | 06 | ஆனைவிழுந்தான்குளம் | ஆனைவிழுந்தான் அ. த. க. பாடசாலை |
| 07 | 07 | கண்ணகைபுரம் | கண்ணகைபுரம் அ. த. க. பாடசாலை |
| 08 | 08 | ஊற்றுப்புலம் | ஊற்றுப்புலம் அ. த. க. பாடசாலை |
| 09 | 09 | ஸ்கந்தபுரம் மேற்கு | ஸ்கந்தபுரம் இல. 02. அ. த. க. பாடசாலை |

இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளை நிலையங்களிலும் தலைமை அலுவலகத்திலும் பார்வையிட்டு கிளைக்குழுத் தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கா.சுரேந்திரன்
பொதுச்செயலாளர்,
அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அக்கராயன்குளம்.

(சி-33482) (26-11-13)

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ
லோகேஸ்வர சர்மா தம்பதிகளின் செல்வப் புதல்விகள்



செல்வி மயூரி



செல்வி மயூரதி

இன்று (06.03.2004) சனிக்கிழமை
தனது 13ஆவது
பிறந்தநாளைக் கொண்டாடும்
**செல்வி மயூரி**யைப்
பல்லாண்டு வாழ வாழ்த்தி
மகிழ்கின்றோம். அத்துடன், 5ஆம்
தரப்புலமைப் பரிசில் பரீட்சை - 2003
இல் 139 புள்ளிகள் பெற்றுச்
சித்தியடைந்த சரசாலை ஸ்ரீகணேசா
வித்தியாலய மாணவி **செல்வி மயூரதி**யையும் பாராட்டி மகிழ்கின்றோம்.
கல்வியறிவூட்டி நெறிப்படுத்திய **மாதுமை கல்வி நிலையத்தினரையும்**
மனமுவந்து பாராட்டுகின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(29127)(11-13)

பெற்றோர், அப்பப்பா, அப்பம்மா,
சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்.

## இலங்கை தேசத்தின் சமாதானத்திற்காக தெய்வத்தின் திருப்பாதத்தில்.....

இந்த நாடு கடந்த 26 வருடங்களாக துக்கத்தை அனுபவித்து பலவித அழிவுகள், கண்ணீர், வறுமை போன்றவற்றினால் வாடிவருகின்றது. ஆனாலும், இயற்கையின் தெய்வம் மனிதனின் கண்ணீர்த் துன்பத்தை நீக்கி தேவ சமாதானத்தை உண்டுபண்ண ஆயத்தமாக இருக்கிறார். கடவுளின் வார்த்தையின்படி சமாதானம் கடவுளுடைய கரத்திலுள்ளது. எனவே, இந்தச் சமாதானம் நிரந்தரமாக இருக்க இதோ உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். பூமியின் குடிகளின் கவலை, கண்ணீர், துன்பம், நோய், தீராத பிரச்சினை, செய்வினை, பில்லி சூனியம், மாந்திரீக கட்டுக்களிலிருந்து மீட்பைப்பெற தெய்வத்தைத் தேடிவாருங்கள். தெய்வீக சுகத்தையும், ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேற்படி பிரார்த்தனை (11.03.2004) வியாழக்கிழமை மாலை 5.30மணிக்கு *இயேசு ஜீவிக்கிறார், சர்வதேச சுவிசேஷ பணியகம், 401, அளுத்மாவத்தை, கொழும்பு-15*இல் நடைபெறும். தங்குமிடவசதி உண்டு.

காலம்: **12,13,14 மார்ச் மாதம் 2004**
இடம்: **சுகததாஸ ஸ்டேடியம் (உள்ளரங்கு),கொழும்பு - 13**
நேரம்: **மாலை 6.00 மணிக்கு**

*பிரவேசம்: இலவசம்* (29134)(37-11-13)

உ
சிவமயம்

## அருள்மிகு சுன்னாகம் பழநி முருகன் ஆலயம்

### 20 ஆவது ஆண்டு நிறைவு விழா பாடல்.

**06.03.2004**

**பல்லவி**

பழநியம்பதிக்கு வாருங்கள் – அங்கு
பக்தி ஒளிர்வதைப் பாருங்கள்

**அனுபல்லவி**

குருவாய் உருவாய் குருநாதன்
குறை முடித்தருள்வதைப் பாருங்கள்

**சரணங்கள்**

பாதாள கங்கை கீழாக
பழநி மாமலை மேலாக
பழநி மாமலை மேலுள்ள
பக்திபீடத்தின் மேலாக
ஆனந்தப் பழநி அமர்ந்திருந்து
அருளாட்சி செய்வதைப் பாருங்கள்!

ஐந்து தலைகொண்ட பெருநாகம்
அன்பாய் பெரும்படம்தான் விரித்து
அல்லும் பகலும் காவலய்யா
அரிய அருட்பெரும் காட்சியையா
பழநியம் பெருமணச் சாரலிலே
ஆறு பெரும்படை வீடையா!

ஆறு பெரும்படை வீட்டுக்கும்
அனுதினம் ஷஷ்டி கவசமையா
பாடிடும் அன்பர்கள் செயலாலே
பக்தி அங்கு பெருகுதையா
பழநிக்கு வந்தால் ஆனந்தம்
பாடிப் பணிந்தால் பேரின்பம்!

பழநி அப்பன் சாமிக்கு
இருபது ஆண்டு குமரனையா
ஆண்டுவிழாவிலே சாமிக்கு
ஆனந்தம் கொடுக்கும் பூசையப்பா
ஆண்டுவிழாவின் பூரிப்பு
அன்பர்க்குக் கிடைக்கும் அருள்வீச்சு

நித்தமும் பழநியைத் தொழுபவர்க்கு
அட்டமாசித்தி கைகூடும்
கேட்டது கொடுக்கும் பெரும் பழநி
கேடுகள் தீர்க்கும் திருப்பழநி
நம்பிக்கை கொண்டோர் கொண்டாட
நர்த்தனம் ஆடும் பெரும் பழநி.

**சுன்னாகம் பழநி அடியவர்கள்**
ஆக்கம்: வ.சிவனேசன்.

விவசாய, கடற்றொழில் வளங்களைப் பயன்படுத்த

# வடக்கு - கிழக்கில் 10 தொழிற்சாலைகளை ஜப்பான் அரசு அமைக்கத்திட்டம்

## அங்கு சென்று திரும்பிய வர்த்தகக்குழு தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்6

வடக்கு-கிழக்கில் பத்துத் தொழிற்சாலைகளை அமைக்க ஜப்பான் நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாய, கடற்றொழில் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பொருள்களைத் தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் அந்த நாடு முடிவு செய்துள்ளது.

அங்கு சென்று திரும்பிய யாழ். சிறு கைத்தொழில் நுண்ணியர் கைத்தொழில் சங்கத்தின் தலைவர் கே. பூரணச்சந்திரன் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்தின சமாதானத்தின் 'மூலதனம்' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையில் இருந்து 50 வர்த்தகர்கள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் ஜப்பானுக்குச் சென்றது. அக்குழுவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒன்பது வர்த்தகர்களும் இடம் பெற்றிருந்தனர்.

"இக்குழுவில் அங்கம் வகித்த யாழ் 'ஸ்ரார்' தொழில் நிறுவனச் சேவை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் சிறுகைத்தொழில் நுண்ணியர் கைத் தொழில் சங்கத் தலைவருமான பூரணச்சந்திரன் ஜப்பான் பயணம் குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

ஜப்பானில் வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருகின்றது. இதைச் சமாளிப்பதற்காக இலங்கையில் கைத்தொழில் முதலீடுகளைச் செய்ய ஜப்பான் முடிவு செய்துள்ளது.

தமது தொழில்நுட்பத் துறையை முதலிட்டு, இலங்கையில் தொழிற்சாலைகளை அமைக்க இலங்கை அரசுடன் ஜப்பான் அரசு பேச்சுக்களை நடத்துகின்றது. இந்த வகையில் வடக்கு - கிழக்கில் பத்துத் தொழிற்சாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

விவசாயத்துறையில் பழங்ளைப் பதனிட்டு பொதிசெய்தும் கடல் வளங்ளை மீன், இறால், நண்டு போன்றவற்றை பதனிட்டுப் பொதிசெய்தும் ஏற்றுமதி செய்ய இத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன.

அத்துடன் ஏற்றுமதிகளை விரைவாக மேற்கொள்ள வசதியாக காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவும் ஜப்பான் முடிவு செய்துள்ளது - என்றார் அவர்.

இந்த வர்த்தகக் குழுவில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 21 வர்த்தகர்களும் இடம்பெற்றிருந்தனர். அங்கு சென்றிருந்த அவர்கள் அங்கு தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (ஒ-3)



ஜப்பானுக்கு வர்த்தகச் சுற்றுலா மேற்கொண்ட வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 21 வர்த்தகர்கள் ,விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனைச் சந்தித்த சமயம் எடுத்துக் கொண்ட படம். 'சிரான்' அமைப்பின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வினும் காணப்படுகின்றார்.

# கேரளா கைத்தொழில் பேட்டைக்கு இலங்கையிலிருந்து வர்த்தகர் குழு

யாழ்ப்பாணம்,மார்ச்6

இந்தியாவின் மாநிலமான கேரளாவிற்கு இலங்கை வர்த்தகர் குழு ஒன்று அடுத்த மாதம் செல்ல விருக்கின்றது.

கேரளாவில் கைத்தொழில் செயற்பாடுகளைப் பார்த்து, அந்தத் தொழில்களை இங்கையில் அறிமுகம் செய்வதற்காக இக்குழு செல்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை கைத்தொழில் அபிவிருத்திச்சபை செய்துள்ளது.

இக்குழுவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களும் இடம்பெறவிருக்கின்றனர்.

இக்குழுவில் இடம்பெறுபவர்கள் பயணச் செலவைத் தாமே செலுத்த வேண்டும். இவர்களுக்கான வசதிகளை வழங்க இந்திய அரசு இணங்கியுள்ளது.

இந்தியாவில் பெரும் எண்ணிக்கையான தொழிற்சாலைகளைக் கொண்ட கைத்தொழிற்பேட்டை கேரளாவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# 'டொஷிபா' அலுவலக உபகரணங்கள் யாழ்ப்பாணத்திலும் இப்போது அறிமுகம்

## ஐ.ஐ.எஸ். காட்சியறையில் பெறலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

இலங்கையில் அலுவலக உபகரண விற்பனையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான 'ஜோண் கீல்ஸ்' அலுவலக உபகரண நிறுவனத்தின் (John Keells office Automation) ஏக விநியோகஸ்தர்களான ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் விற்பனை நிலையம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனையகத் திறப்புக் குறித்து விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ஐஐ. எஸ்.குழுமங்களின் (I.I.S.Group) ஓர் அங்கத்துவ நிறுவனமான ஐஐஎஸ் அலுவலக உபகரண விற்பனை நிலையம் அனைவருக்கும் நன்கு அறிமுகமான ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனத்தை, டொஷிபாவின் (Toshiba) தயாரிப்புக்களான அலுவலகப்பாவனை உபகரணங்களை விநியோகம் செய்யும் ஏக விநியோகஸ்தர்களான 'ஜோண் கீல்ஸ்' நிறுவனம் (John Keells Office Automation) நியமித்துள்ளது. சிறந்த சேவைகளையும் தரமான தயாரிப்புக்களையும் வழங்குவதால், வியாபாரச் சந்தையில் நன்மதிப்பைப் பெற்றுள்ள இவ்விரு நிறுவனங்களும் கூட்டுச் சேர்ந்துள்ளமை யாழ். மக்களுக்கு வரப்பிரசாதமாகும்.

கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் யாழ். ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்நிகழ்வின் போது யாழ். மாவட்டத்திலுள்ள அரச, தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து வீடுகள் தோறும் சென்று சேவைகள் வழங்கப்பட்டதுடன் விற்பனை நடவடிக்கைகளும் இடம்பெற்றன. மேலும் டொஷிபா (Toshiba) போட்டோ பிரதி இயந்திரங்களின் பாவனையாளர்களுக்குத் தற்சமயம் பாவனையிலுள்ள அவர்களது இயந்திரங்களைப் பரிசோதிப்பதற்கும் இலவச தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. டிஜிட்டல் மற்றும் அனலொக் போட்டோ பிரதி இயந்திரங்கள்; குறிப்பு புத்தகக் கணனிகள் (Note book Computers); 'பக்ஸ்' பிரதி இயந்திரங்கள் மற்றும் தொலைபேசியமைப்புக்கள் என டொஷிபாவின் அலுவலகப் பாவனை உபகரணங்கள் பலவும் இந்த விற்பனை நிலையத்தில் உள்ளன.

**தொழில் வளம்**

மிகச் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, டொஷிபாவின், ஈஸ்ருடியோ டிஜிட்டல், போட்டோ பிரதி இயந்திரங்களையும் இந்த நிறுவனத்தில் பெறுக் கொள்ள முடியும்.

இந்த இரு நிறுவனங்களும் தரமான சேவைகளை வழங்குவதில் உறுதிபூண்டுள்ளன. மேலும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் திறமையான தொழில்நுட்பவியல் ஊழியர்களினால் அளிக்கப்படும் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை வழங்குவதிலும் இந் நிறுவனங்கள் உயர்தரத்தைக் கொண்டுள்ளன.

தொழில்நுட்ப உதவிகள் உடனடியாக கிடைப்பதால், அலுவலக பாவனை உபகரணங்கள் பழுதடைந்தாலும் உடனடியாகவே அவை சீர்செய்யப்பட்டு விடும்

தொழில்நுட்ப உதவிகளுக்கு மேலதிகமாக, டொஷிபாவின் அலுவலகப்பாவனை இயந்திரத் தயாரிப்புக்களிற்குத் தேவையான அனைத்து உதிரிப்பாகங்களையும், இல:360/3, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும் ஐ.ஐ.எஸ். அலுவலகப் பாவனை உபகரணங்கள நிறுவனத்தின் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம். (ஒ)



ஐ.ஐ.எஸ். காட்சியறையை யாழ்.ஆயர் திறந்து வைப்பதையும் ஐ.ஐ.எஸ். குழும நிறுவனங்களின் தலைவர் கே.விக்னேஷ் மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்

# முதலீட்டுச் சபையின் அலுவலகம் திருமலையில்!

யாழ்ப்பாணம்,மார்ச்6

வடக்கு-கிழக்கில் முதலீட்டுச் சபையின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காகத் திருகோணமலையில் பிரதேச செயலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கைத்தொழில் துறையை ஊக்குவிப்பதற்காக முதலீட்டுச்சபை தனது பணிகளை பன்முகப்படுத்தியுள்ளது.

பத்துக்கோடி ரூபா மற்றும் 5 கோடி ரூபா பெறமதியான திட்டங்களை முதலீட்டுச் சபை இதுவரை காலமும் அங்கீகரித்து வந்தது. அதற்குத் தேவையான சலுகைகளையும் அளித்துவந்தது.

முதலீட்டுச்சபையின் அங்கீகாரம் பெறும் திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்ய வரிவிலக்கும், ஐந்து வருடத்துக்கு வரி விலக்கும் வழங்கப்படுவது வழக்கம்.

குடாநாட்டில் தமது பணியை விரிவுபடுத்தும் நோக்குடன் ஒரு கோடி ரூபா மற்றும் 50 லட்சம் ரூபா பெறுமதியான திட்டங்களையும் முதலீட்டுச்சபை உள்வாங்கி அங்கீகரிக்க முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் மூன்று திட்டங்களுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-3)

# காரைநகர் பாடசாலையில் உள்ள மிதிவெடிகளை அகற்றக் கோரிக்கை

காரைநகர்,மார்ச்6

காரைநகர் பாடசாலையின் சுற்றாடலில் உள்ள மிதிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபரிடம் நேரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயச் சுற்றாடலில் உள்ள மிதி வெடிகளை அகற்றக்கோரிய வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

பாடசாலை சுற்றாடலில் உள்ள மிதிவெடிகளை அகற்றுமாறு உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியும் இதுவரை அவர்கள் இந்த விவகாரத்தில் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் -

பாடசாலைக்குரிய மலசல கூடங்கள் இப்பகுதியில்இருப்பதனால் இவற்றைப் பாவிக்க முடியாது ஆசிரியர்களும், மாணவர்களும் இயற்கை உபாதைகளுக்கு உட்பட்டு வருவதுடன், பாடசாலைச் சுற்றாடலில் சுதந்திரமாக நடமாட முடியாத சூழ்நிலை உள்ளதாகவும் - வித்தியாலய அதிபர், அரசாங்க அதிபரிடம் எடுத்து விளக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக அரச அதிபர் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக அதிபர் தெரிவித்தார். (எ-73)

# சிற்றூழியர்களுக்குப் பதவி உயர்வு

தென்மராட்சி,மார்ச்6

யாழ்.சுகாதாரச்சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகப் பிரிவுக்குட்பட்ட சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் 86 சிற்றூழியர்கள் சாதாரண தொழிலாளர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடத்தப்பட்டது.

இதில் சித்தியடைந்த 86 பேருக்கான பதவி உயர்வு நியமனக் கடிதங்கள் யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளன.

(ஒ-8-100-117)

# உயிலங்குளம், மடுச்சந்தியில் வாக்களிப்பு நிலையங்கள்

மன்னார்,மார்ச்6

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக உயிலங்குளம், மடுச் சந்தி ஆகிய இராணுவச் சோதனைச் சாவடிகளுக்கு அருகில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருப்பதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயனந்த திஸாநாயக்காவுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிலங்குளம் சோதனைச் சாவடிக்குச் சமீபாக 12 வாக்குச் சாவடிகளும் மடுச்சந்தியில் 3 வாக்குச் சாவடிகளும் அமைவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அரச அதிபர் தெரிவித்தார் என்று 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.(ஐ-4-7)

# கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர் வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் குடாநாட்டு கல்வியின் மேம்பாடு தொடர்பாக ஆராயப் படவுள்ளது.

இதேவேளை இக் கூட்டத்தில் யாழ். கல்வி வலயங்களில் இருந்து கல்வி சார் பிரதிநிதிகள் நூறு பேர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று கல்வி வலயத்தின் மேம்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது (ஐ-4-6)

ஆவரங்கால்
விவசாயிகள் சங்கம் நடத்தும்

**மாபெரும்**
**மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி**

காலம்: நாளை (07.03.2004) ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 1.00 மணி
இடம்: ஆவரங்கால் சவாரித்திடல்.

பிரபல்யம் வாய்ந்த யாழ்., வன்னி காளைகள் பங்குபற்றும் A,B,C பிரிவிற்கான மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி.
அனைத்து சவாரிப் பிரியர்களும் காணத்தவறாதீர்கள்.
பிரவேசம்- இலவசம்.

விவசாயிகள் சங்கம்,
ஆவரங்கால்.
(29275)(38-21-19-12)



**Diploma in Hardware Engineering**

- 100% செய்முறைப் பயிற்சிநெறி.
- பயிற்சிநெறியின்போது ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு கணனி வழங்கப்படும். எவரும் கற்கலாம். கணனி பற்றிய முன்னறிவு தேவையில்லை.
- ரஷ்ய கணனி பொறியியலாளரினால் தமிழிலேயே விரிவுரைகள் நடத்தப்படும்.
- ஒருபிரிவில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.
- பயிற்சிக் காலம் ஒரு மாதம். காலை, மாலை வகுப்புகள்.

தரமான PI,PII, PIII கணனிகள்,

**Electronic Keyboard (Organ), Vedio DecK (V.C.R.)**

நம்பமுடியாத மலிவு விலையில்

**NORTH LANKA**
**INSTITUTE OF INFORMATION TECHNOLOGY**
பிரதான வீதி, சங்கானை. (29282)
(26-21-12-19)


## நகரசபையின் இழப்புகள் மதிப்பீடு

கைதடி,மார்ச்6

1996ஆம், 2000ஆம் ஆண்டுகளில இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக சாவகச்சேரி நகரசபைக்கு 56லட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்தாறு ரூபா பெறுமதியான இழப்பு ஏற்பட்டிருப்பதாக அதன செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாகப் பொலீஸ் முறைப்பாட்டு அறிக்கையும் பெறப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-10-75)

## வேலை நிறுத்தப் போராட்டம் முடிவடைந்தது

கரவெட்டி,மார்ச்6

திக்கம் வடிசாலை ஊழியர்கள் ஐந்து நாள்களாக மேற்கொண்டுவந்த வேலை நிறுத்தப்போராட்டம் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்தது.

இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பனை அபிவிருத்திச்சபை அதிகாரிகள் இணக்கம் தெரிவித்ததையடுத்தே இந்தப் போராட்டம் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.(ஜ-4-70)

## 'தமிழே என் உயிரே' இசைத்தட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்6

இசையமைப்பாளர் ஆர்.கீதப்பிரியனின் 'தமிழே என் உயிரே' இசைத்தட்டு வெளியீட்டு விழா, நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30மணிக்கு தி.திருககுமரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொள்வார். இசைத்தட்டு பற்றிய ஆய்வுரையை 'கலைஞானகேசரி' எம்.எஸ்.ஸ்ரீதயாளன் நிகழ்த்துவார். (ஜ-4-69)


அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின்
**பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவு**
20 கிராம மாதர் சங்கங்கள். மாதர் குழுக்களுடன் இணைந்து நடத்துகின்ற



**சர்வதேச**
**மகளிர் தினம் - 2004**

"பெண்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்"
- ஆய்வுரைகள்
- நாடக அரங்கு
- கவியரங்கு
- கருத்துப் பரிமாற்றங்கள்
- ஆக்கபூர்வமான முன்மொழிவுகள்

★ காலம் : 08.03.2004 (திங்கட்கிழமை)
★ இடம் : நாவலர் கலாசார மண்டபம்
நாவலர் வீதி, நல்லூர்.

**நிகழ்ச்சி நிரல்**

- உலக மகளிர் தினத்தின் தோற்றமும் அதன் முக்கியத்துவமும்
  **திருமதி சரோஜா சிவச்சந்திரன்** (பணிப்பாளர் மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்)
- பெண்கள் கல்வியில் முக்கியத்துவம்
  **திருமதி வ.மேகலிங்கம்** (அதிபர். யா/நாவற்குழி மகா வித்தியாலயம்)
- பெண்ணிய அரங்கு
  **கல்லின் கசிவு** - நாடக ஆற்றுகை
- அரங்கில் பெண்கள்
  **திருமதி ஞானதாஸ் ஜெயரஞ்சினி** (யாழ். பல்கலைக்கழகம்)
- போராட்ட களத்தில் பெண்கள்
  **தமிழினி** (மகளிர் பிரிவு. அரசியல்துறை)
- வேலைத்தளங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், தீர்வுகளும்
  **க.பிரபா** (பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்)
- வேரடி மண் விளையாட்டு நிகழ்வு - அனுபவக்குறிப்பு
  **க.வனஜா** (கிராம ஊக்குவிப்பாளர்)
- மாதர் சங்கங்களின் முக்கியத்துவமும் அதன் செயற்பாடுகளும்
  **திருமதி வா.தயாளன்** (ஆயுர்வேத வைத்தியர்)
- பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய அரங்காற்றுகை காட்சிகள்
  (கைதடி மேற்கு, கிராம மாதர் சங்கம்)
- நீதிமன்றங்களில் வரும் பெண்கள் பிரச்சினைகளும் அவற்றை எதிர்கொள்ளும் முறைமைகளும்
  **லிங்காதுரைராஜா** (சட்டத்தரணி)
- பாலியல் பிரச்சினைகள் - எதிர்கொள்ளும் வழிகள்
  Dr.G. **பவானி** (மகப்பேற்று நிபுணர். யாழ். போதனா வைத்தியசாலை)
- **கவிதா நிகழ்வு - வரங்கள் சாபங்களாக ......**
- **பெண்கள் பங்குபற்றிய கிராமிய விளையாட்டுக்கள் - ஒருநோக்கு**
  **நா.ஜெயந்தி** (திட்ட உத்தியோகத்தர். TRRO)
- பெண்கள் மீதான பாலியல் ஒடுக்குமுறை
  **த.மோகனாம்பிகை** (களநிலை உத்தியோகத்தர். TRRO)

*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் மாதர் சங்கங்கள், மாதர் குழுக்கள்*

கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
கைதடி நாவற்குழி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
சரசாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
கரம்பைக்குறிச்சி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
பிரான்பற்று மாதர் சங்கம்
தாவடி ஸ்ரீ காளியாம்பாள் மாதர் அபிவிருத்திச் சங்கம்
ஏழாலை ஸ்ரீ முருகன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
கைதடி மேற்கு உதயநகர் மாதர் குழு
வேலம்பிராய் மாதர் குழு
நாவற்குழி கிழக்கு மாதர் குழு
சரசாலை வடக்கு மாதர் குழு
நாவற்குழி 5 வீட்டுத்திட்டம்
வரணி, செல்வா மாதர் குழு
வரணி, மதி ஒளி மாதர் குழு
வரணி, தென்னங்கண்டு மாதர் குழு
சாந்தை மாதர் குழு
சகாயபுரம் மாதர் குழு
தச்சந்தோப்பு மாதர் குழு
காந்திஜி, கொக்குவில் மாதர் குழு
புன்னாலைக்கட்டுவன் மாதர் குழு

பெண்கள் தங்கள் பலத்தில் தங்கி வாழ வேண்டும் என்ற தாயமனதோடு விரும்புகின்றவர்களை இந்த நிகழ்வில் பங்குகொள்ள அழைக்கின்றோம்.

எங்கள் பலத்தில் தங்கிநிற்போம் நாங்கள்.

**பெண்கள் அபிவிருத்திப் பிரிவு, TRRO,**
(சி-33597) 106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (36-12-19-21)



**LEO CLUB OF MANIPAY PARISH**
(SPONSORED BY LIONS CLUB OF MANIPAY PARISH)

எமது சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் நடத்தும் மாபெரும் கலைவிழா

**முத்தமிழ் சங்கமம்**

★ நாட்டியாஞ்சலி
★ இயக்குநர் மாமணி திரு. அ.நற்குணசேகரனின் நெறியாள்கையில் 137ஆவது தடவையாக மேடையேறும்.

**மாப்பிள்ளை தேவை** (முழு நீள நகைச்சுவை நாடகம்)

★ வரலாற்றில் முதற் தடவையாக இலங்கையின் இசை வாத்தியங்களின் முன்னணிக் கலைஞர்கள்

☆ 'விஷாரத' சாரங்கன் ஸ்ரீரங்கநாதன்
☆ 'விஷாரத' ரட்ணம் ரட்ணதுரை
☆ நேசன் தியாகராஜா
☆ சந்ரு ராஜசூரியர்

ஒரே மேடையில் சங்கமிக்கும் **இன்னிசை மழை**

| | | |
|---|---|---|
| இடம் | : | யாழ். வீரசிங்கம் மண்டபம் |
| நேரம் | : | 3.30 மணி |
| காலம் | : | 13.03.2004 (சனிக்கிழமை) |
| அன்பளிப்பு | : | 500/-, 200/-, 100/-, மாணவர்களுக்கு 50/- |

குறிப்பு:- மேற்படி நிகழ்வு 06.03.2004 (சனிக்கிழமை) நடைபெற இருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் இந்த நிகழ்வு 13.03.2004 (சனிக்கிழமை) மாற்றப்பட்டுள்ளது என்பதை ஆர்வலர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**- LEOS.**

விளம்பர அனுசரணை:
*சகலவிதமான இலத்திரனியல் பொருள்களுக்கும் நாடவேண்டிய இடம்:*
**அபிநயா மல்ரி எலற்றோனிக்**
யாழ். வீதி, மானிப்பாய்.

*அன்பளிப்புப் பொருள்கள் அழகுசாதனப் பொருள்களுக்கும் நாடவேண்டிய இடம்:*
**காயத்திரி பான்சி ஹவுஸ்**
யாழ். வீதி, மானிப்பாய். (29289) (26-12-19-21)



**6 ஆம் மாத நினைவஞ்சலி**

தோற்றம்
25
06
1950



மறைவு
06
09
2003

**அமரர் செல்லையா யோகேஸ்வரன்**
(அதிபர். யாழ்/புத்தூர் மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை)

மாதங்கள் ஆறு ஆகியும் ஆறவில்லை
எம் துயரம்: என்றென்றும் உங்கள்
நினைவுடன் வாழும்......

*3 ஆம் கட்டை,*
*கல்வியங்காடு.* (29257)(12-21-19) **மனைவி, பிள்ளைகள்.**

# யுத்தக் கோரத்தில் சிக்கி அழிந்த மண்டைதீவுக்கு விடிவு எப்போது?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மண்டைதீவுக் கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். ஆனால், இதற்கான நடைமுறைகளில் தற்போது தளர்வு ஏற்பட்டுள்ளது. இந்தக் கிராமம் முழுவதும் 1991 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி முழுதாக இடம்பெயர்ந்தது. ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் உயர்பாதுகாப்புப் பிரதேசமான இந்தப் பகுதியில் 300 வரையான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. 1991 இல் இந்தக் கிராமத்தில் ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருந்ததாகக் கிராம சேவையாளர் காரியாலயப் பதிவேடுகளிலிருந்து தெரியவருகிறது. இந்தத் தொகை கடந்த 12 வருடகாலத்தில் மேலும் அதிகரித்து இருக்கும் என்பது யதார்த்தமாகும்.

சில குடும்பங்கள் இங்கு மீளக்குடியமவர்வதிலுள்ள இடர்பாடுகள் காரணமாக யாழ். நகரத்தை அண்டிய கரையோரப் பகுதிகளிலும் பிற இடங்களிலும் தற்காலிகமாகத் தங்கி உள்ளன.

மீளக்குடியமர்ந்தவர்களில் கிராமக் குடித்தொகையில் மூன்றில் ஒரு பங்கினராக இருந்த கடற்றொழிலாளர்களே கணிசமான அளவில் தற்பொழுது மீளக்குடியமர்நதுள்ளனர்.

இவர்கள் புனித சம்பேதுருவானவர் ஆலயச் சுற்றாடலில் மிகநெருக்கமான குடியிருப்புக்களில் முன்பு வசித்துவந்தனர். இடம்பெயர்ந்த இவர்கள் வன்னிப்பிரதேசத்திலிள்ள நாச்சிக்குடா, ஜெயபுரம், மூன்றாம்பிட்டி, மடு, வங்காலைப் பகுதிகளில் தங்கியிருந்துவிட்டுத் தற்போது மீளக்குடியமர்ந்து உள்ளனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள வீடுகளில 90 வீதமானவை இருந்த இடம் தெரியாமல் போயுள்ளன. பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த சில நிரந்தர வீடுகளே எஞ்சியுள்ளன. காணிகளில் எல்லைகள்கூட அழிந்து போயுள்ளன. திருதவென்காட்டுச் சித்திவிநாயகர் ஆலயச் சுற்றாடலிலும் சம்பேதுருவானவர் ஆலயச் சூழலில் உள்ள 3ஆம் வட்டாரத்திலும் 5ஆம் வட்டாரத்தின் சில பகுதிகளிலும் உள்ள சில வீடுகளே ஓரளவு சேதமடையாமல் உள்ளன.

இருந்தபோதிலும் 6ஆம், 7ஆம், 8ஆம் வட்டாரங்களில் உள்ள வீடுகளைத் தவிர ஏனையவை இதுவரை முற்றாக விடுவிக்கப்படவில்லை. கடற்றொழிலாளர் குடும்பங்கள் 3ஆம், 4ஆம், 5ஆம், 2ஆம் வட்டாரங்களில் சொந்தப் பகுதிகளில் - குடியமர முடியவில்லை. இதனால், இவர்கள் 6ஆம், 7ஆம், 8ஆம் வட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வீடுகளில் தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்டிருந்தனர்.

ஒரு வீட்டில் 6தொடக்கம் 10 வரையான குடும்பங்கள் நெருக்கடிக்கு மத்தியில் குடியிருந்தன. இந்த வீடுகளின் உரிமையாளர்கள் மீளக்குடியமர்ந்ததால் இவர்களது நிலை பிரச்சினைக்குள்ளாகியுள்ளது.

'நிக்கொட்' நிறுவனத்தினர் 4ஆம் வட்டாரத்தில் இருந்த ஈச்சந்தரவையில் - தனியாருக்குரிய காணிகளில் - 35 வீட்டுத் திட்டத்தை அமைத்துள்ளனர்.

இந்த வீடுகள் போதுமானதாக இல்லாததால் ஏனைய உறவினர்களும், அயலவர்களும் இதற்கண்மையில் உள்ள தனியாரின் இடங்களில் குடியிருப்புக்களில் தற்காலிக கொட்டில்களை அமைத்துள்ளனர். இவர்களால் நிரந்தரமான சொந்தக் காணிக்குரிய உறுதிகளைச் சமர்ப்பிக்க இயலாதுள்ளதால் இவர்களுக்கான மீள் குடியிருப்பு நிவாரணங்கள், தற்காலிக இருப்பிடம் அமைப்பதற்கான கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை. மேலும் கழிப்பிட வசதிகள், குடிதண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள், அடிப்படைச் சுகாதாரவசதிகளும் கிடைக்கவில்லை குடிசைகள் நெருக்கமாக இருப்பதால் சுகாதாரக்கேடுகள் மலிந்துள்ளன. தொற்றுநோய் பரவும் ஆபத்தும் காணப்படுகிறது.

**செய்திக்கட்டுரை**
**கை.பேரின்பநாயகம்**
*மண்டைதீவுச் செய்தியாளர்.*

சொறி, சிரங்கு, பற்சூத்தை, பார்வைக் குறைவு போன்ற நோய்களால சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மண்டைதீவு கிழக்கில் உள்ள முதலாம், 2ஆம் வட்டாரப் பகுதிகள் பாதுகாப்பு வலயத்திலேயே உள்ளன. முதலாம் வட்டாரத்தின் கரையோரப் பகுதிகளும் துறைமுகப் பகுதிகளும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு மேற்காக உள்ள 2ஆம் வட்டாரப் பகுதியில் 7 கல்வீடுகள் மட்டுமே மிஞ்சியுள்ளன. இந்த வீடுகளிலும் இதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் குடிசை அமைத்துப் பல வசதியீனங்களின் மத்தியில் சிலர் வாழ்க்கையை நடத்திவருகிறார்கள். இவர்களது பிரதான தொழில் புகையிலைச் செய்கையாகும்.

இந்தப் பகுதியில் முன்பு இருந்த பெருமளவிலான வீடுகளும், கார்த்திகேய வித்தியாலயமும் அம்மன் ஆலயமும் அதனைச்சேர்ந்து அமைக்கப்பட்டிருந்த முருகன், பிள்ளையார் ஆலயங்களும் முற்றாக அழிந்துபோய் உள்ளன.

வடகீழ்பகுதிக் கடற்கரையோரத்தில் ஆண்டுதோறும் தீமிதி மற்றும் பொங்கல்விழா நடைபெற்ற கண்ணகை அம்மன் கோயிலும் சிதிலமடைந்து தேடுவார் அற்றுப் போய்விட்டது.

குடாநாட்டில் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களால் மிகக்கோரமாக பாதிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்ட கிராமம் மண்டைதீவு என்பது பலருக்கு இதுவரை தெரியாது. தீவுப் பகுதியில் உள்ள அல்லைப்பிட்டி, மண்கும்பான், ஊர்காவற்றுறை, சுருவில், வேலணை, சரவணைப் பகுதிகளைவிட அதிகளவில் முடமாக்கப்பட்டுள்ளது இந்தக் கிராமம். தென்மராட்சியில் காணமுடியாத கோரமான யுத்த அழிவுகளையும், வடுக்களையும், மனிதஅவலங்களையும், புதைகுழிகளையும் சுமந்துநிற்கும் இந்தச் சிறிய கிராமத்திற்கும் அதில் குடியிருப்பவர்களுக்கும் விடிவு எப்போது என்பதே இப்போதைய கேள்வியாகும். ✦

## சமய சந்நிதிகளில்

காரைநகர்,மார்ச்6

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் மாசிமக உற்சவத்தில் இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு மாசி மகாமக தீர்த்தோற்சவம் இடம்பெறும். (எ-ரி-73)

★ ★ ★

கோப்பாய்,மார்ச்6

ஊரெழு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும். (எ-ரி-72)

★ ★ ★

வலி.தெற்கு,மார்ச்6

உடுவில் மல்வம் ஸ்ரீகந்தசுவாமி ஞானவைரவர் ஆலய மணவாளக் கோல அலங்கார உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறுகிறது.

எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் பகல் அன்னதானமும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் 'பெரிய புராணம்' பொருள் பற்றிய தொடர் சொற்பொழிவும் நடைபெறும். (எ-ரி-152)

★ ★ ★

குடத்தனை,மார்ச்6

சுன்னாகம் வாரியப்புலம் மகாமாரி அம்மன் ஆலயத்தின் தீர்த்தோற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறும். (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்6

உரும்பிராய் காட்டு வைரவர் ஆலயத்தின் மாசிமகத்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி வைரவப் பெருமான் வீதிவலம் வரும் காட்சி இடம்பெறும். தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

காரைநகர்,மார்ச்6

காரைநகர், மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய வருடந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி, தேர் உற்சவமும், 20ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். (எ-ரி-73)

★ ★ ★

சுழிபுரம்,மார்ச்6

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மாசி மகத் திருவிழாவில் இன்று சனிக்கிழமை பூரணைத் திருவிழா நடைபெறும். (எ-ரி-28)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்6

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் மாசி மகத் திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். (எ-ரி)

# இரத்த வங்கிப் பணிப்பாளர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு விஜயம்

இரத்த வங்கிப் பணிப்பாளர் தலைமையில் கொழும்பிலிருந்து வந்த 6 பேர் அடங்கிய குழு, மந்திகை மருத்துவமனைக்கு அண்மையில் விஜயஞ்செய்தது. யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் சங்கரும் இந்தக் குழுவினரோடு உடன்சென்றார்.

மந்திகை மருத்துவமனை இரத்த வங்கியின் செயற்பாடுகள் மற்றும் தேவைகள் குறித்து அதன் பொறுப்பாளருடன் அவர்கள் கலந்துரையாடினர்.

இரத்த வங்கிக்குப் பொறுப்பாக ஒரு மருத்துவர் நியமிக்கப்படாததால் இது சீராகச் செயற்படமுடியாத நிலையில் இருந்து வருகிறது என்றும் - இதனால், அவசர நோயாளர்களுக்கு இரத்தம் தேவைப்படும்போது யாழ். போதனா வைத்தியசாலையின இரத்த வங்கியிலிருந்தே இரத்தம் தருவிக்கப்பட்டு நோயாளர்களுக்கு ஏற்றப்பட்டு வருகிறது என்றும் - அதிகாரிகளிடம் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இரத்த வங்கிக்குப் பொறுப்பாக மருத்துவர் ஒருவரை நியமிப்பதற்கும் - இரு தாதியார்களைக் கொழும்பு இரத்த வங்கிக்கு அனுப்பிப் பயிற்சி அளிப்பதற்கும். இரத்த வங்கிக்கு இரத்தம் சேமிப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் செய்வதாகவும் பணிப்பாளரால் வாக்குறுதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-36-173)

# சைவ மாநாட்டின் 2ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று ஆரம்பமான அகில இலங்கைச் சைவமாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் நடைபெறும். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளின் திருமுறை ஓதலைத் தொடர்ந்து, '21ஆம் நூற்றாண்டில் சைவப் பாடசாலைகளில் சைவம்' என்ற பொருளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உபஅதிபர் ஆறு.திருமுருகனும், '21ஆம் நூற்றாண்டில் சைவ ஆலயங்களின் பரிபாலனம்' என்ற பொருளில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேலும், '21ஆம் நூற்றாண்டில் சைவ சமயச் சடங்குகளின் நிலை' என்ற பொருளில் சைவப்புலவர் சு.செல்லத்துரையும் விரிவுரை நிகழ்த்துவர்.

மாலை நிகழ்வுகள் 'இந்துசாதனம்' பத்திரிகையின் பத்திராதிபர் சுடர் இ.மகேந்திரன் தலைமையில் நடைபெறும். கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் திருமுறை ஓதுவர். தொடர்ந்து 'சைவத்தின் வளர்ச்சியில் இன்றைய இளைஞர்களின் பங்களிப்பு' என்ற பொருளில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை மாணவர்கள் வழங்கும் கருத்தரங்கு நடைபெறும்.

மாலை 5.45மணியளவில் சிவநெறிக்கலாநிதி, சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர் வழங்கும் 'நாவாரப் பாடும் தேவாரம்' என்ற தலைப்பிலான வில்லிசை இடம்பெறும். (எ)

# நூல் வரிசை



நூல் – நாடக வழக்கு
ஆசிரியர் – குழந்தை ம.சண்முகலிங்கம்

எண்பதுகளுக்குப் பின் எழுச்சிகொண்ட ஈழத்து தமிழ் அரங்கின் பிரதான படைப்பாளியாகவும் நாடகக் கல்வியியலாளனாகவும் மிளிரும் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடகச் சிந்தனைகளை 'நாடக வழக்கு' எனும் தலைப்பில் நூலாக வெளியிடுகின்றார்கள். இணுவில் கலை இலக்கிய வட்டத்தினர்.

நாளை 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இணுவை துரை எங்கரசு, பேராசிரியர் சபா.ஜெயராசா, கவிஞர் சோ.பத்மநாதன், ஆசிரியர் ஆறுதிருமுருகன் ஆகியோர் உரையாற்றவுள்ளார்கள்.

கிரேக்க அரங்கம், தமிழ்க்கூத்துகள், இசைநாடகம், நாடகாசிரியர், சிறுவர் நாடகம், நாடகப்பட்டறை மற்றும் மேற்கு நாட்டு இப்சனின் பெண்பாவை வீடு எனப் பல கட்டுரைகளைத் தாங்கிவரும் இந்நூல், சண்முகலிங்கம் பல்வேறு சஞ்சிகை, பத்திரிகைகளுக்கு வழங்கிய எட்டு நேர்காணல்களையும் கொண்டு வெளிவருகிறது. இவற்றில் சமகால ஈழத்து அரங்கில் பேசப்படும் மோடிமைப்படுத்தப்பட்ட அரங்கு, யதார்த்த அரங்கு, மொழிபெயர்ப்பு நாடகங்களின் அவசியம், தேசிய அரங்கு பற்றிய எண்ணப்பாங்கு, கூத்துகளை நவீனப்படுத்துவதில் எழும் சிக்கல்கள் போன்ற பல விவாதங்கள் எழுப்பப்படுகின்றன.

க.பொ.த.சாதாரண தர, உயர்தர பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி நாடகத்துறை மாணவர்களுக்கு மிகவும் வேண்டிய உசாத்துணையாகக் கொள்ளக்கூடிய நூலாக இது வெளிவந்துள்ளமை இதன் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும்.

'மண் சுமந்த மேனியர்', 'அன்னை இட்ட தீ', 'எந்தையும் தாயும்' போன்ற நூறுக்கும் மேற்பட்ட மேடை நாடகங்களை எழுதி, அதன் தரத்தைப் பேணி ஈழத்து நாடக உலகை உலகத் தரத்துக்கு இட்டுச்சென்ற பெருமைக்குரியவர் சண்முகலிங்கம். அவரது நூலைத் தொகுத்து வெளியிடும் வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் காலத்தின் தேவைகருதிச் செயற்பட்டமை கணிப்புக்குரியதே.

**- இந்திரன்.**



நூல்: – ஒரு பேராசிரியரின் வாழ்க்கையும் கல்விச் சிந்தனைகளும்
ஆசிரியர்: – வாழ்நாள் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம்
B.Sc.(Hons.)Cey.M.Sc.(Hawai), Ph.D. (London) Hon.D.Sc. (Jaffna)

யாழ்ப்பாண மண்ணின் ஒரு சிறந்த விஞ்ஞானியும் கல்விமானும் நலிந்த மக்களுக்கு தனது சேவையினை நல்கியவருமாகிய பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தன் வாழ்வினைப் பற்றியும் கல்விச் சிந்தனை தத்துவங்களைப் பற்றியும் மக்கள் எளிதாகப் புரியக்கூடியதாக ஆக்கப்பட்ட நூல் இது.

இந்நூலை வாசிப்பவர்கள் முற்றாக வாசித்தபின்பே நூலைக் கீழே வைப்பர். ஏனெனில் யாவரும் வாசித்துப் பயன்பெறும் தன்மையை இந்நூல் கொண்டுள்ளது. மாணவர்கள் இந்நூலை வாசிப்பதால் சிறந்த கல்வியையும் வாழ்க்கையையும் கடமை உணர்வையும் அறநெறிகளையும் பெற்று வாழ்வதற்கு ஒரு படிக்கல்லாக அமையுமென்பதில் இரு கருத்துக்களிருக்கமுடியாது. சிரேஷ்ட கல்விநிலையை அடைந்து பரீட்சைகளில் வெற்றியடையாமல் விரக்தி நிலையிலிருக்கும் மாணவர்கள் இந்நூலை வாசிப்பதனால் மிகுந்த பயன்பெறுவார்கள். நூலாசிரியர் முதன்முறையில் எஸ்.எஸ்.சி.பரீட்சையில் சித்தியடையவில்லை. அத்துடன், மூன்றாவது முறை எடுத்த பரீட்சையில்தான் பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்து விஞ்ஞானமாணி சிறப்புச் சித்திபெற்று பின்பு மகிமைக்குரிய லண்டன் பல்கலைக்கழக கலாநிதிப்பட்டமும் பெற்று, பல்கலைக்கழக விரிவுரையாளராக, பேராசிரியராக, பீடாதிபதியாக, பதில்துணைவேந்தராகப் பணியாற்றியதுடன், பன்னிரண்டுமுறை வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வுகளுக்கு வேண்டிய கல்வியையும் பெற்று ஆய்வுகளும் செய்து தொண்ணூறு ஆய்வுநூல்களையும் கட்டுரைகளையும் வெளிப்படுத்தியுள்ளார். விஞ்ஞானச் சங்கங்களின் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் முக்கியஸ்தர்களில் ஒருவராகவும் அதன் செயலாளராகவும் தலைவராகவும் பதவிகளை வகித்து அதன் வளர்ச்சியிலும் கண்ணும்கருத்துமாயுள்ளார்.

'கடமையே கடவுள்' என்ற கோட்பாட்டை முன்வைத்துக் கடின உழைப்பும் திட்டமிட்ட அணுகுமுறையும் இவர் முன்னேற்றத்திற்குக் காரணமாகவுள்ளதென்பதை நிரல்படுத்தி தன்வரலாற்றை வரைவதோடு தன் கல்விச் சிந்தனைகள் தத்துவங்களாகக் கனிந்து மக்கள் எளிதாகப் புரியக்கூடிய வகையில் நூலைச் சிறப்பித்துள்ளார். இவருடைய வரலாறு இளைய தலைமுறைக்கு வழிகாட்டியாகவும் உந்துசக்தியாகவும் வாழவழிதெரியாது தத்தளிப்பவர்களுக்கு இது ஓர் ஊன்றுகோலாயிருக்கும்.

**நா.குகராசா**
**யாழ். மாவட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் இணைப்புக் குழுவின் முன்னாள் தலைவர்.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுத் தளபாடங்கள் விற்பனைக குண்டு. தொடர்பு: T.P.: 01-077 6131649. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். (29296)

கலர்மீன்கள், புதியவகை மீன் தொட்டிகள், மோட்டர்கள், அழகுப் பொருள்கள், லவ்பேட்ஸ், கூடுகள், பூங கன்றுகள், பூச்சாடிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி,யாழ்ப்பாணம்.(27846)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. ஒருகிலோ ரூபா 140, இலவசமாக சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு: ரவி, இல.05, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி. ரவி (அஞ்சல் அலுவலகம் அருகில்), சாவகச்சேரி. (C/33583)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29264)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. 1Kg 140/= சுத்தம் செய்தது 240/= தொடர்பு: தாசன், 158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.(29309)

## புறொயிலர் விற்பனைக்கு

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகளை தினமும் சுத்தஞ்செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். கிலோவுக்கு 20 ரூபா வால் விலை குறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: சிவா, இராமலிங்கம றோட், முடமாவடி, திருநெல்வேலி.(29277)

கல்பேட்ஸ், புறொயிலர் என்பன விற்பனைக்குண்டு. தேறிய நிறை 1 Kg 240/= மட்டும் தொடர்பு S.குமரன், 227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (29163)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

வடமாகாணத்தின் காலநிலைக்கு ஏற்ற 5 நாள்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: பாலா, இல.18, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 2226875 (29313)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் 40/=, Prima பேட்டுக்குஞ்சுகள் 60/= 15.03.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். 13.03.2004 முன்பதிவு செய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். க.தனபால சிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), இல.19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை, நல்லூர்.(29263)

## வீடு விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதி, 3ஆம் கட்டை, கொக்குவில் கிழக்கில் 6 பரப்பும் 14 குழியும் (வீட்டுடன்) காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.குமார குலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P. 0776125140. (29221)

## வீடு வாடகைக்கு

சுண்டிக்குளி, சென்.ஜோன்ஸ், சென் பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கு சமீபமாக உள்ள 3 அறைகளுடன் கூடிய சகல வசதிகளுமுள்ள வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:0777-259420. (29271)

## கடை வாடகைக்கு

குருஷோ வீதி, சுண்டிக்குளி பகுதியில் உள்ள கடை ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: Mr.திருச செல்வம்.T.P.:0112-502678. (29270)

## வாணி ஜோதிடம்

கைரேகை, ஜாதகம், குறிப்பு, வீட்டு நிலையம், விவாகப் பொருத்தம் நினைத்தகாரியம், சில வைத்தியத்தில் புலப்படாத வினைய நோய களையும் தெரிந்து கொள்ளலாம். தொடர்பு சி.கணேசன் சோதிடர், யாழ்.பாடி வீதி, பெருமாள் கோவில் முன்பாக காலை 9.30 - பிற்பகல் 2.00 மணிவரை. (29304)

## POSTAL BY SINHALA/ENGLISH

மேற்படி பாடங்களை வீட்டிலிருந்தே தபாலில் நீங்களும் படிக்கலாம். நேரடி வகுப்புகளும் உண்டு. குறுகிய கால பாடப் போதனை விவரங்களுக்கு எழுதவும் அல்லது நேரில் வரவும். திரு.மல்வான, 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (29179)

## கைமாறி விட்டது

கடந்த 28.02.2004 சனிக்கிழமை திருநெல்வேலியில் 55735079 இலக்கமுடைய லுமாலா (ஆண்கள்) சைக்கிளை கைமாறி எடுத்தவர்கள் அதனை துரைராஜசிங்கம் நந்துஜன், சென் செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கில் ஒப்படைத்து தங்கள் சைக்கிளை மீளப்பெற்றுக்கொளளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(29299)

## தவறிவிட்டது

கைதடி நுணாவிலைச் சேர்ந்த கணேந்திரன் ரூபகாந்தன் என்பவரது தே.அ.அ.(இல.833092650V) சம்பியன லேனில் இருந்து கொக்குவில் சந்திக்கு இடையில் பேர்ஸ்சுடன் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். நித்தியானந்தன் பல்பொருள் வாணிபம், சம்பியன் லேன், கொக்குவில்.

(29307)

கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த நாகேந்திரன் கவிதா என்பவரின் தேசிய அடையாள அட்டை (775492058V) உடன் பேர்ஸ் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும் தொடர்பு: போஸ்கோ பதிப்பகம், (நல்லூர்) கொடுத்து உதவவும். (29283)

சரசாலை, சாவகச்சேரியைச் சேர்ந்த கனகசபை சுதாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.751673345), மோட்டார் சைக்கிள் இன்சுரன்ஸ், வரிப்பத்திரங்கள் போன்றன சரசாலைக்கும் பருத்தித் துறைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவும். வாணி ரெக்ஸ், சாவகச்சேரியில் அல்லது யாழ்ப்பாணம், பெரிய கடை வீதியிலுள்ள வாணி ரெக்ஸ். (29312)

## மணமகள் தேவை

மட்டக்களப்பைச் சேர்ந்த 1961இல் பிறந்த M.A. படித்து Ph.d. படிக்க வெளிநாடு செல்லவிருக்கும் மாவட்டத்திற்கு பொறுப்பான அரசாங்க Staff Grade உத்தியோகம் பார்க்கும் குடிப்பழக்கமற்ற, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த இந்து மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட அழகிய மணமகளை கனடாவில் இருக்கும் சகோதரி தேடுகின்றார். சாதகம், குடும்ப விவரம், புகைப்படம், தொலைபேசி இலக்கம் அடங்கிய முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விள.இல.2188, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(29279)

## கண்ணிவெடி விழிப்புணர்வுச் செயலமர்வுகள்

தென்மராட்சி, மார்ச்,6

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் சமூகக்கல்வி, ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கண்ணிவெடி அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறல் தொடர்பான செயலமர்வுகள் வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் 'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளது.

சமூகக்கல்வி பாடஆசிரியர் குழு Iஇற்கு மார்ச் 12,13 ஆகிய திகதிகளிலும்- குழு II ஆசிரியர்களுக்கு மார்ச் 19,20 ஆகிய திகதிகளிலும்-

ஆரம்பக் கல்வி கற்பிக்கும் தரம் 2 ஆசிரியர்களுக்கு மார்ச் 12,13 ஆகிய திகதிகளிலும் -

தரம் 3 ஆசிரியர்களுக்கு மார்ச் 19, 20 ஆகிய திகதிகளிலும் -

தரம் 4 ஆசிரியர்களுக்கு மார்ச் 26,27 ஆகிய திகதிகளிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(எ-117)

## வீடு வாடகைக்கு

*கொழும்பில் உள்ள பிரபல கணனி நிறுவனம் ஒன்றிற்த யாழ்நகரை அண்டிய பகுதிகளில் பலாலி வீதி, திருநெல்வேலி, கந்தர் மடம், கச்சேரியடி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி போன்ற இடங்களில் 03/04 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு:*

T.P 011 –2506819, 071 4804442.

(29315) (21-19-11)

## கொக்குவில் மேற்கு - மணியர்பதி இந்து இளைஞர் மன்றம்

### பரீட்சைக்குழு

### சைவசமய அறிவுப் போட்டிப் பரீட்சை - 2004

பரீட்சை நிலையம்: யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
பரீட்சைக் காலம்: 07 பங்குனி 2004 (ஞாயிற்றுக்கிழமை)

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு (தரம்6,7) :- | காலை 9.00 தொடக்கம் 10.30 வரை (புதிய நேரம்). |
| மத்தியபிரிவு (தரம் 8,9):- | காலை 9.00 தொடக்கம் 10.30 வரை (புதிய நேரம்). |
| மேற்பிரிவு (தரம் 10,11):- | காலை 11.00 தொடக்கம் பி.ப.1 வரை (புதிய நேரம்). |

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சைச் சுட்டெண்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சை ஆரம்பமாவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்பு பரீட்சை நிலையத்திற்கு வருகைதரவும்.

(29308)(34-21-19) - செயலர்.

## பொன்விழா வாழ்த்து

இன்று பொன்விழாக் காணும்

**இலங்கநாதன் சறோஜாதேவி** தம்பதியினரை

புளியங்கூடல் அப்பா, அம்மா யாழ்ப்பாணத்தில் இருக்கும் அண்ணா, அண்ணி, பிள்ளைகள் அனலைதீவில் இருக்கும் தம்பி வசந்தகுமார், மச்சாள் ரோகினி நெடுந்தீவில் இருக்கும் தங்கை யோகா, மச்சான் சண்முகலிங்கம், யாழ்ப்பாணத்தில் இருக்கும் தங்கை சித்திரா, மச்சான் புவனேந்திரன், பிள்ளைகள், சுவிஸில் இருக்கும் தங்கை இந்திரா, மச்சான் உதயகுமார், பிள்ளைகள், ஜேர்மனியில் இருக்கும் ஜெயக்குமார், ரவிக்குமார் மச்சான், லதா பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இவரை பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கணவர்: இலங்கநாதன்
பிள்ளைகள்: கார்த்திகா,காண்டீபன்.

*A.G.A,கந்தோர் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*

(29286) (21-11-19)

## 21ஆவது பிறந்த நாள் வாழ்த்து

யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த

**ஜெகன்மோகன் - வசந்தி** தம்பதிகளின்

செல்வப் புதல்வன்

# நிர்மலன்



தனது 21ஆவது பிறந்த நாளை இன்று (06.03.2004) சனிக்கிழமை பிரான்ஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

நிர்மலனை அப்பா, அம்மா, தங்கைமாரான நித்தியா, நிசாந்தினி, தம்பி கஜரூபன், அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார் (கனடா), மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர் அனைவரும் நயினாதீவு நாகபூசணி அருளால் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என மனமார வாழ்த்துகின்றனர்.

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (29300) (26-21-11-19)

தகவல்:
ஜெகன்மோகன் (தந்தை)

# மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில்

## சிகிச்சை பெறவுள்ள அனைவருக்கும்

**நீங்கள் மகரகமைக்கு வெகுதொலைவில் வசிப்பவராயின் சிகிச்சைக்காக அடிக்கடி மகரகமை புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியிருப்பின் நீங்கள் தங்கியிருக்க வசதியான ஓரிடத்தை நாம் வழங்குவோம்.**

**நீங்கள் வைத்தியசாலையில் தங்கவேண்டியேற்பட்டு, நோயாளியைப் பார்க்கும்வேளை தவிர்ந்த ஏனைய நேரங்களில் உங்களது உறவினர்கள் (விசேடமாக பெண்கள்) தங்க வைத்தியசாலைக்கு அருகில் அருமையான தங்குமிடத்தை எம்மால் வழங்கமுடியும்.**

எமக்கும் வைத்தியசாலைக்கும் இடையிலான தூரம் 400 மீற்றர்கள் மட்டுமே.

## சாந்தி இல்லம்

*இல.161/1, நல்லவத்த வீதி, மகரகம.*

நேரில் அல்லது தொலைபேசியில் அழையுங்கள் தொ.பே.:2837983

## தங்குவதற்குக் கட்டணம் அறவிடப்படமாட்டாது

"சாந்தி இல்லத்தில்" சாந்தமாகத் தங்குங்கள்

(C/33549) (34-11-19-21)



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் போர் கிரிக்கெட் போட்டி நேற்று ஆரம்பமானது. இதன் தொடக்க நிகழ்வின் போது (வலம் இருந்து இடமாக) பிரதம விருந்தினரும் சிறப்பு விருந்தினர்களும் மைதானத்துக்கு அழைத்து வரப்படுவதையும் , இறைவணக்கம் செலுத்தப்படுவதையும், கிரிக்கெட் அணிகளின் வீரர்கள் பிரதம விருந்தினரான தொழிலதிபர் ச.மகேந்திரனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும் - இரு பாடசாலைகளின் அதிபர்களும் பாடசாலைக் கொடிகளை ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:அலுவலகச் செய்தியாளர்)*





# மாவீரரின் கனவை நெஞ்சில் சுமந்தபடியே தேர்தல் களத்தில் நாம் நிற்கின்றோம்!

## கூட்டமைப்பு வேட்பாளர் சிறில் தெரிவிப்பு

கொழும்புத்துறை,மார்ச்6

மாவீரர்களின் கனவை நெஞ்சில் சுமந்த படியே நாம் தேர்தல் களத்தில் நிற்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர் சு.சிறில்.

தெல்லிப்பழை பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் முன்னோடிக்கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு இவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தீவு வரலாற்று நோகில் இரண்டு நாடுகளைக் கொண்டது. இதனைச் சிங்கள தேசம் ஏற்றே ஆக வேண்டும்.

தந்தை செல்வா, அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம், அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் ஆகியோர் நாடாளுமன்றத்தில் சாதிக்க முடியாத எதனையும் நாம் சாதித்து விடமுடியாது. இந்த நாடாளுமன்றம்தான் இன அழிபபுக்கும் நில ஆக்கிரமிப்புக்கும் காரணமாக அமைந்தது. இங்கு நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கள் தமிழனின் வாழ்வுக்கு சாவுமணி அடித்தன.

ஆனாலும் எமது விடுதலையின் வேகத்தை மழுங்கடிக்கும் பேரின வாதிகளின் அடிவருடிகள் அங்கே சென்று எமது உரிமைக்கு ஆப்பு வைக்கக் கூடாது என்பதற்காகவே நாம் இன்று தேர்தல் களத்தில் நிற்கின்றோம்.

அஹிம்சை முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு அரசு ஆயுத முனையில் பதில் கூறியது. ஆயுதத்தை ஆயுதத்தால் வெற்றி கொள்



ளவே தேசியத்தலைவர் ஆயுதப்போராட்டத்தை தீர்க்க தரிசனத்துடன் ஆரம்பித்தார். அதில் பல வெற்றிகளைப் பெற்று மிகப் பலத்துடன் இன்று நிற்கின்றோம்.

அத்துடன் சிங்கள அரசுகள் புலிகள் பயங்கரவாதிகள் சமாதான விரோதிகள் எனச் செய்த பொய்ப் பிரசாரங்கள் இன்று தவிடு பொடியாகி விட்டன. போர்நிறுத்த உடன்பாட்டை பொறுமையுடன் கடைப்பிடிப்பதிலும், சமாதான காலத்தில் கொடுத்த உயிர்களின் விலையும் அதை நிரூபித்துள்ளன.

தமிழ்மக்களின் போராட்டம் நீதியானது, நியாயமானது என முழு உலகமும் புரிந்துள்ளது. இத்தேர்தலும் உரிமைக்கான போராட்டத்தின் ஒரு வடிவமே.

எமது அபிலாசைகள் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் இது தான் ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் சந்திக்கும் கடைசித்தேர்தலாக இருக்கும். அடுத்த தேர்தல் தமிழீழத்தில் தான் நடக்கும்.

நாங்கள் மட்டும் வேட்பாளர்கள் அல்ல. தமிழ்மக்கள் அனைவருமே வேட்பாளர்கள் தான். பெறப்போகும் வெற்றி தமிழ்மக்களின் வெற்றியாகும்.

இன்று நீங்கள் தகுந்த முடிவை எடுக்காவிட்டால் மீண்டும் பல ஆண்டுகள் அவலங்கள் துன்பங்களுடன் கண்ணீர் சிந்த வேண்டிவரும். ஆகவே சிந்தித்து வாக்களியுங்கள் - என்றார் அவர். (ஒ-30)




# வலி.வடக்கு நலன்புரி நிலையங்களில் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரம்

தெல்லிப்பழை,மார்ச்6

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் பிரமுகர்கள் மக்களைச் சந்தித்துப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

(ஒ-150)



பொதுஇடங்களில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் பிரசார சுவரொட்டிகளை அகற்றும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. யாழ்.நகரிலும் பொலீஸார் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். நகர் பொதுச் சுவர் ஒன்றில் இந்தப்பணி இப்படி மேற்கொள்ளப்பட்டிருந்தது. பூசப்பட்ட தாரின் ஊடாக வீட்டுச் சின்னம் தெரிகிறது...!

# புதிய இடதுசாரி முன்னணியின் பிரகடனத்தில் தமிழர் தாயகத்துக்கு அங்கீகாரம்

புதிய இடதுசாரி முன்னணி தனது தேர்தல் பிரகடனத்தில் தமிழர் தாயகத்தை அங்கீகரிப்பதாக தெரிவித்துள்ளது.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதிய இடதுசாரி முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில் அக்கட்சியின் தேர்தல் பிரகடனம் வெளியிடப்பட்டது.

கட்சியின் கொழும்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தமது தேர்தல் பிரகடனம் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தற்போதைய சமாதான சூழலைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதே இன்றைய அவசியத் தேவையாகும். விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு ஜனநாயக தீர்வொன்றினை எட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இனநெருக்கடித் தீர்வில் முஸ்லிம் மக்களின் சமத்துவ உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மலையகத் தமிழர், பறங்கியர், மலையாளிகள், மலேயர் மற்றும் கிறிஸ்தவமக்களின் நியாயமான உரிமைகளும் அங்கீகரிக்கப்படவேண்டும்.

அதேநேரம் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) கூட்டு முன்னணி சிங்களப்பேரினவாதம் தோற்கடிக்கப்படவேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையையும், அவசரகாலச் சட்டம் போன்ற அடக்குமுறைச்சட்டங்களையும் அகற்றி ஜனநாயகம் மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்கான நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரு கட்சிகளும் சர்வதேசநாணய நிதியம், உலகவங்கி என்பவற்றின் கொள்கையை முன்னெடுத்துச் செல்கின்றன. ஒரே கொள்கை, வார்த்தை ஜாலங்களும், நிறமுமே வேறுபட்டுக் காணப்படுகின்றன.

சிஹல உறுமயவின் பின்னணியில் தேர்தல் களத்தில் குதித்துள்ள பௌத்த மதகுருமார்களின் பௌத்த ராஜ்ஜியம் என்பது கம்போடியாவின் பொல்பொட், உகாண்டாவின் இடி அமீன் ஆகியோரின் சர்வாதிகார ராஜ்ஜியங்களுக்கு சமமானது. இனவாத சேற்றுக்குள் குதித்துள்ளவர்கள் அதன் பலாபலன்களை அனுபவித்தே தீர வேண்டும் என்றார் அவர்.

# யாழ். தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் தொகை 6,44,279

அச்சுவேலி,மார்ச்6

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 6 லட்சத்து 44 ஆயிரத்து 279 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 582 வாக்களிப்பு நிலையங்கள் தொகுதிவாரியாக நிறுவப்படவுள்ளன.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகளிலும் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையும் வாக்களிப்பதற்கு நிறுவப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கையும் வருமாறு:

| தேர்தல்தொகுதி | வாக்காளர் தொகை | வாக்களிப்பு நிலையம் |
|---|---|---|
| ஊர்காவற்றுறை | 51,911 | 47 |
| வட்டுக்கோட்டை | 61,283 | 57 |
| காங்கேசன்துறை | 64,434 | 58 |
| மானிப்பாய் | 65,218 | 62 |
| கோப்பாய் | 61,403 | 60 |
| உடுப்பிட்டி | 54,087 | 53 |
| பருத்தித்துறை | 45,457 | 43 |
| சாவகச்சேரி | 57,379 | 51 |
| நல்லூர் | 67,672 | 53 |
| யாழ்ப்பாணம் | 57,460 | 45 |
| கிளிநொச்சி | 57,975 | 53 |

பாதுகாப்புக் காரணங்கள் மற்றும் பல்வேறு வசதிகளைக் கருத்தில்கொண்டு வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி அமைப்பு முறையில் நிறுவப்படலாம் என அறியப்படுகின்றது. நடந்துமுடிந்த தேர்தல்களில் வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி அமைப்பு முறையில் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஒ-11-ரி)

## அத்தாட்சி அலுவலருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்6

எதிர்வரும் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புப் பணிகளுக்கு பொறுப்பாளர்களாகப் பணியாற்ற உள்ள அத்தாட்சி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கருத்தரங்கு எதிர்வரும் 11 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-3)


## ஈ.பி.டி.பி. பிரசாரம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் மல்லாகம், தெல்லிப்பழைப் பகுதிகளில் ஒலிபெருக்கி கட்டப்பட்ட வாகனம் மூலம் தேர்தல் பிரசார நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களுக்குப் பாதுகாப்பாகப் பொலீஸாரும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபட்டு இருந்தனர்.

ஏழாலைப் பகுதியில் ஈ.பி.டி.பியினர் வீடுவீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (ஒ-86)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
முன்னாள் பிரதி அதிபர்

### உயர்திரு. சின்னத்துரை சண்முகராஜா

Dip.in.Fine Art (அரசினர் நுண்கலைக் கல்லூரி)
Sp.Tr.Art (பலாலி ஆசிரியர் கலாசாலை)
**S.L.T.S I, S.L.E.A.S III**

அவர்கள் 2003 இல் "கலாபூஷணம்" கௌரவ விருது வழங்கிக கௌரவிக்கப்பட்டிருத்தல் குறித்து நாம் பெருமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவரது கலைப்பயணம் தொடர்ந்து சிறப்புற்றுத் திகழவும் பல்லாண்டு காலம் வாழவும் இறையாசிவேண்டித் துதிக்கின்றோம்.

சித்திரமும் வடிவமைப்பும்
யாழ். பல்கலைக்கழகம்.

**4 ஆம் வருட மாணவர்கள்.**

(29314) (34-12-17)

## DEPARTMENT OF HEALTH SERVICE CALLING FOR TENDER
TEACHING HOSPITAL, JAFFNA

**Notice**

Further to the Advertisement appeared in the 'Udayan' News paper on 05.03.2004 regarding calling for Tenders. The following corrections are made in the Original Advertisement.

1. Date of Closing the Tender will be on 16.03.2004 at 10.00am
2. Contractors having valid registration of M8 under ICTAD and NCCASL

Dr.S.Sathurmugam,
Director,
G.H.Jaffna.

(C/33916) (12-17)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை இராசையா (ஆச்சாரியார்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசையா (ஆச்சாரியார்) அவர்கள் 02-03-2004 செவ்வாய்க் கிழமை இரவு இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பார்வதியின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை வள்ளியம்மையின் மருமகனும் காலஞ்சென்ற சீவரத்தினத்தின் (சின்னமணி) அன்புக் கணவரும் செல்வராஜா, உதயகுமார், சிவகுமார் ஆகியோரின் தகப்பனாரும் மகேஸ்வரி, சாந்தினி ஆகியோரின் மாமனாரும் சங்கீதனா, இராசிகன், துர்க்கேசன், உசாயினி, நிசாயினியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த (03-03-2004) புதன்கிழமை கிராய் இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.* (C/33923)(40-12-17)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

### மயில்வாகனம் கணேசமூர்த்தி
(இளைப்பாறிய இ.போ.ச.கணக்காளர்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கைவசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கணேசமூர்த்தி அவர்கள் கடந்த வியாழக்கிழமை (04.03.2004) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - பரமேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற தனலட்சுமிதேவியின் அன்புக் கணவரும் கோகுலபாலன் (இராமநாதன் நுண்கலைக்கழகம்), கோகுலரமணன் (கொழும்பு தமிழ்ச் சங்கம்), கோகுலநிருபன் (வெளிக்கள உத்தியோகத்தர், ஜனசக்தி காப்புறுதி), அனிதா (இணுவில் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பற்பராஜா (அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி), ஜெயந்தி (கனடா), ரகுதாஸ் (லண்டன்), ரவிதாஸ் (லண்டன்), ஜெயதாஸ் (பொறியியலாளர் கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சற்குணதேவி, கோகுலவதனி, இந்திரா, கோமதி, ஈசன் ஆகியோரின் மைத்துனரும் பத்மநாதன் (இளைப்பாறிய காணி அதிகாரி), சோதிநாதன் (இளைப்பாறிய புகைவண்டிப் பிரதான பாதுகாவலர்) ஆகியோரின் சகலனும் சரோஜினிதேவி, சகுந்தலாதேவி, கதிர்வேல்அரசன், சாரதா ஆகியோரின் மைத்துனரும் யசோதா, டினேஸ், ஜெனித்தா, தனேஷா, ,துஷ்யந்தன் ஆகியோரின் சித்தப்பாவும் பிரதாப், கம்ஷா, சுயான், கிஷான், சிந்துஜா, யாதவன் ஆகியோரின் பெரியப்பாவும் சகானி, அஸ்விகா, அகல்யா, லாவன்ஜா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தனபதி,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:
கோகுலபாலன்
(மகன்-கோபி)
T.P. NO.: 0776016334.

(29335) (38-12-17)

## பல்கலை. பட்டமளிப்பு திட்டமிட்டபடி நடைபெறும்

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ் பல்கலைக்கழகத்தின் பொதுப பட்டமளிப்பு விழா திட்டமிட்டவாறு எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக் கிழமை நடைபெறும் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (எ)

## பதில் கடமையில் கிராம அலுவலர்கள்

தென்மராட்சி,மார்ச்6

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்களின் சேவை நிறுத்தப்பட்டதையடுத்து அந்தப் பிரிவுகளுக்கு பதில் கடமை அடிப படையில் பின்வரும் கிராம அலுவலர்கள் பிரதேச செயலரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கிராம அலுவலர்கள் தமது பிரிவுக்குரிய கடமைகளுடன் மேலதிகமாக இப்பிரிவுகளில் பதில் கடமை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

கல்வயல் பிரிவு வ.இராசரத்தினம் -

மந்துவில் கிழக்கு பிரிவு வ.வேல்முருகு -

எழுது மட்டுவாழ் வடக்கு பிரிவு பொ.நவரத்தினராசா -

நாவற்குழி மேற்கு ஆ.நடராசா -

வரணி இயற்றாலை இ.ராசகுமாரன் -

கைதடி மத்தி சு.செல்வராசா -

மேற்படி பிரிவுகளுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10-117)

## ரேகி தியானம்

இத்தியானத்தால் தீராத பல நோய்களை மாற்றலாம். சுகம்பெற்றோர் இங்கும் வெளிநாட்டிலும் உள்ளனர். இத்தியானப் பயிற்சி அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. இத்தியானவழியில் நோய் குணப்படுத்தல் நிறுத்தப்பட்டுள்ளது.

*விரும்பியோர் தொடர்புகொள்ளவும்.*

**சி.கணேசன்**
22/1, கச்சேரி வீதி, நல்லூர். (29303)

## விற்பனைக்கு

கையடக்கத் தொலைபேசி பற்றரிகள், உதிரிப்பாகங்கள், கவர் மற்றும் பல்வகைக் கைக்கடிகாரங்கள போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

**தமிழ் எலக்ரோனிக்**
குளங்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு. (29322)
T.P.:0777-178669, 0214590117.

## வேம்பு, மா மரங்கள் ஏல விற்பனை

இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது சமாச அலுவலக வளவில் உள்ள ஒரு வேப்ப மரமும் மாமரமும் 10.03.2004 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. தேவைப்படுவோர் கேள்வியைக் கோரி பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொளகின்றேன்.

மரங்களைப் பார்வையிட விரும்புவோர் திங்கள், செவ்வாய் அலுவலக நேரத்தில் சமுகமளிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண பனை தென்னைவள அபி. கூ.ச. சமாசம்.

(சி-33925)(12-17)

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூ.சங்கம் (வரையறுக்கப்பட்டது).

### முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தில் வாகன அணிப்பதிவு செய்த பாரவூர்திகளை லங்கா சிமெந்து நிறுவனம் எடுத்துவரும் சிமெந்தினை ஏற்றி இறக்குவதற்காக இன்று (06.03.2004) சனிக்கிழமை காலை 8 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறைக்குக் கொண்டு வருமாறு பாரவூர்தி உரிமையாளர் களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்,
யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி
உரிமையாளர் கூ.சங்கம் (வ.து).

(29320) (26-12-17)

## அபிராமி அழகு நிலையம்

மணப்பெண் அலங்காரம், Herbel Gold Pearl Facial, Pedicure, Manicure, Threading, Waxing, கேக் ஐசிங், சாறி பிளவுஸ் Cutting, Hair Style.

✦ கட்டணக் கழிவுடன் புதிய வகுப்புகள் 08-03-2004 பிற்பகல் 3மணிக்கு ஆரம்பம்.

✦ பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றும் முதல் 25பேருக்கு Costume Jewellery வகுப்பு இலவசம்.

தொடர்புகளுக்கு:
"தேன்மதி",
43, பூதராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(நல்லூர் சட்டநாதர் வீதி, 2ஆம் ஒழுங்கை)

(29321)(26-12-17)

## Jayoda ஜயோதர ජයෝදා

### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல 7069147 முதல் 7082664 வரை
சீட்டிழுப்பு இல.12 திகதி 04-03-2004

வெற்றி எண்கள் **7 9 0 3 8 1** சுப்பர் எண் **7**

சுப்பர் ஜக்பொட் பரிசு **14,310,675/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் பெற்றோர் | வெற்றி தொகை | பரிசுத் | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 14,310,675/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | - | 1,000,000/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 600,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 120 | 5,000/- | 600,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,188 | 500/- | 594,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 11,894 | 50/- | 594,700/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 117,836 | 10/- | 1,178,360/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 16 | 5,000/- | 80,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 117 | 1,000/- | 117,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,190 | 100/- | 119,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 11,790 | 20/- | 235,800/- |
| மொத்தம் | 144,163 | | 4,118,860/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.4,118,860/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட் ரூ.**14,641,325/-**

தொடர் இல. 6106567க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மார்ச் 08ம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7070442-6-48
7078654-0-58
7072960-1-16
7075774-3-49
7072333-5-21

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.



வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் கலாசார விழா அளவெட்டி சுப்பிரமுனிய சுவாமிகள் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த விழாவில் கௌரவிக்கப்பட்டவர்களான: க.நாகலிங்கம் (இலக்கியம்), இ.கேதீஸ்வரன் (நாதஸ்வரம்), வீ.கே.நடராஜா (இசை), ந.தட்சணாமூர்த்தி (ஓவியம்), ஐ.சிவபாதம் (மிருதங்கம்), வ.செனகரட்னம் (நாடகம்), மா.தேவராசா (நாடகம்), க.அமரசிங்கம் (நாடகம்) ஆகியோரையும் விழாவில் இடம்பெற்ற இரு கலை நிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)

# சென்.ஜோன்ஸ் பழைய மாணவர் சங்க நூற்றாண்டுக் கொண்டாட்டம் இம்மாதம்

மண்டைதீவு,மார்ச்6

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டுவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 22ஆம், 23ஆம் 24 ஆம் திகதிகளில் வெகுவிமர்சையாக நடைபெறவிருக்கின்றன.

22ஆம் திகதிய காலை நிகழ்வுக்கு பழையமாணவர் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவரும் மாலை நிகழ்விற்கு கொழும்புக் கிளைத் தலைவரும் தலைமை வகிக்கவுள்ளனர்.

மூன்றாம் நாள் நிகழ்வுகளுக்கு லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் தலைமை வகிப்பார். முதலாம் நாள் நிகழ்வில் நூற்றாண்டு விழா மலர் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது. கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் நூலை வெளியிட்டு வைப்பார்.

பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழா நினைவாகக் கல்லூரியில் அமைக்கப்படவிருக்கும் ஆசிரியர் விடுதியின் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லும் அன்றையதினம் நடப்படவுள்ளது.

இதேவேளை - எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெறவுள்ள 'வடக்கின் பெரும்மோதல்' (Battle of North) கிரிக்கெட் போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரியின் நூற்றாண்டு விழாத் துடுப்பாட்டமாக (Centenary Big Match) பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. (ஐ-4-88)

# இணுவில் சாஸ்தா குருகுலத்தின் கல்விக்கூடம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், இணுவில் தர்ம சாஸ்தா குருகுலத்திற்கென திருகோணமலை ஸ்ரீபத்ரகாளியம்மாள் தேவஸ்தானத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கல்விக்கூடம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மதவழிபாடுகளோடு திறந்துவைக்கப்படும்.

திருமலை ஸ்ரீபத்ரகாளி தேவஸ்தான பிரதமகுரு வேதாகமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் இந்தக் கல்விக்கூடத்தைக் குருகுலத்தின் நிர்வாகி பிரம்மஸ்ரீ தனு. மகாதேவா வாத்தியாரிடம் கையளிப்பார்.

இக்குருகுலத்தில் பிராமண மாணவருக்கு இலவசக் கல்வி, தங்கும் இடவசதி, உணவு போன்றவற்றை வழங்கி அவர்களுக்கு உரியமுறையில் வேதம் மற்றும் ஆகம ஞானத்தைப் போதித்து, பல சிவாசாரியார்களை உருவாக்கும் பணியைத் தனு. மகாதேவ வாத்தியார் மேற்கொண்டு வருகின்றார்.

இப்பணிக்குக் கல்விக்கூட வசதியின்மை என்ற குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு திருமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா சோ.இரவிச்சந்திரக் குருக்கள் கட்டடம் ஒன்றை அமைக்க முன்வந்தார்.

சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் இரண்டு அறைகள் மற்றும் பெரிய மண்டபம் உள்ளடங்கலாக சகல வசதிகளையும் கொண்டதாக இக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஆரம்பமான கட்டடப்பணி தற்போது பூர்த்தியடைந்ததையடுத்து அது நாளை காலை திறந்துவைக்கப்படவிருக்கின்றது. (க)

# குப்பை, கழிவு கொட்டப்படுவதால் இணுவில் வீதியில் சுகாதாரச் சீர்கேடு

வலி.தெற்கு,மார்ச்6

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்துக்கு அருகில் இணுவில் நோக்கிச் செல்லும் வீதியின் இருமருங்கிலும் உள்ள காணிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

வயற்காணிகளை ஊடறுத்துச் செல்லும் இவ்வீதியிலுள்ள கைவிடப்பட்ட காணிகளில் புற்றைகள் வளர்ந்து காணப்படுவதால் அவை குப்பைகளைக் கொட்டுவதற்கு வசதியாக அமைந்துள்ளன.

இக்காணிகளில் தகரங்கள், பேணிகள், இரும்புகள், இறைச்சிக்காக வெட்டப்படும் மிருகங்களின் கழிவுகள், சிகை அலங்காரிப்பு நிலையங்களில் இருந்து அகற்றப்படும் தலைமுடி எனப் பலவித கழிவுகளும் கொட்டப்படுகின்றன.

இக்கழிவுகள் நாய்கள் போன்ற பிராணிகளால் கிளறப்பட்டு தெருவை மூடிக்காணப்படுவதோடு வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாகவுமுள்ளன.

இவற்றுக்கு அண்மையில் இராமநாதன் கல்லூரிக்குச் சொந்தமான காணியில் குடியிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களும், இப்பகுதி விவசாயிகளும் இதனால் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. அத்துடன், சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையிடம் இக்குப்பைக் கழிவுகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அப்பகுதி மக்களும், விவசாய சம்மேளனத்தினரும் கோரி உள்ளனர். (ஒ-152)

# காலாவதியான பொருள் உள்ள கடையின் உரிமையாளர் மீது கடும் நடவடிக்கை!

## சுகாதார அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளின்போது மனித பாவனைக்குதவாத மற்றும் காலாவதியான உணவுப் பொருள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த உணவகம் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகசபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்களில் மனித பாவனைக்குதவாத, காலாவதியான சுட்டுத் துண்டு இன்றிப் பொதிசெய்யப்பட்ட உணவுப் பொருள்களை விற்பனைக்கோ அல்லது களஞ்சியப்படுத்தியோ வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த வியாபார நிலைய உரிமையாளர் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார். (ஒ-10-6)





வடமராட்சி கம்பன் கழகத்தினால் நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட சேக்கிழார் தின விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் சொற்பொழிவாற்றுவதையும், பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அரங்க இராமலிங்கம் மற்றும் சிவஸ்ரீ எஸ்.சுப்பிரமணியக்குருக்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: கரவெட்டிச் செய்தியாளர்)

# தென்மராட்சி தெற்குப் பகுதியில் மூன்று ஆலயங்களில் நித்திய பூஜை

## நடத்தப் படையினர் அனுமதி

தென்மராட்சி,மார்ச்6

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ, கைதடி - நாவற்குழி ஆகிய பகுதிகளில் உள்ள மூன்று ஆலயங்களில் நித்திய பூஜை நடத்த அனுமதிக்குள்ளதாக 52ஆவது படையணி உயர் அதிகாரி தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.

மறவன்புலோ தோப்புப்பிள்ளையார் ஆலயம், கைதடி - நாவற்குழி பிரிவில் ஸ்ரீவள்ளியம்மன் ஆலயம், முருகன் ஆலயம் ஆகியவற்றில் நேற்றுமுதல் நித்திய பூஜைகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமரின் விசேட பணிப்பின் பேரில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இந்த ஆலயங்களில் வழிபாடு நடத்த அனுமதி வழங்கப்பட்டது. அப்போது ஆலயத்திற்குச் சென்ற மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் இந்த ஆலயங்களில் நித்திய பூஜை நடத்தப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

52ஆவது படையணித்தளபதி சார்பில் லெப்.கேணல் யு.டி.சி.பீ பெரேரா ஆலயங்களில் நித்திய பூஜைக்கு அனுமதி வழங்கப்பட்டதற்கான கடிதத்தினைப் பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## சங்கீத சபையின் ஆராதனை விழா

வலி.தெற்கு,மார்ச்6

சற்குரு ஸ்ரீ தியாகராசா சுவாமிகளின் 157ஆவது ஆராதனை விழாவையும் தமிழிசை விழாவையும் வட இலங்கை சங்கீத சபை நடத்தவுள்ளது.

சற்குரு ஸ்ரீ தியாகராசா சுவாமிகளின் ஆராதனை எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமையும் தமிழிசை விழா மறுநாள் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக் கலையரங்கில் இடம்பெறவுள்ளன. (ஒ-152)

## குப்பை கொட்ட வந்த பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு!

அச்சுவேலி,மார்ச்6

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குப்பை கொட்ட வீட்டுக்கு வெளியே வந்த பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை திருநெல்வேலி, தாளையாய் ஒழுங்கையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது வீட்டைத் துப்பரவு செய்து விட்டு கழிவுப்பொருள்களைக் கொட்டுவதற்கு வீட்டுக்கு வெளியே வந்த பெண்ணின் சங்கிலியே இவ்வாறு அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஒ-10-11-ரி)

# அரியாலையில் மீட்ட எலும்புக்கூட்டுடன் பெண்ணின் உள்ளாடைகள் இருந்தன!

## 'ஹலோ ட்ரஸ்ற்' பணியாளர் வாக்குமூலம்

யாழ்ப்பாணம்,மார்ச்6

அரியாலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு தொடர்பாக 'ஹலோ ட்ரஸ்ற்' ஊழியரின் வாக்குமூலம் யாழ். நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அரியாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனத்தின் பணியாளர்கள் கடந்த புதன்கிழமை அப்பகுதியிலுள்ள கைவிடப்பட்டிருந்த இராணுவக்காவலரண் ஒன்றிலிருந்து எலும்புக்கூடு ஒன்றை மீட்டனர்.

இது தொடர்பாகக் கோப்பாய் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், எலும்புக்கூடு மீட்கப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மிதிவெடி அகற்றும் பணியாளரின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எலும்புக்கூட்டுடன் விடுதலைப் புலிகளின் இராணுவச் சீருடையும், பெண்கள் அணியும் மேல் உள்ளாடைகளும் காணப்பட்டதாக அவர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்ட பகுதியில் கண்ணிவெடி கள் முற்றாக அகற்றப்படாமையால் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5-ரி)

# மாநகரசபை எல்லைக்குள் உள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் திகதி, நிலையம், நேரம் பற்றிய விவரங்கள் வருமாறு:

அரியாலைப் பகுதியில் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் 11மணிக்கு காந்தி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணிக்குத் திருமகள் சனசமூக நிலையத்திலும் -

10ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்திலும், 11மணிக்கு நாயன்மார்கட்டு சித்த மருத்துவ நிலையத்திலும், பிற்பகல் 2மணிக்கு கலைவாணி சனசமூக நிலையத்திலும் -

11ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பெனிரி கோஸ்ரல் சேர்ச் நிலையத்திலும் 11மணிக்கு சென். பெனடிக்ற் வித்தியாலயத்திலும் -

அதேநாள் பெரியகடை பகுதியில் உள்ள முத்தமிழ் பாலர் பாடசாலையில் வைத்து பிற்பகல் 2 மணிக்கும் - தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

பெரியகடை மற்றும் நாவாந்துறைப் பகுதியில் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 8.30மணிக்கு சன்மார்க்க சனசமூக நிலையத்திலும், 11மணிக்கு கொட்டடி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2மணிக்கு மிருக வைத்திய நிலையத்திலும் -

17ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அண்ணா சனசமூக நிலையத்திலும், 11மணிக்கு சென்.றீக்லஸ் நிலையத்திலும், பிற்பகல் 2மணிக்கு அறிவொளி சனசமூக நிலையத்திலும் -

18ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பேருந்து பாலர் பாடசாலையிலும், 11மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் பிற்பகல் 2மணிக்கு ஓ.எஸ்.ஆர்.அருகிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ஒ-6)

"கலையின்பமே நிலையின்பமாம்"

இசைச் சிகரத்தை நோக்கிய பயணத்தில்

'துளிகள்'

இசைத்தட்டு (CD) மற்றும் ஒலிப்பதிவு நாடா

அறிமுக விழா

கலாசூடாமணி
சண்முகராகவனின் புதல்வர்கள்
ச.ஸ்ரீபிருந்தன்
ச.ஸ்ரீஜெயந்தன்
ச.ஸ்ரீவிஜிந்தன்
செல்வி காந்தினி சண்முகராகவன்

இசை: ஸ்ரீபிருந்தன | பாடல்கள்: மர்கும் -ஸ்ரீவிஜிந்தன

இடம்: இளங்கலைஞர் மன்றம, சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம்: இன்று (06.03.2004) சனிக்கிழமை
நேரம்: மாலை 04.01 மணி
அனுமதி இலவசம்

நிகழ்ச்சித் தொகுப்பு:A.R.V.லோஷன்
(சிரேஷ்ட அறிவிப்பாளர், சூரியன் F.M.)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(34-21-12-17) (29305)

## விற்பனைக்கு

(1) Wheel Chair ஒரு சில நாள்கள் மட்டும் பாவிக்கப்பட்டதும் மடித்து எடுத்துச் செல்லக் கூடியதும்.
(2) தேக்கு அலுமாரி -
6'x6'x18" தேக்கம் பலகையால் ஆனதும் மிகவும் சிறந்த பாவனையில் உள்ளதும் 50வருட பழைமை கொண்டதும்
(3) BELLING (COMPACT AUTO DELUX) ELECTRIC COOKER, 4 BURNERS with OVEN நல்ல நிலையில் உள்ளது.

தொடர்பு: (சனி, ஞாயிறு மட்டும்)
எஸ்.திசைவீரசிங்கம்,
சுதுமலை மத்தி (மதவடி). மானிப்பாய்.
(29301) (26-21-17-12)

பாலைதீவு புனித அந்தோனியார்
## திருத்தல திருவிழா - 2004

திருவிழா வருகின்ற 14. 03. 2004
ஞாயிறு காலை 7.00 மணிக்கு இடம்பெறும்.
*திரிதின வழிபாடுகள்*
11ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும்
பரிபாலகர்
புனித அந்தோனியார் ஆலயம், பாலைதீவு.
(29295)(21-17-12)

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச்6

யாழ்.பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். நண்பகல் நாராயண சேவை இடம்பெறும்.

(ஐ)

## கசிப்பு வழக்கில் இரண்டு பேருக்கு 9 மாதக் கடூழியம்!

யாழ்ப்பாணம்,மார்ச்6

கசிப்பு வழக்கில் குற்றம் சுமத்தப பட்ட இருவருக்கு யாழ்.நீதிமன்றம் 9 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கசிப்பு உற்பத்தி செய்தமை, 202.5 லீற்றர் 'கசிப்பு வைத்திருந்தமை மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் மீது யாழ்.நீதிமன்றில் 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதில் முதலாவது சந்தேகநபர் மட்டுமே கைதாகியிருந்தார். அதனால் இரண்டாவது சந்தேகநபர் இல்லாமலேயே யாழ்நீதிமன்றததில் விசாரணை இடம்பெற்றது.

யாழ்நீதிமன்ற நீதிவான் இதவிக்னராஜா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முதலாவது சந்தேக நபர் குற்றத்தை ஒபபுக்கொண்டார். இதனை அடுத்து சநதேகநபர்கள் இருவருக்கும் தலா 9மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன் தலா 45ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட அபராதத் தொகையைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒருவருடம் கடூழியச் சிறைத தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் நீதிவான் குறிப்பிட்டுள்ளார். தலைமறைவாகியுள்ள இரண்டாவது எதிரிக்கு எதிராக பகிரங்கப் பிடியாணையும் பிறப்பிக்கப் பட்டது.

(ஒ-5-ரி)

வார்ஷீக காயத்ரீ ஜெப ஹோமப் பெருவிழா
இணுவில் காயத்ரீ பீடம் - தர்மசாஸ்தா குருகுலம்

07.03.2004 ஞாயிற்றுக்கிழமை
காலை 7மணிக்கு விழா ஆரம்பமாகி
10மணிக்குப் பட்டமளிப்பு நடைபெறும்.

விப்ரபூஜை

பிரம்மஸ்ரீ வா.பாலசுப்பிரமணியக் குருக்கள் - பிள்ளையார் கோயில், சங்குவேலி.
பிரம்மஸ்ரீ ஆ.சோமசுந்தரக் குருக்கள - பிள்ளையார் கோயில், நீர்வேலி.
பிரம்மஸ்ரீ இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் - வீரபத்திரர் கோயில், கோப்பாய்.

பட்டமளிப்பு

'சிவாகம கிரியா தத்வநிதி'

பட்டம் பெறுபவர்கள்:
பிரம்மஸ்ரீ சதாசிவசுகுமாரக் குருக்கள - கல்வியங்காடு
பிரம்மஸ்ரீ கு.இரத்தினேஸ்வரக் குருக்கள் - கிளிநொச்சி
பிரம்மஸ்ரீ உ.அபராஜிதக் குருக்கள் - இணுவில்
(சி-33599) (26-12-17-21)

குருகுல ஆசிரியர் இல்லக் கையளிப்பு

திருகோணமலை பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தானத்தினால் நிர்மாணிக்கப்பட்ட தர்மசாஸ்தா
குருகுல ஆசிரியர் இல்லத்தை
மேற்படி தேவஸ்தான ஆதீனகர்த்தா
பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள்
உத்தியோகபூர்வமாக
பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்களிடம்
நாளை (07.03~2004) ஞாயிற்றுக்கிழமை கையளிப்பார்.
விப்ர சிரேஷ்டர்கள் அனைவரும் வருகை தருக
'சர்வசாதக ரத்னாகர',
சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்
(சி-33600)
(26-21-12-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாலர் கல்விக் கழகத்தின்கீழ் இயங்கும் அரசடி ஞானக்குழந்தை இல்ல ஆசிரியை
திருமதி கேதாரபூரணி - ஞானகாந்தன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மகேஸ்வரி குமாரவேலு

அவர்கள் கடந்த 03-03-2004 அன்று சிவபதமடைந்ததையிட்டு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்

பாலர் கல்விக்கழக உறுப்பினர்கள்,
ஆசிரியர்கள்.
49/5, யாழ்.றோட்,
யாழ்ப்பாணம்.
(29284)(21-12-17)

கோபால் பல்பொடி மற்றும் அஞ்சால் அலுப்பு மருந்து
கம்பெனியார் வழங்கும்




வியாபாரிகளுக்கான மாபெரும்
இலவச சலுகை!







01-03-2004 முதல் → இலவசம்

100 பாக்கெட் கோபால் பல்பொடி அல்லது 100 பாக்கெட் அஞ்சால் அலுப்பு மருந்து வாங்குபவர்களுக்கு — ஒரு அழகிய எவர்சில்வர் டம்ளர்

200 பாக்கெட் கோபால் பல்பொடி அல்லது 200 பாக்கெட் அஞ்சால் அலுப்பு மருந்து வாங்குபவர்களுக்கு — ஒரு அழகிய பிளாஸ்டிக் பாக்ஸ்

2500 பாக்கெட் கோபால் பல்பொடி அல்லது 2500 பாக்கெட் அஞ்சால் அலுப்பு மருந்து வாங்குபவர்களுக்கு — அழகிய எவசில்வர் டம்ளர்ககள் அல்லது அழகிய பிளாஸ்டிக் பாக்ஸ்கள் உடன் ஒரு சுவர்கடிகாரம்

எங்களது கோபால் பல்பொடி, கோபால் டூத்பேஸ்ட், கோபால் அப்பளம் S.P.S. முத்து மருந்து ஜெட் பல்பொடி ஆகியவற்றை வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்

லங்கா கோபால் கம்பனி LG. பீப்பள்ஸ் பாக் கொம்பிளக்ஸ் (புறக்கோட்டை)
கொழும்பு— 11. தொ. பே: 2 389119.

குறிப்பு இச்சலுகை கோபால் பல்பொடி மற்றும் அஞ்சல் அலுப்பு மருந்து வாங்கும் வியாபாரிகளுக்கு மட்டும்

## மரண அறிவித்தல்

### சிவலை அரியகுட்டி

(புத்தூர் கிராமசபையின் முன்னாள் உபதலைவர்)



மணற்பகுதி ஆவரங்காலைச் சேர்ந்த சிவலை அரியகுட்டி அவர்கள் 04.03.2004 வியாழக்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலை - வள்ளி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரவன் (விசும்பன்)- குழந்தை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும் பரஞ்சோதி J.P. (குட்வில கொம்-யாழ்ப்பாணம்), சந்திரவதனி, சந்திரவிம்பம், சந்திரதேவி (சுவிஸ்), பஞ்சமூர்த்தி (U.K.), பரமலிங்கம் (ஆசிரியர்), சந்திரலேகா, பவானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அடைக்கலம் லீனா (தாதி உத்தியோகத்தர்) மற்றும் பபிநாயகி, அருந்தவம், தங்கராசா, செல்வயோகநாதன் (சுவிஸ்), நிர்மலா (U.K.), கௌரி, மகாத்மராசா, சாந்தினி ஆகியோரின் அருமை மாமனும் நர்மதா (திறந்த பல்கலைக்கழகம்), தார்மீகன்(யாழ்.பல்கலை.), கோபிநாத் (சுவிஸ்), கஸ்தூரி, கோபிகீதன் (சுவிஸ்), கீர்த்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), பூங்கோதை (யாழ். இந்துமகளிர்), காயத்திரி (சுவிஸ்), கௌதமி (திருக்குடும்ப கன்னியர்மடம்), எழிலினி (U.K.), சாதுரியன், சுருதினி (U.K.) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2004) சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

தகவல்:
அ.பரஞ்சோதி J.P.
(குட்வில் - யாழ்ப்பாண்ம்).

*மணற்பகுதி,*
*ஆவரங்கால் கிழக்கு.*
(29291)(34-21-12-17)

ஏழைச் சிறுவரை வாழவைக்க
ஓர் அரிய சந்தர்ப்பம்!
கண்காட்சியின் போது
அரும்புகளுக்கு உதவுவீர்.

யாழ்.மருத்துவ மாணவர் ஒன்றியம்
(C/33913) (41-11-19)

## புதிய களஞ்சியம் இடம் மாற்றம்

gtz

இதுவரை காலமும் இனுவிலில் இயங்கி வந்த ஜி.ரி.இசட் வட புனரமைப்புத் திட்டக் களஞ்சியம், 1.3.2004 முதல் மீளமைப்புக்கான ஜேர்மன் வங்கியின் (K.F.W) நிதி உதவியுடன் அண்மையில் மறுசீரமைக்கப்பட்ட அரச களஞ்சியத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலோசகர் ஜி.ரி.இசற் - வடபுனரமைப்புத் திட்டம்.

(சி-33919)(36-16-18)



## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் இருந்து இராசபாதை ஊடாக யாழ்ப்பாணம் வரும் வழி இல.986. பேருந்தில் Samsunk T.108 கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறி விட்டது கண்டெடுத்தவர்கள்

பு.லெனின்குமார்
28. சென்பெனடிக் றோட்.
நல்லூர். யாழ்ப்பாணம் எனும்
முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.P.:222 6873
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(29346)(36)


## முதலாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 17 - 07 - 1949

மறைவு 05 - 02 - 2004

### அமரர் கந்தையா வடிவேலு
(பூராசா)

நாளை (07.03.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அம்மன் வீதி,*
*பண்டத்தரிப்பு.* (29342)(37-18)

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், மைத்துனர்கள்.


## உத்தரவாதத்துடன்



அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
IBM
COMPAQ
DELL
(Used Computer)
கணனிகள்
ரூ15000 லிருந்து

1 YEAR

மேலதிக விபரங்களிற்கு
STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674


## 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இரத்தினம் ஸ்ரீகாந்தன்
(முன்னாள் தொலைத்தொடர்பு பரிசோதகர்)

கண்ணா கண்ணா என்று
அழைத்தேன் காயமே பொய் என
உணர்த்த வைத்தீர்
மாதவா, நேயவா, மதுசூதனா
ஜெய் சாயிராம்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

திருமதி சிசிவமலர் (மனைவி).

(29347)(38-18)

## கண்ணீர் அஞ்சலி



வரணி இயற்றாலை விவசாய
சம்மேளன முன்னாள் தலைவரும்
தற்போதைய உப தலைவருமாகிய

### கணபதி வேலுப்பிள்ளை

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

வரணி இயற்றாலை,
விவசாய சம்மேளனம்.

(33927)(39-16-18-36)


## யாழ். மண்ணில் அழகுக்கலை நிபுணர் டாக்டர் திருமதி பிரபாரெட்டி

யாழ். மண்ணில் முதன்முறையாக இந்தியாவின் பிரபல்யம் வாய்ந்த Praba's Institute of Beauty Theraphy & Health Care Management நிறுவனத்தின் இயக்குநராகிய டாக்டர் திருமதி பிரபாரெட்டி

(M.A., M.S, MB.BS.), (World Diploma in Hair Colouring in France), (Cinema Secrate in London) அவர்களும் அவரது குழுவினரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்கள்.

★★★ இவர்கள் நடத்த இருக்கும் அழகுக் கலை பற்றிய பயிற்சிகள் அனைத்தும் இன்று காலை 9 மணிக்கு (புதிய நேரம்) ஆரம்பமாகின்றன.



பயிற்சிகள் அனைத்தும் நடைபெறும்

*இடம்:-* Y.M.C.A கட்டடம் (கச்சேரி முன்பாக)
இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

*காலம்:-* 06.03.2004 சனிக்கிழமை

*நேரம்:-* காலை 9.00 மணிதொடக்கம் மாலை 5.00 மணிவரை
(மதியபோசனம் வழங்கப்படும்)

★★★ இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றும் அனைவருக்கும் டாக்டர் திருமதி பிரபாரெட்டி அவர்களால் பெறுமதிமிக்க உங்கள் புகைப்படம் பொறிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு :- இன்றைய தினம் மேற்படி பயிற்சி வகுப்பில் இணைய விரும்புவோர் 9 மணிக்கு முன்னர் Y.M.C.A. கட்டடம் (கச்சேரி முன்பாக) வந்து ரூ.6000 ஐக் கட்டணமாகச் செலுத்திப் பயிற்சி வகுப்பில் இணைந்து கொள்ளலாம்.

★★★ இன்று யாழோசை விளம்பரத்துக்கு அருகில் உள்ள எங்கள் காரியாலயம் மூடப்பட்டிருக்கும். " இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்"

தொலைபேசி : 071 - 2346781, 077 - 6070531.

(29337)(36-16-18)


## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு கந்தசாமி



யாழ்ப்பாணம், நல்லூர் புலவனார் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு கந்தசாமி அவர்கள் 27.02.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு முத்துப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் அன்னபூரணம் (அன்னக்கிளி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும் அருள்நாயகம், செல்வநாயகி, மகேந்திரன், கருணாகரன், நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.03.2004) ஞாயிறு காலை 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவனார் வீதி,*
*நல்லூர்.* (29332)(39-16-18)

தகவல்
பிள்ளைகள்.

### கதிரவேலு சாம்பசிவம்

மாரீசன்கூடல், இளவாலையைச் சேர்ந்த கதிரவேலு சாம்பசிவம் அவர்கள் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லட்சுமணன் (மலேசியா), காலஞ்சென்ற சரவணமுத்து (மலேசியா), காலஞ்சென்ற சின்னக்கண்டு (மலேசியா), காலஞ்சென்ற குலசிங்கம், திருமதி சி.சிவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி வி.சிறீபத்மாவதி, சா.சற்குணராசா, சா.நித்தியானந்தம், பாமினி, காலஞ்சென்ற சுதர்ணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் க.விக்னேஸ்வரராசா, திருமதி சற்குணராசா, கேதீஸ்வரன், பவதாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ச.சுந்தரலிங்கம் (M.L.T. - திருகோணமலை), சா.சிவலிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2004) சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாரீசன்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரீசன்கூடல்,*
*இளவாலை.* (29340) (38-16-18)

தகவல்:
திருமதி சி.விக்னேஸ்வரராசா.

### இளையதம்பி செல்வரத்தினம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்வரத்தினம் 05.03.2004 வெள்ளிக்கிழமை அதிகாலை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் திருமதி செ.இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வகுமார், நந்தகுமார்(ஜேர்மனி), யோககுமார், நந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிககப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தானை வீதி,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*(29333)(36-16-17)

தகவல்:
கு.பாலசுப்பிரமணியம்(மைத்துனர்),
கு.மகாலிங்கம் (ஆசிரியர் - மைத்துனர்),
இ.சிவசுப்பிரமணியம் (சகோதரன்).


SHARP
be sharp

தமிழ்ப் புத்தாண்டுக்கான
மாபெரும் சிறப்புத்
தள்ளுபடி விற்பனை.......

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஷார்ப் (SHARP) இலத்திரனியல் பொருள்களான ரீ.வி, டெக், குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள், பிரதியெடுக்கும் இயந்திரம் (SHARP PHOTO COPIER) இன்னும் உங்களுக்குத் தேவையான பலவகையான இலத்திரனியல் சாதனங்களை உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையில் யாழ். நகரில் பெற்றுக்கொள்ள....

பிறவுண் அன்ட் கம்பனி
பிறவுண்ஸ் காட்சியறை
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 222 5150

(சி-33921)(36-16-18)

# 'வீரர்களின் போர்' நேற்று ஆரம்பம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான "வீரர்களின் போர்" கிரிக்கெட் போட்டி நேற்றுப பிற்பகல் 2 மணியளவில் ஸ்கந்தா மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணி ஆட்ட நேர முடிவின் போது - 65 ஓவர்களில் - 3 விக்கெட்டுககளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.


அந்த அணியின் சார்பாக த.மயூரன் 31 ஓட்டங்களையும் தே.ரஜீவ், ப.ஜீவசங்கர் ஆகியோர் தலா 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பா.அர்ச்சுதன் 42 ஓட்டங்களுடனும், ப.ரவிசங்கர் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

ஸகந்தா அணி சார்பாக எஸ்.சுஜீவன் 2 விக்கெட்டுக்களையும், எச்.கிருஷ்ணசந்திரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

(ம-4-ரி)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான 'வீரர்களின் போர்' கிரிக்கெட் போட்டி நேற்று ஆரம்பமானது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் சிறப்பு விருந்தினர்கள் சுன்னாகம் கொமர்ஷல் வங்கியிலிருந்து மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து கிரிக்கெட் வீரர்களை சிறப்பு விருந்தினர்களுக்கு அறிமுகஞ் செய்துவைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இன்றும் ஆட்டம் தொடர்ந்து இடம்பெறும்.

(படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## புலிகள் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. வாக்காளர்கள் தடுக்கப்பட்டது தவறு, சட்டவிரோதம், மனித உரிமை மீறல் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இராணுவத் தளபதி தண்டப்பணம் செலுத்தவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

படையினர் அப்படிப் பாடம் படித்தால் இம்முறை வாக்காளர்களைத் தாம் அனுமதிக்கப்போவதாக கூறினாலும் எல்லோரையும் உரிய காலத்தில் சென்று வாக்களிக்க விடுவது சாத்தியமாகுமா என்ற கேள்வி எழுகின்றது.

புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் 2லட்சத்து 50 ஆயிரத்துக்குக்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் படையினர் தங்கள் சோதனை நிலையங்களில் சல்லடைபோட்டு குறிப்பிட்ட வாக்களிப்பு நேரத்துக்குள் உள்ளே அனுப்ப முடியுமா?

நிச்சயமாக பலர் சோதனை நிலையங்களில் காத்து நின்றுவிட்டு வாக்களிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்ப நேரிடும்.

இவற்றையெல்லாம் தவிர்த்து தமது சொந்த இடத்தில் வாக்களிக்கும் தமது ஜனநாயக உரிமையை அனுபவிப்பதற்கே முன்னெச்சரிக்கையாகப் புலிகள்பகுதி வாக்காளர்கள் நதிமன்றத்தில் நேரகாலத்தோடு வழக்குத் தாக்கல் செய்ய ஆயத்தமாகி வருகிறார்கள்.

எந்தக் காரணம் கொண்டும் ஒருவரின் ஜனநாயக உரிமையைத் தேர்தல் ஆணையாளரோ, அரசோ, வேறு எவருமோ மீறுவதற்கு சட்டத்தில் இடமில்லை. அதற்கு நீதிமன்றமும் துணைபோகாது என்று சட்டத்தரணிகள் தம்மைச் சந்தித்த புலிகள் பகுதி வாக்காளர்களுக்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

(ம-க)

## நெருக்கடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இன்று காலை 10 மணிக்குச் செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கின்றது. அதில சில முக்கியமான முடிவுகளை புலிகளின் தலைமை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கில் கேணல் கருணாவுக்கு அடுத்த மட்டத்தில் உள்ள அனைத்துப் பொறுப்பாளர்களும் தளபதிகளும் உடனடியாக வன்னிக்குத் திரும்பி தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து, அவருக்குத் தமது விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள் என புலிகளின் வன்னி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கிழக்கில் புலிகளின் பிரதேசத்தில் ஒழுங்கு நிலைமையை விரைவில் தலைவர் பிரபாகரன் தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடுவார் என்றும் -

குழப்ப நிலைமை நின்று நீடித்துத் தாக்குப்பிடிக்காது என்றும் -

கிழக்கு நிலைமை குறித்துத் தெளிவாகவும், உறுதியாகவும் தலைவர் திடமான முடிவுகளை எடுத்துச் செயற்படுவார் என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ம-க)

## வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் வந்து தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடமுடியாது. துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், சுவரொட்டிகள் ஒட்டுவது போன்ற அனைத்து வேலைகளுக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளமாட்டார்கள் என்பது போன்ற அம்சங்கள் அத்தீர்மானத்தில் அடங்கியிருக்கின்றன.

அதேவேளை, இறக்காமத்திற்கு வருகை தரும் வேட்பாளர்கள் பள்ளிவாசல்களுக்கு நேரடியாக வந்து அதன் முக்கியஸ்தர்களையே சந்திக்கவேண்டும். மக்களைச் சந்தித்து வாக்குகள் சேகரிக்கக் கூடாது என பள்ளி வாசல்கள் சம்மேளனம் கண்டிப்பான அறிவித்தல் ஒன்றை விடுத்திருக்கின்றது.

இதனை மீறி நேரடியாக மக்களைச் சந்திப்பதற்காக அங்கு சென்ற வேட்பாளர்கள் சிலர் திருப்பி அனுப்பப்பட்டனர். அதில் இருவர் முன்னாள் எம்.பிக்களாவர். அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களான சட்டத்தரணி எஸ்.நிஜாமுதீன், வை.எல்.எஸ்.ஹமீத், பைஸால் காஸிம் ஆகியோர் இறக்காமம் சென்று பள்ளி வாசல் முக்கியஸ்தர்களைச் சந்தித்து எல்லைப் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடினர்.

(ம-க)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பொலீஸார் தவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நேரடியாக பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் மக்களின் உணர்வுகளையோ, போராளிகளின் உணர்வுகளையோ, புரிந்துகொள்ள முடியாது. இதைவிட பெரிய விடயம் நிலப்பிரதேசம் பற்றிய அறிவாகும். இதுவும் தமிழீழத்துறைப் பொறுப்பாளர்களுக்கு அறவே தெரியாது.

இவ்வாறு இருக்கும்போது இவர்களால் எவ்வாறு இங்கு நிர்வாகம் செய்யமுடியும்? இதைவிட வேதனையான விடயம் இவ்வளவு தமிழீழ நிர்வாகத்துறைப் பொறுப்பாளர்களும் கிளிநொச்சி நகரில் சொகுசு வாகனங்களில் உலாவரும்போது 400இற்கும் மேற்பட்ட மட்டக்களப்பு, அம்பாறையைச் சேர்ந்த ஜெயந்தன் படைப் போராளிகள் பளை காவலரண்களிலேயே சென்றி பார்க்கிறார்கள் இது எந்தவகையில் நீதியாகும்?

இந்த அமைதியான காலங்களில் எந்தவொரு வீரனும் தனது சொந்த இடத்தில் இருப்பதையும் தனது உறவுகளோடு இருப்பதையுமே விரும்புவான். இதைப்பற்றி அங்குள்ள பொறுப்பாளர்கள் எவராவது சிந்திக்கின்றார்களா? இன்று இந்த வாய்ப்பான காலத்தில் அநதப் போராளிகள் எதுவித வளர்ச்சியும் அற்ற நிலையில் காவல் அரண்களிலேயே முடக்கப்பட்டுக் கிடக்கின்றார்கள். இனி ஒருபோதும் இங்கிருந்து படை நகர்த்துவதையோ, இங்குள்ள வீரர்கள் அங்கு வந்து மடிவதையோ, இங்குள்ள பெற்றோர்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். இதனை நீங்களும் நன்கு அறிவீர்கள். என்னைப் பொறுத்தவரையில் இதுவரை காலமும் வடதமிழீழ மக்களுக்காக விலைமதிக்கமுடியாத உயிர்களையும் கொடுத்துத் திருப்திகரமாக கடமை செய்துள்ளதாகவே உணர்கின்றேன். தற்போதுள்ள இந்த வாய்ப்பான காலகட்டத்தில் தென் தமிழீழ மக்களுக்காக கடமை செய்வதையே விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இந்த மக்களுக்காக இங்கு போரிட்டு இவர்களின் காலடியில் மடிவதையே எனது இறுதி இலட்சியமாக கொண்டுள்ளேன். இந்த விடயத்தில் எவரும் குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை.

தமிழீழத்துறைப் பொறுப்பாளர்களைத் தவிர்த்து நேரடியாக உங்களின் கீழ் சுதந்திரமாக இங்கு பணியாற்றுவதையே விரும்புகின்றேன். இதனால்தான் புலனாய்வுத்துறையையும் நிறுத்தியுள்ளேன்.

நாங்கள் உங்களைவிட்டு பிரிந்து செல்லவோ, உங்களை வெறுக்கவோ இல்லை. மாறாக உங்களை எங்களின் கடவுளாகவே பார்க்கின்றோம். சில வேளைகளில், இந்த முடிவு உங்களுகசு ஆத்திரத்தை ஏற்படுத்தலாம். இதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன். ஏனெனில், இங்குள்ள மக்களினதும், போராளிகளினதும் உணர்வுகளுக்கு மதிப்பளியாமல் அவர்களின் அபிலாஷைகளை உங்களுக்கு சுட்டிக்காட்டாமல் இருந்த வரலாற்றுத் தவறை நான் விட விரும்பவில்லை. இதனால் தான் இம்முறை உங்களுக்கு இதைத் தெளிவாக உணர்த்துகிறேன். இங்குள்ள மக்களை நீங்கள் நேசித்தால், இங்குள்ள போராளிகள், பொறுப்பாளர்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் எங்களை உங்கள் தலைமையின் கீழ் நேரடியாக, சுதந்திரமாகச் செயற்படவிடுங்கள்.

இப்படிக்கு
மட்டு-அம்பாறைப். பொறுப்பாளர்.


**CISCO NETWOKING ACADEMY**

**CCNA COURSE**

CCNA பாடநெறியானது எதிர்வரும் புதன் கிழமை (10.03.04) அன்று ஆரம்பமாகவுள்ளது. இதற்கு முன்பாக உங்கள் பதிவுளை மேற்கொள்ளவும்.

இணையத் தொடர்பினை மேற்கொள்ள விரும்புவர்கள் புதிய அங்கத்தவர்களாக இணைந்துகொள்ளலாம்.

THE BARBARA MULVANEY
Computer Training Centre
T.P:-222 - 5971



**"யாழ். மண்ணில் அழகுக்கலை நிபுணர் டாக்டர் திருமதி பிரபாரெட்டி"**



யாழ். மண்ணில் முதன்முறையாக இந்தியாவின் பிரபல்யம் வாய்ந்த Praba's Institute of Beauty Treraphy & Health care management. நிறுவனத்தின் இயக்குநராகிய டாக்டர் திருமதி பிரபாரெட்டி (M.A.,M.S.MB.BS) (World Diploma in hair colouring in France), (Cinema Secrate in London) அவர்களும் அவரது குழுவினரும யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துளளார்கள்.

முழு விவரம் உள்ளே பக்கம் 17இல்

(29338)(39-18-36)







## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கஐயர் சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்

(பிரதமகுரு-கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம்)



அளவெட்டி, கும்பழாவளையைப் பிறப்பிடமாகவும வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கஐயர் சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்கள் நேற்று (05.03.2004) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்,*
*அளவெட்டி.*

தகவல்:
மனைவி,மக்கள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்.

(29348) (38-18-36)

### சிவகுரு பரமசிவம் (மெக்கானிக் சிவம்)



கேணியடி, குப்பிளானைச் சேர்ந்த சி.பரமசிவம் (03.03.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் தவமணி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மஞானம் (சிறுப்பிட்டி), பத்மராசா(டென்மார்க்), புஷ்பமாலா, பிறேமா (குப்பிளான்), செவ்வந்தி. பத்மரஞ்சன், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா, டஸ்மலா, பாலசுப்பிரமணியம், உதயகுமார், தீபகலா, கிரிஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2004) ஞாயிறு காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகரம்பை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கேணியடி,*
*குப்பிளான்.*

(29349)(36-18-16)

தகவல்:
கோ.ஸ்ரீஸ்கந்தராஜா
(மருமகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.